
முரசொலி
ாங்கல் மலர் 1963
ஆசிரியர்
மு. கருணாநிதி
கே. மாதவன்
விலை 1-6

# நம்பிக்கைப் பொங்கல்





இல்லத்திலே இன்பம் பொங்க, இதயத்திலே மகிழ்வு பொங்க, கண்களிலே நம்பிக்கை பொங்க, கருத்தினிலே இனிமை பொங்க, களிப்பினிலே சின்னஞ்சிறு செல்வ மதலையர் நீந்த, ஆற்றும் கடமையிலே உறுதி பொங்க, புத்தாடை உடுத்தி, புதுப்பானை எடுத்து, பூக்கோலம் போட்டு, பூரிப்புக் கொஞ்ச, புத்தரிசி யிட்டு புன்னகை விரவிட, புத்தொளி பரவிட, களத்திலே விளைந்த கன்னலும் செந்நெலும், கனிகளும், கவின்மிகு மலர்களும், மஞ்சளும் இஞ்சியும் எங்கும் நிறைந்திட, அன்பொடு அன்னையர் குலம் ஆக்கி அளிக்கும் அருமைப் பொங்கல் வந்தது.

பொங்கல் அறுவடைத் திருநாள், அருமையாகத் திட்டமிடப்பட்ட வேளாண்மையின் விளைவு, அயராது பாடுபட்ட உழைப்பால் விளைந்த உறுபயன், சிந்திய வியர்வை தந்ததோர் நற்பலன். இன்று இதயத்திலே பொங்கும் நம்பிக்கை என்றும் நின்று நிலவட்டும். அதற்குத் துணை நிற்கின்றது ஆயுள் இன்சூரன்சு.

உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் இனிமையான எதிர்காலத்திற்காக இன்றே திட்டமிடுவீர். உங்கள் தேவை எதுவென்றாலும், எந்தச் சூழ்நிலைக்காயினும் ஏற்றமிகு திட்டங்கள் எத்தனையோ உண்டு ஆயுள் இன்சூரன்சில்.

**நீங்கள் இன்ஷ்யூர் செய்யும் நன்னாளே**
**நீங்கள் பாதுகாப்புப் பெறும் பொன்னாளாம்**

EP.SZ.LIC.

கலைஞர் மு. க. வின்

கருத்துக் குவியல்

| | |
|---|---|
| உதயசூரியன் | 1–50 |
| மணிமகுடம் | 1–75 |
| குறளோவியம் | 1–25 |
| தேனலைகள் | 1–50 |
| சிறு கதைகள் | 1–50 |

முரசொலி மாறன் M.A. தீட்டிய

நாளை நமதே

விலை 1—50 (புதிய வெளியீடு)

ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்

விலை 1—50

(விற்பனையாளர்களுக்கு 25 சதவிகிதம் கழிவு உண்டு)

விபரங்களுக்கு

முத்துவேல் பதிப்பகம்

த. பெ. எண் 719. சென்னை-6,



அஞ்சுகம் பதிப்பகத்திற்காக ஆசிரியர் மு. கருணாநிதியால் "முரசொலி" அச்சகத்தில் 4-128 மவுண்ட்ரோடு சென்னை-6ல் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. துணை ஆசிரியர் மாறன் எம். ஏ.

# பொங்கல் வாழ்த்து



தமிழர் இல்லங்களிலெல்லாம் பால் பொங்க,
உள்ளமெல்லாம் மகிழ்ச்சி பொங்க,
பொங்கலோ பொங்கல்' என்று மகிழ்ச்சிக்குரலிடும்
– இந்த நன்னாளிலே – எங்களுக்கு ஊக்கமூட்டி
அன்பும் ஆதரவும் காட்டும் ரசிகப் பெருமக்களுக்கும்,
ஆதரவளித்துவரும் பட அதிபர்களுக்கும்
எங்கள் உளங்கனிந்த பொங்கல்
வாழ்த்துக்கள்

ஜெமினி கணேஷ்
சாவித்திரி கணேஷ்

SANTHI S.A.

# பொங்கல் வாழ்த்து



தமிழர் திருநாளாம் இந்தப் பொங்கல் நன்னாளில்,
எனக்கு ஊக்கமூட்டி அன்பும் ஆதரவும் காட்டும்
ரசிகப் பெருமக்களுக்கும், ஆதரவளித்து வரும்
கலைத்துறை சம்பந்தப்பட்ட அனைவருக்கும்
எனது உளங்கனிந்த நன்றியும் வாழ்த்துக்களும்

தேவிகா

S.A. SANTHI

1963


செங்கரும்புத் தமிழருக்

# பொங்கல் வாழ்த்து



Aykan

# அய்க்கன்

## கமர்ஷியல் ஆர்ட்டிஸ்ட்

உரிமையாளர்:

**ராஜேந்திரன் பிராசஸ்**

**பிளாக் தயாரிப்பாளர்கள்**

242, தம்பு செட்டி தெரு, சென்னை-1.

# பொங்கல் புதுநாளில் எங்களது நல்வாழ்த்துக்கள்

★

மகளிர் விரும்பும் மனம்கவர் பட்டாடைகளுக்கும், உத்திரவாதமுள்ள உயர் ரக காஞ்சிபுரம் – பனாரஸ்-பெங்களூர்–ஆரணி கைத்தறி சேலைகளுக்கும் உகந்த இடம்

## S. R. B. குப்புசாமி ஐயர் & சன்

**குறைந்த விலை** **உயர்ந்த ரகம்**

★

117, நைனியப்ப நாய்க்கன் தெரு,
சென்னை

தந்தி:– 'RENOWN'
தொலைபேசி:- 32206

230, கீழமாரட் வீதி,
மதுரை

தந்தி:–'YESAREIKAY'
தொலைபேசி:- 36



14-1-62

செழுமை மிகு நாட்டினில் செங்நெல் குவித்து, எழுந்துவரும உதய சூரியனை இன்முகத்தோடு வரவேற்று, இல்லந்தோறும் இன்பகீதம எழுபபிடும் இன்னாளில், இன்பத் திருவிடத்து அனபர் அனைவருக்கும் என் உளம் நிறைந்த வாழததுக்களும் வணக்கங்களும உரித்தாகுக!

உலகுக்கே உணவளிக்கும உழவர்தம் திருநாளில், உழைப்பும உண்மையும் ஒரு சேர வெற்றி முரசு கொட்டிடும் நன்னாளில், இன்பம் தழைத்திட, இனம செழித்திட, நீதி நிலைத்திட இன்னாள் இன்பத் திராவிடத்திற்கோர் நல்ல சகாப்தத்தின் முன்னோடியாய்த் திகழட்டுமென விழைகிறேன்

வாழ்க திராவிடம்!
வெல்க உதய சூரியன்!

அன்பன்
எம். ஜி. ராமச்சந்திரன்




வாடிக்கைக்காரர்களுக்கும் நண்பர்களுக்கும்
எமது உளங்கனிந்த
புத்தாண்டு வாழ்த்து உரித்தாகுக!

# ஆர். எம். கனகசபாபதி

(டீலர்ஸ் இன் பர்மாஷெல்ஸ்)

★

ஒயிட் ஸ்டவ், கிருஷ்ணாயில் ஓல்சேல், ரீடெயில் ரீடெயில்
சிமெண்ட் அண்டு ஜெனரல் மெர்ச்சண்ட்

ஆபீஸ்:
23, முத்து முதலித்தெரு,
இராயப்பேட்டை, மதருஸ்—14
போன்நெம்பர்: 85294.)

சேல்ஸ் டிப்போ:
2-46, தௌசண்ட்லைட் மார்க்கட்
மவுண்ட்ரோடு, மதருஸ்—6

தொலைப்பேசி : 88115

## எமது பொங்கள் வாழ்த்துக்கள்

எமது ஆதரவாளர்கள், அன்பர்கள், வாடிக்கையாளர்கள்
மற்றும் பொது மக்கள்யாவருக்கும் எமது மனமார்ந்த
பொங்கல் வாழ்த்து!

நல்லி சின்னசாமி செட்டி

போன்: 88115

பனகல் பார்க்

---

## நல்லி சின்னசாமி செட்டி

பட்டு ஜவுளி வியாபாரிகள்,
நாகேஸ்வர ராவ் ரோட், (பனகல் பார்க் எதிரில்)
தியாகராயநகர், சென்னை—17.

# புகுமுன்

பேரன்புடையீர்!

அண்ணனின் வாழ்த்தோடு துவங்கும் இந்த ஆண்டு முரசொலி பொங்கல் மலரைத் தஞ்சையிலிருந்து கண்டு மகிழ்கிறேன்.

வாய்க்கால் வரப்பு வழிகள்!
கல்லும் முள்ளும் காலைப்
பதம் பார்க்கும் பாதைகள்!
சேற்றிலும் சகதியிலும்
சென்று சேரிவாழ் மக்களைச்
சந்தித்தல்!

இப்படித் தஞ்சைத் தொகுதியிலே வாக்காளர்களைச் சந்திக்கச் சுற்றிக் கொண்டிருக்கும் நான் இடையிலே இரண்டொரு நாள் சென்னை சென்றேன்

"இந்த ஆண்டு பொங்கல் மலர் வேலை துவங்க வேண்டாமா?" கேள்வி யெழுப்பியது தம்பி மாறன்.

"தேர்தல் காலம் நோக்கிச் செல்கின்ற வேளையிலே மலர்கொய்ய நேரம் உண்டா?" மழுப்பியது நான்.

"கழகம், வெற்றிமாலை சூடுவதற்குமலர் பறிக்க வேண்டாமோ?"

இந்தப் பதில் சகோதரர் சத்தியினுடையது! முரசொலி அலுவலகத்தில் நடந்த இந்த உரையாடலுக்குப் பிறகு முகிழ்த்த முயற்சியில் விளைந்ததே உங்கள் கைகளில் தவழும் இந்தப் பொன்மலர்! தமிழ்





மணம் கமழ் தங்கஇதழ்களைச் சுவைத்துப் பாருங்கள்!

பொருளாளர் பொறுப்பு — தலைமைக் கழகத் தேர்தல் அலுவல்கள்—ஆட்சி மன்றக்குழுவேலைகள்—மூவர் குழுப் பணிகள்--பல்வேறுதொகுதிச் சுற்றுப்பயணங்கள்—நிற்கும் தொகுதியில் நிற்காத அலைச்சல்!

இத்தனை பணிகளுக்கிடையே மலர் வெளியிடுவதிலும் முழுக் கவனத்தை செலுத்துவது எங்ஙனம்?

அதனால் இயன்றதைச் செய்திருக்கிறார்கள். எழில் குறைந்திருக்கலாம்! ஆயினும், ஏற்றம் குறையவில்லை என்ற நிம்மதி எனக்கு! வண்ணப் பொலிவு, வழக்கம் போல் இல்லாதிருக்கலாம்! எண்ணப் பொலிவு மிகுந்திருக்கிறதென்று இறும்பூய்துகிறேன்.

பொங்கல் கொண்டாடுகிறோம்.
விழா எடுக்கிறோம்
கவிதை புனைகிறோம்.
களிநடனமாடுகிறோம்.

ஆயினும்,

கரும்பு கசக்கிறது!
வெல்லம் துவர்க்கிறது!
பொங்கல் புளிப்படிக்கிறது!

ஏன்? ஏன்? ஏன்?

ஏழை வீட்டில் இன்பம் இல்லை.
பொங்கல் இல்லை!
பூரிப்பு இல்லை!

ஆகவே, நாம் எடுக்கும் விழாவில் சிறப்பு இல்லை. நமக்கே அதனால் உற்சாகம் இல்லை.

ஏழை வீட்டில் இன்பம் பொங்குவதே உண்மைப் பொங்கல்!

இத்தகைய கருத்தினை அடிப்படையாக அமையத்தான் எழுத்தோவியங்களும் சித்திரங்களும் இந்த மலரில் தீட்டப்பட்டிருக்கின்றன.

மலரைக் காணுகிறேன். இதற்கென உழைத்தமாறன்,சத்திபம்பரம்போல்பணியாற்றிய மல்லி, மோகன், ஆற்றல் மிகு அடியார், அயராது பாடுபட்ட அமிர்தம், செல்வம், அலுவலகத்தோழர்கள் அனைவரையும் மனக்கண்ணால் கண்டு பாராட்டுகிறேன். செல்லப்பனின் உயிர் ஓவியங்கள் மலருக்கு நிறைந்த மணத்தை தருகிறது. நல்ல வருங்காலம் உடைய அவரையும் பாராட்டுகிறேன். மாதவன் முயப்பிற்குத்தான் என் பாராட்டோடு உங்கள் பாராட்டும் உண்டே! மலர்கண்டு தாங்கள் புரியும் புன்னகை, எமக்குக் களைப்பாற்றும் தேன்துளி!

அன்பு,

[signature]

# என் வாழ்த்து

**அறிஞர் அண்ணா**

**முரசொலி**

"இசைக்கு அடுத்தபடியாக தமிழரின் செவிக்கும் சிந்தனைக்கும் இனிமை பயப்பதாகும்.

**முரசொலி**

போர்க் கருவியாக மட்டுமல்ல, புகழ்க் கருவியாக, கொடை அறிவிக்கும் கருவியாகக் கொள்ளப்பட்டு தமிழகத்தில் ஏற்றம் பெற்றிருந்த ஒன்றாகும்.

கேட்டுத் தமிழர் இன்புறுவர்; மாற்றார் மருளுவர்; இறுதி வெற்றி பெற்றுத் தமிழர் மகிழ்ச்சிகொள்வர்.

**முரசொலி**

எழுப்பிவாழ்ந்தனர், தமிழர் எனக் கூறுவதால், அந்நாளில் போர்வெறி கொண்டு தமிழர் பிறர் நாடு கைப்பற்றிக் கொட்டம் அடிக்கும் மனப்போக்கினராக என்றும் இருந்ததில்லை. பிறர் வாழ்வையும் உரிமையினையும் மதிக்க மறுத்ததில்லை. தமது உரிமையை அழித்திட எவர் முனையினும் பொறுத்துக் கொண்டதில்லை: தன் மானத்தைப் பறித்திட முயல்வோரைத் தம் தாள் பணிய வைக்கத் தவறியதில்லை.

**முரசொலி**

வீரத்தினை விளக்கிற்று; வீண் ஆரவாரத்தை ஆர்ப்பரிப்பைக் காட்டும் கருவியாக இருந்ததில்லை.

**முரசொலி**

எனும் கருவி, தமிழரின் வீரத்தை, வெற்றியை, ஏற்றத்தைக் காட்டி நின்றது போலவே, தம்பி



கருணாநிதியின் கைவண்ண நிரம்பிய கருத்துக்கோட்டம் எனத் தகும் 'இதழ் வடிவு, தமிழகச் சிறப்பினை நாம் உணரச் செய்திடும் செயலினைச் செம்மையாகச் செய்து வருகிறது.

**முரசொலி**

இதழ், கருத்தொலியும் காவிய ஒலியும், கவிதை ஒலியும் குறிக்கோள் ஒலியும் கொண்டதாகத் திகழ்ந்து வருவதனை நாடு நன்கு அறியும்.

**முரசொலி**

இதழ்மூலம், தாயக விடுதலை உணர்வு எங்கணும் பரப்பப்பட்டு, மக்கள் விடுதலைப் போருக்கு ஏற்றவராவதற்கான பயிற்சிக் கூடமாகப் பயனளித்து வருகிறது.

**முரசொலி**

மலர், ஆண்டுதோறும் நமக்குக் கிடைத்திடும் அணிகலன்.

**முரசொலி**

வடிவத்தால் எவரையும் சொக்க வைத்து, கருத்துக் குவியலால் எவரையும் ஈர்த்து, இனிமை பயப்பதில் தென்றலையும். மணம் பரப்புவதில் முல்லையையும், ஒளி அளிப்பதில் முத்தாரத்தையும் வென்றிடும் வகையாக உளது என்று ஒவ்வோர் ஆண்டும் பல்லாயிரக்கணக்கான இல்லங்களிலே, பரிவுடன் கூறுகின்றனர்.

**முரசொலி**

பொங்கல் மலர், இந்த இலக்கணத்தை அடிப்படையாகக்கொண்டுளது.

**முரசொலி**

மலர், கேடு களைந்திட விழைவோர்க்கு, நாடு வாழ்ந்திட வழி காண விரும்புவோர்க்கு, தேவைப்படும் எழுச்சியைத் தரவல்லது.

**முரசொலி**

மலர், அழகுற அச்சேறி, நம் நெஞ்சினில் இடம் பெறத் தக்கதாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

**முரசொலி**

வாழ்க; வளர்க; தம்பி கருணாநிதியின் தொண்டு வெல்க, வளர்க!

**முரசொலி**

மலர் தமிழ்போற்றும் தகைமையாளரின் இல்லந்தோறும் இருத்தல்வேண்டும்.

**முரசொலி**

மலர் வெளி வருவதற்கு என் மகிழ்ச்சியையும், அதனை எழில்கூட்டி வெளியிடுவோருக்கு என் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதழ் மூலம் அனைவருக்கும் என் பொங்கற் புதுநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்பன்,

அண்ணாதுரை



# பெரியாரைக் கேளுங்கள்!




அரிசி விலை...
உயர்ந்தது ஏன்?




துணி விலை...
உயர்ந்தது ஏன்?


பள்ளு பறையனுங்க படிக்க ஆரம்பிச்சுட்- -டானுங்க! அதனாலேதான்!
தபால்காரனெல்- -லாம் அதிகச் சம்பளம் வாங்குறானே! அதனால்!
சந்நிதானம் பூசிக்கோ என்றால் பூசிக்கொள்வேன்


மு.கருணாநிதி


கற்பின் திருவுருவாம் கண்ணகியின் காற்சிலம்பை விற்க கடைவீதி வருகிறன் கோவலன். அங்கே ஒரு பெரிய வரிடம் காட்டு கிறன்.
செல்லப்பன

"ஏ அப்பா!...விலை மதிக்க முடியாத சிலம்பு. என் சொத்து முழுவதும் விற்றாலும்கூட இதை வாங்கப் பொருள் போதாது... நீ இதை எடுத்துக்கொண்டு அரண்மனைப் பொற்கொல்ல ரிடமே போ!...அவர் விற்றுத் தருவார்" என்கிறார். பிறகு வீதியைப் பார்த்து" அடேடே.. அதோ, அவரே வருகிறாரே. பொற்கொல்லரே! பொற்கொல்லரே! நில்லும்"—என்று கூறிய அந்தப் பெரியவர் தலைமைப் பொற்கொல்லரைத் தடுத்து நிறுத்துகிறார். தலைமைப் பொற்கொல்லருடன் வந்த நூறு பொற்கொல்லர்கள் நிற்கிறார்கள். பின்னர், தம்மை அழைத்த பெரியாரைப் பார்த்து, "என்ன...... ஏன்?"—என்று கேட்கிறார் தலைமைப் பொற்கொல்லர்.

"இதோ, இவரிடம் ஒரு அழகான சிலம்பு இருக்கிறது."—என்கிறார் பெரியவர்.

"சிலம்பா?"...

"ஆமாம். விலைமதிப்பில்லா சிலம்பு!...அதை விற்றுத் தர வேண்டுமாம்." என்று கூறிய பெரியவர் கோவலனை நோக்கி "கொடப்பா அவரிடம்" என்கிறார்.

கோவலனும், தன் சிலம்பை தலைமைப் பொற்கொல்லரிடம் தர

'இனி என் வேலை தீர்ந்தது. நான் வருகிறேன்" என்று கூறிக்கொண்டே பெரியவர் போகிறார். சிலம்பைப் பார்த்தவாறு பொற்கொல்லர் மௌனமாக நடக்கிறார். கோவலனும் அவர் பின்னால் நடக்கிறான் நூறு பொற்கொல்லர்களும் தொடர்கிறார்கள். பொற்கொல்லர்கள் ஏனோ ஒருவரையொருவர் பார்த்துக்கொள்கிறார்கள். ஒரு பெரியமண்டபத்தினருகே சென்றதும் பொற்கொல்லர் நின்று, 'நீ எந்த ஊர்' என கோவலனைக் கேட்கிறார்.

"பூம்புகார்..."

"பெயர்?..."

"மனைவியின் சிலம்பை விற்கும் அளவிற்கு தாழ்ந்துவிட்ட நான்...என் பெயரை சொல்ல விரும்பவில்லை. மன்னிக்கவும்...."

"நீ எப்படி என்னிடமே சிலம்பை விற்க வந்துவிட்டாய்?"

கேள்விக்குப் பொருள் புரியாமல் கோவலன் விழிக்கிறான்.

"பரவாயில்லை. அந்தப் பெரியவருக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். எல்லாம் நல்லதுக்கே! பாண்டிமாதேவியாருக்கு ஒற்றைச் சிலம்பு தேவை. அவர்கள் விரும்பும் அந்த ஒப்பற்ற சிலம்பு. இதுவாகவே இருக்க முடியும். தேடி யலைந்தது தானாகவே கிடைத்துவிட்டது. நீ சிலம்போடு இந்தமண்டபத்திலேயே இரு. நான் மன்னரிடம் செய்தியை அறிவித்து உன்னை அழைத்துப் போகிறேன்." என்கிறார் தலைமைப் பொற்கொல்லர்.

"மிகவும் நன்றி" என்கிறான் கோவலன். தலைமைப் பொற்கொல்லர் நூற்றுவரைப் பார்த்து நீங்களும் இவருக்குத் துணையாக இங்கேயே இருங்கள். நான்விரைவில் வந்துவிடுகிறேன்."—கூறிவிட்டு அந்த இடத்தைவிட்டுப் போகிறார்.

* * *

ஆரியப்படை கடந்தநெடுஞ்செழியனின் பள்ளியறை. அவைக்களம் செல்லுதற்குரிய உடை புனைந்து புறப்படத் தயாராகிவிட்ட பாண்டியன், அரசியை நோக்கி "நேரமாகிறதே!...நீ புறப்படவில்லை நீதிமன்றத்திற்கு?"

"நான் வரவில்லை சிலம்பில்லாத காலோடு!"

"இன்று நீதிமன்றத்தில் சிலம்புத் திருடனையுந் தான் கண்டு பிடிக்கப் போகிறேனே!..."

"ஆகா!...எவ்வளவு அக்கறை! உங்களுக்குப் புறப்பாட்டு எழுதவும், போர்த்தளவாடம் சேகரிக்கவும், பொழுதெல்லாம் பாண்டி மண்டிலத்துச் சேதி கேட்கவும் நேரமிருக்குமே தவிர, பொலிவிழந்து கிடக்கிறதே துணைவியின் பாதம் என்ற கவலை வேரு இருக்கிறது?..."

"உன்னையும் என்னையும் விட நாடு பெரியது என்பதை மறந்துவிடாதே! அற்பச் சிலம்புக்காக ஒரு அரசி இவ்வளவு கவலைப்படுவதா?"

"அற்பச் சிலம்பாகத்தானிருக்கும் தங்களுக்கு! நானே அற்பமாகி விட்டேனல்லவா அதனால்..."

"சரி...சரி...நீ வருகிறாயா இல்லையா; நீதிமன்றத்துக்கு?"

"சிலம்பில்லாமல் இங்கிருந்து ஒரு அடிகூட எடுத்து வைக்க மாட்டேன்."

"...ம்...சரி...வருகிறேன்"—என்று கூறிவிட்டு வேகமாகப் போகிறான்பாண்டியன் நெடுஞ்செழியன். வெளியே அதிகாரி (சிலம்புத் திருடி) தயாராக இருக்கிறான். அரசனைக்கண்டதும் வணங்கிப் பின்னால் செல்கிறான். தாழ்வாரத்தில் நெடுஞ்செழியன் வந்தபோது தலை தாழ்த்தி வணங்குகிறான், தலைமைப் பொற்கொல்லர்.

"என்ன?..."

"சிலம்பு திருடிய கள்வன் அகப்பட்டு விட்டான் மன்னவா?..."

"எங்கே அவன்?"

உண்மையிலேயே சிலம்பைத் திருடிய அதிகாரி திடுக்கிடுகிறான்.

"சிலம்பைப் பழுது பார்த்து விற்பதற்கு முயன்றுகொண்டிருந்தான். அவனைப் பிடித்து

பத்திரப்படுத்திவிட்டு செய்தி சொல்ல ஓடி வந்தேன்"— பொற்கொல்லன்.

"அப்படியா ?" — என்று கேட்ட நெடுஞ்செழியன் அதிகாரியை நோக்கி "பாண்டிய நாட்டில் கள்வனா ? அவனைக் கொன்று வருக!" என்கிறான்.

கோயில் மண்டபத்தில் கோவலன் உலவிக்கொண்டிருக்கிறான். பலிபீடம் போன்ற ஒரு மேடை அங்கே இருக்க அதனருகே 100 கொல்லர்களும் அமர்ந்து அவனையே பார்த்துக் கொண்டிருக்கின்றனர். தூரத்தில் தலைமைப் பொற்கொல்லரும் அதிகாரியும் வருகிறார்கள். அவர்களைக் கண்ட கொல்லர்கள் எழுந்து நிற்கிறார்கள்.

"பொற்கொல்லரே! போன காரியம் வெற்றி தானே?—" என்று ஆவலுடன் கேட்டான் கோவலன்.

"நான் போன காரியம் வெற்றிதான்! நீ வந்த காரியம் தான் தோல்வியில் முடிந்துவிட்டது!" என்றான் பொற்கொல்லன்.

"அப்படியானால் மன்னருக்குச் சிலம்பு தேவையில்லையா?"

"மன்னருக்கு ஏன் சிலம்பு ?...மகாராணிக்கல்லவா வேண்டும்..."

"பொற்கொல்லரே !......" கேலி கண்டு ஆத்திரப்பட்டான் கோவலன்.

"சிலம்பை அவரிடம் கொடு."—என்று அதிகாரியைக் காட்டினான் பொற்கொல்லன்.

அதிகாரி கைநீட்ட சிலம்பை அவனிடம் தருகிறான் கோவலன்.

"உனக்கேது இந்தசிலம்பு?" கேட்டான் அதிகாரி.

"என் மனைவியின் சிலம்பு..."

"இதை விற்க வேண்டிய காரணம்..."

"வாங்குபவருக்குத் தேவையில்லாத கேள்வி..."

"ம்...ஒற்றைச் சிலம்பை விற்கிறாயே ! அதற்கான விளக்கம் கூறு!..."

"விலை கூறுவேன் சிலம்புக்கு?...விளக்கம் கூற மாட்டேன் விற்பதற்கு!"

"திறமையான திருடன்!"

"என்ன?" அதிர்ச்சியடைந்தான் கோவலன்,

"ஆமாம். இல்லாவிட்டால் தோலிருக்கச் சுளை விழுங்கியதுபோல் பூட்டிய பெட்டி பூட்டியவரிருக்க திறவுகோலோ என்னிடமிருக்க, திருட முடியுமா இந்தச் சிலம்பை...?"—என்று கூறினான் தலைமைப் பொற்கொல்லன்.

"ஆ!...சிலம்பைத் திருடினேனா? பொற்கொல்லரே!... ஏனிந்தப் பழி என்மீது? இஃது என்ன அநியாயம்?"— என்று துடித்துக் கேட்டான் கோவலன்.

"அரசியின் சிலம்பைத் திருடியது மட்டும் நியாயமோ !..."

"யார் திருடியது உங்கள் அரசியின் சிலம்பை?...

அதைக் கண்டு பிடிக்க வகையற்றவர்கள்—திறனற்றவர்கள்...வழியிலே போகிறவன்மீது பழியைப் போடுவதா?..."

அதிகாரி துடித்தெழுந்து "அடக்கடா வாயை !...பஞ்சமா பாதகங்களின் நிழல்கூட நுழையமுடியாத பாண்டி மண்டலத்தில் ஒரு பாதகம் உன்னுருவில் நுழைந்திருக்கிறது என்பதைக் கேட்டு மன்னர் பதைக்கிறார்...துடிக்கிறார்!..." என்றான்.

"அந்த மன்னரை நான் காணுகிறேன் ... கள்வனல்ல காவலனே நான்......கருத்தழிந்த காரணத்தால் கைபிடித்த மனைவிதனைக் கண்ணீரால்மிதக்கவிட்டுக்

கனகமலை..

வைரமலை...

கணக்கிடவே முடியாத வெள்ளிமலை...

அத்தனையும் அழித்துவிட்டுப் பிழைப்புக்கு வழிதேடிப் பிற நாடு வந்திட்ட மாபாவி!...

என் சீதளச் செந்தமிழாள்...

சிந்தைக்குப் பெருவிருந்து..

அவள் செந்தாமரைக் கால்களிலே அணிந்திருந்த சிலம்புதனை விற்பதற்கும் துணிந்துவிட்ட கொடுமையாளன்!— என விளக்குகின்றேன்!...... தமிழ் படிந்த நெஞ்சமிது! தமிழ்த் தாயின் வயிற்றினிலே கருவாகி உருவாகித் திரு நாட்டின் மண்மீது தவழ்ந்தவன் நான்...இருட்டுமதி படைக்கவில்லை. திருட்டுத் தொழில் நடத்துவதற்கு—என்பதனைக் கூறுகின்றேன்!...எங் நாடும் புகழுகின்ற பெரு வேந்தன் நெடுஞ்செழியன் அவைக்களத்தில் நீதிதனைப் பெறுகிற உறுதி எனக்குண்டு!...உடன் அழைத்துச் செல்வீர் வேந்தரிடம்!..."

"வேந்தரென்ன; உன் வீட்டுக்காவலனா நினைத்தபோது சந்திக்க?..."

"நாட்டுக்குக் காவலன்!... நீதிக்கு நேர்மைக்கு அறத்துக்கு அன்புக்குத் தமிழுக்குக் காவலன் நெடுஞ்செழியன்...! அநீதி... அணுவிலோர் பாதி அவன் ஆட்சியில் நடைபெறவும் அனுமதிக்கமாட்டான்... என அகிலம் புகழக்கேட்டிருக்கிறேன். அந்தப்பாண்டியத்துப் பெருவேந்தன் பார்க்கட்டும் என் முகத்தை!... கள்வனுக்குரிய இலக்கணத்தைக் காண்பானா?... களங்கத்தின் சாயல்தனை எடுத்துக் காட்டுவானா?...முகக்குறியால்

நீதி சொல்லும் முடிவேந்தன் நெடுஞ்செழியன் முன்னிலை நிற்கின்றேன்!...அவன் முடிவு தனை ஏற்கின்றேன்!...இட்டுச் செல்வீர் என்னை!..."

"மன்னரை ஏமாற்றலாமென நம்புகின்றாய்... கைகாரக் கள்வனே!...உன் போன்ற பாவிகள் முகத்தை ஏறெடுத்தும் பார்க்கமாட்டார் எமது பாண்டியர்!"......

"ஏன்!... உன்னைக் காண்பவர் என்னைக் காணமாட்டாரா?..."

"திமிர் பிடித்தவனே!... ஒப்புக்கொள் உன் குற்றத்தை.... இல்லையேல் தப்பாது உன் உயிர்!"...

"மானம்போய் உயிர்வாழும் மரபிலே பிறக்கவில்லை நான்...மறத் தமிழர் குடியிலே பிறந்தவன்!..."

'நானும் தமிழ்க்குலந்தான்!' திமிராகக் கூறினான் அதிகாரி.

"நீ...குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக்காம்பு! கொள்கையற்றவன்! ... குள்ளநரி! வீரபரம்பரையின் விதிவிலக்கு!..."

"நாக்குத் துண்டாகிவிடும் நடுத் தெருவில் நாய் போல் இழுத்துச் செல்லப்படுவாய்!"...

"உங்கள் நாட்டின் புகழ் நாலு திக்கிலும் பரவும்!... செய்யுங்கள் அந்த நல்ல காரியத்தை!..."



இடையிலே தலைமைப்பொற் கொல்லர் தலையிட்டு "ஏனப்பா உனக்கு இவ்வளவு வாய்த் துடுக்கு!... திருடியதுமில்லாமல் திமிர்வாதம் வேறா?... கொழுப்பெடுத்தவனே!......... எதிர்த்துப் பேசாமல் உண்மையைக் கூறிவிடு!... என்றார்.

'பொற்கொல்லரே' உணர்ச்சி வசப்பட்டுக்கூறினான் கோவலன். பொற்கொல்லன் "நீ கள்வனே தான்!..." என, நூறு பொற்கொல்லர்களும் சேர்ந்து கொண்டு "கள்வனே தான்! கள்வனே தான்!! என கோவலனை நோக்கிக் கத்துகிறார்கள்.

கோவலன் உணர்ச்சிப் பெருக்கோடு "கள்வன்! நான் கள்வன்! கண்ணகி!... உன் கணவன் கள்வன்! என் பத்தரை மாற்றுத் தங்கமே!... பாண்டிநாடு தீர்ப்பளிக்கிறது அப்படி! நான் கள்வனா கண்ணே!...கண்ணீர் ததும்ப விடை கொடுத்தாயே கண்ணகி; இப்படி ஒரு களங்கம் எனக்கு வருமென்று தெரிந்து தானா, கண்மணீ!

"தித்திக்கும் செந்தேனே!... தெருப்புழுதியில் **வீணே** என உன்னை வீசிவிட்ட கயவனுக்குச் சரியான தண்டனை! சரியான பரிசு!... கள்வன்! கள்வன்!!... கள்வன்!!!... ஐயோ! ஏற்கனவே ஏக்கத்தால் வாடிவிட்ட உன் இதயம்... இந்த இழிசொல் எனக்குக்கிடைத்த சேதியை எப்படித்தான் தாங்குமோ!... எனை மணந்தாய்! இன்பம் பெறலாம் என இருந்தாய்!... எரிமலையாய் ஆக்கி விட்டேன் உன் வாழ்வை!... அதுபோதாதென்று கள்வனின் மனைவியடி கண்ணகி யென்று ஊரார் தூற்றுதற்கு உனை ஆளாக்கி விட்டேன்! உதய தாரகையே! ஒப்பில்லா மாணிக்கமே! மாடமாளிகை கூட கோபுரத்தில் அமர்ந்து, மகரயாழ் நீ மீட்ட...

மந்தமாருதம் தாலாட்ட உன் மடிதனிலே உறங்க வேண்டிய நான்... மதுரைமா நகரத்து வீதியிலே... கள்வன் எனும் கனைதாக்கக் கதறுகின்றேன்! புலம்புகின்றேன்!... நான் கள்வனாம் கண்ணகி, கள்வனாம்!...

நீ சொல்...

நான் கள்வனா...?

நான் கள்வனா?...

இதோ கள்வன்!!

இவன் கள்வன்!!!...

இவன் கள்வன்!!!

"என அதிகாரியிடம் அணுகி அவனைச் சுட்டிக் காட்டினான் அதிகாரி வாளை ஓங்கி "என்ன சொன்னாய்?"

எனத்தலையைத் துண்டிக்க வீசுகிறான். கழுத்தில் வெட்டு விழுந்தது.

"ஆ... கண்ணகி!"...எனத் துடித்து விழுகிறான் கோவலன்.

---

1950—51ல் இந்திய ரயில்வேயினால் கிடைத்த மொத்த வருவாய் ரூ 2, 64, 61, 00, 000

1960 இறுதிவரை கிடைத்த மொத்தவருவாய் ரூ 4, 24, 06, 00, 000

அதாவது — பத்து ஆண்டுகளில் வருவாய் இரட்டித்திருக்கிறது

ஆனால் மூன்றாவது வகுப்புப் பிரயாணிகளே! வருவாய் இரட்டித்தது போல உங்களுக்குக் கிடைத்த வசதிகள் இரட்டித்திருக்கின்றனவா?




**வாக்காளரே**

**பதில்**

**சொல்லுங்கள்.**

# திராவிட இலக்கியம்

திராவிட மொழிகளில் இலக்கியமுடைய மொழிகள் நான்கு. அவை தமிழ், கன்னடம், மலையாளம் என்பன. பண்பட்ட மொழியாகிய துளுவையும் சேர்த்துப் பெருமொழிகள் ஐந்து என்ப்படும். தென்னகத்திலும், விந்தம் சூழ்ந்தும் கிடக்கும் பல பண்பான மொழிகளைச் சேர்த்து நல்லாயர் கால்டுவெல் திராவிட மொழிகள் 13 எனத்தொகைப் படுத்தினர். இப்போது மேலையாராய்ச்சியாளர் அவை 19க்கும் மேற்பட்டன என்று கூறுகின்றனர்.

எப்படியும் இருபதுக்குக் குறைந்த திராவிட மொழிகளுக்கெதிராக, இந்தோ–ஐரோப்பிய இனம் என்று அறிஞரால் அழைக்கப்படும் ஆரிய இன மொழிகள் உலகில் எண்பதுக்கு மேற்பட்டவை உண்டு. ஆயினும் 20க்கு 4 ஆக இயலும். இலக்கியப் பழமையுடைய திராவிட மொழிகளின் எண்ணிக்கைக்கு எதிராக, கிட்டத்தட்ட நூறளவான ஆரிய இன மொழிகளிடையே இலக்கியப் புலமையுடைய மொழிகள் மூன்று தான் உண்டு. அவையே லத்தீன், கிரேக்கம், சம்ஸ்கிருதம் ஆகியவை.

திராவிட இலக்கிய மொழிகள் நான்கும் இன்னும் உயிருடைய பேச்சு மொழிகள் அவற்றின் இலக்கிய மொழிகள் இன்னும் வளர்ந்துவருகின்றன. ஆனல் ஆரிய இலக்கிய மொழிகள் மூன்றுமே பேச்சிழந்து உயிரற்ற மொழிகளாய் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் விட்டன. அவற்றின் இலக்கியங்கள் உயிரும் உளவளர்ச்சியும் கற்று அதுபோலவே ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஆய்விட்டன.

பண்டைய ஆரிய மொழிகள் இறந்து பட்டாலும், அவற்றின் வழிவந்த இந்தி போன்ற ஆரியக்கிளைமொழிகள் இன்றுவளரத் தொடங்கியுள்ளன. அதேபோல்ஆரியக்கிளை மொழிகளான ஆங்கிலம் முதலிய மேலை மொழிகள் பேரளவில் அண்மைக் காலங்களில் வளர்ந்தும்உள்ளன. ஆயினும் ஆரியப்பேரினத்தின் மூல வளத்தைக் காட்டும் இலக்கியமாக, பண்டிருந்து இன்றுவரை இன வரலாற்றிலக்கியமாகக் கூறத்தக்க இலக்கியம், எதுவுமே இல்லை. திராவிடருக்கு அத்தகைய இலக்கியங்கள் ஒன்றல்ல, நான்கு உண்டு. தமிழிலக்கியம், கன்னட இலக்கியம், தெலுங்கிலக்கியம், மலையாள இலக்கியம் ஆகிய நான்கு இலக்கியங்களுமே நான்கு பேராறுகளாக, திராவிட இனத்தின் ஆயிரக்கணக்கான ஆண்டு வளத்தையும் வளர்ச்சியையும் எளி நிழற்படுத்திக்காட்டும் இயல்புடையவை. இவை தவிர, ஆரியர் வருமுன்பே திராவிடர் அடைந்திருந்த உலகளாவிய பெருவளத்தையும் வளர்ச்சியையும் படம் பிடித்துக்காட்டும் திராவிட இனத்தனிப் பேரிலக்கியமும் ஒன்று உண்டு.

இதுவே தேவார திருவாசகங்களுக்கு முற்பட்ட பழந்தமிழ்ப் பேரிலக்கியம் தமிழகமே 19-ம் நூற்ருண்டிறுதி வரை இதனைப் பற்றி மிகுதி அறியாமல் இருந்த தென்பதைத் தமிழ்த்துறை அறிஞர் அறிவர். இதில் வியப்பில்லை மலையாளிகள், தெலுங்கர், கன்னடியருடன் ஒப்பத் தமிழரும் தம் இலக்கியம் என்று அதுவரை பேணி வந்தது கி. பி. 7-ம் நூற்ருண்டு முதல் வளர்ந்த தேவார திருவாசக திருநாலாயிரங்களுடன் தொடங்கிய தமிழிலக்கியத்தையே.

உண்மையில் 'தமிழ்'மொழிக்கு இலக்கியம் என்றுகூறத்தக்கது தேவார திருவாசக முதல் திருவருட்பா கடந்து நம்மிடம் வந்துள்ள இடைக்கால, இக்கால இலக்கியமே. இந்தப் பகுதியைத் தமிழ் இலக்கியமாகக் கொண்டே டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் காலம்வரை தமிழர் பெருமைப் பட்டுக் கொண்டிருந்தனர். தமிழறிஞர் பழந்தமிழிலக்கியம் என்று பெருமையுடன்

பாராட்டிய இலக்கியம் இதுவன்றிவேறன்று. தமிழ் சிறத்த மொழி, உலகின் மிகப்பழமை பெருமைமிக்க மொழி என்று டாக்டர் கால்டுவெல், டாக்டர் போப் முதலானவர்கள் வானளாவப்பறந்ததற்குக் காரணமான தமிழ் இலக்கியமும் இதுவே.

அளவில் இந்தத் தமிழிலக்கியமே கன்னடம், மலையாளம், தெலுங்கு முதலான ஏனைய தென்னக மொழிகளுடன் சமமதிப்புக் கொள்ளத்தக்கது. அவற்றுடன் போட்டியிடத்தக்க பெருமை கூட உடையது. இது மட்டுமோ இந்தப் பகுதியைத் தம் தேசிய இலக்கியமாக வைத்துக்கொண்டே தமிழர் தென்னகத்தின் பழையமொழிகளுடனும் மட்டுமன்றி, மேலையுலகத்தில் புதிய ஐரோப்பிய மொழிகளுடனும் தம்மை ஒப்பிட்டுப் பெருமையடையலாம். சமஸ்கிருதத்துடனும் கிரேக்க லத்தீன்களுடனும் போட்டியிட்டுக் கூட இத்தமிழ் இலக்கியம் தலைகுனிய வேண்டுவதில்லை.

கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி, நாச்சியார், மணிவாசகர், சேக்கிழார், தாயுமானவர், வள்ளலார் முதலிய எண்ணற்ற பெருங்கவிஞர்களை ஈன்ற இலக்கியம் இது. ஷேக்ஸ்பியர், காளிதாசன், ஹோமர், தாகூர் போன்ற உலகக் கவிஞர்களுடன் ஒப்பிடத்தக்க பெருமையை இந்த தேசிய இலக்கியத்துக்கு அளிக்க இக்கவி ஒருவரேபோதியவர்.

வள்ளுவனையும் இளங்கோவையு நக்கீரரையும், தொல்காப்பியரையும், கபிலரையும் தமிழ்க் கவிஞர் கணக்கில் சேர்க்காமலே உலகமொழிகளிடையே தமிழ் தலை நிமிர்ந்து நிற்கமுடியும். இந்திய மொழிகளிடையே அந்நிலையில் அது பழமைமிக்க உச்சநிலைத் தேசிய மொழியாகவே இயங்கும்.

தமிழில் மட்டுமல்ல இந்திய மொழிகளிலேயே மிகப்பெரிய கவிஞர் கம்பர் என்று டி. கே. சி. போன்றோர் பலர் கருதியதில் தவறில்லை. இந்திய மொழிகளிடையே பழந்தமிழன் நிலை சமஸ்கிருதத்தின் நிலையுடன் ஒத்தது. இந்தியாவில் பழைய ஆரிய இலட்சியமொழி சமஸ்கிருதம். அதனோடொப்ப ஆனால் அதனினும் பழமையும் பெருமையும் விளங்கியதான பழைய திராவிட இலக்கியமொழி பழந்தமிழ்.

வருங்காலத் தென்னகத்தில் தென்னகமக்கள் தொல்காப்பியம், முப்பால், சங்க இலக்கியம் ஆகிய பழந்தமிழ் இலக்கியத் தொகுதியைத் தமிழர்க்குரிய இலக்கியம் என்று விட்டுவிடுவது பேதமைமிக்க செயலாகவே கருதப்படத்தக்கது. ஏனெனில் கடைச் சங்க இலக்கியத்திலேயே புலவர்கள் இன்றைய தமிழகத்திலுள்ள புலவர்கள் மட்டுமல்ல — ஈழம், மலையாளம், கன்னடம், ஆந்திரம் ஆகிய எல்லாப்பரப்புகளிலுமுள்ள புலவர்களும் உள்ளனர். ஒவ்வொரு நாட்டுக்கும் மொழிக்கும் உரிய தேசிய கவிஞர்களை, கம்பனின் மூதாதையை எழுத்துக்களின் முன்னோனை. பம்பனின் மூலமுதல்வனை திக்கனின்மரபுக்கொடித்தலைவனை கம்பனிடம்காணலாம். பாடப்பட்டவர்களுள்ளும் எல்லா மொழியில் முதல்வரும் உண்டு.

தமிழில் கி. பி. 7-ம் நூற்றாண்டுவரை உள்ள இலக்கியத்தைத் திராவிடத்தேசிய இலக்கியம் பெற்றும்; கி. பி. 7-முதல் 12-ம் நூற்றாண்டு வரை உள்ள இலக்கியத்தை இந்தியாஅல்லது கீழ்திசைப் பொதுப் பேரிலக்கியம் என்றும்; 12-ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட இலக்கியமே தாய்மொழிக்காக இலக்கியம் என்றும் கூறியதாகும். திராவிடப் பேரிலக்கியம் உலகில் தமிழினத்தவர் பெயர் நாட்டுப் பேரிலக்கியமாகும்; இரண்டாண்டுகாலப் பேரிலக்கியம், இந்தியாவில் நாகரிகம் பரப்பிய பேரிலக்கியமாகவும்; மூன்றாம்கால இலக்கியமே தமிழ்மொழிக்குப் பெருமைதரப் போதிய பேரிலக்கியமாகவும் அமைந்துள்ளன எனலாம்.

---

காங்கிரசிலுள்ள நிதி,சாணியில் வைக்கப்படும் 'பெரிய' பூசணிப் பூ கொண்டைக்கு மணமூட்டும் 'சிறிய' மகிழம் பூ, நம்மிடமுள்ள நிதி.

—அண்ணா

## பன்மொழிப்புலவர் அப்பாதுரையார்

# தீரன் சின்னமலையின் வீரவரை

புலவர் குழந்தை





## பீரங்கி முகத்தருகே நின்று எரிமலையென முழங்கி, புறப்பாட்டுப் பாடிய கொங்குமாவீரன் சின்னமலையின் எழுச்சிக் காவியம்

வெளிநாட்டாராகிய வெள்ளையர் நம் நாட்டைப் பிடித்து ஆள விடாமல் அவரோடு எதிர்த்துப் போர்புரிந்த நம்நாட்டு விடுதலை வீரர்களில் நம் சின்னமலை தலையாயவனாவான். இவன் கொங்கு நாட்டுக் கோவைக் கோட்டத்து வழிவழிப் பெருங்குடி மரபில் பிறந்தவன்; தாய்நாட்டு விடுதலைக்காகவே வாழ்ந்து அதற்காகவே உயிர்விட்டவன்; மைசூர் மன்னன் திப்புவின் சேனாபதியாக இருந்து, பல முறை வெள்ளையரை வெருண்டோடச் செய்தவன்; திவான் **மீர்சாதிக்கும்**, முதலமைச்சன் **பூரணையாவும்** செய்த சதியால் திப்பு இறக்கவே, சீரங்கபட்டணம் கோட்டை வெள்ளையர் கைப்படவே, கொங்குப் படையுடன் மீண்டு, ஐந்தாண்டுகள் வெள்ளையர்க்கு விடாமல் கோவை நாட்டை ஆண்டவன்; சமையற்காரனின் உளவால், சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது வெள்ளையரால் சிறை பிடிக்கப்பட்டுச் சங்ககிரிக் கோட்டையில் கொல்லப் பட்டான்.

**இடம் : சங்ககிரிக் கோட்டை**

(புலிக்கூண்டிலிருந்து ஆணிஎம் புலியைப் பிடித்து வருவது போல, விலங்கணிந்த கைகால்களுடன், இடுப்பில் கட்டிய இருப்புச் சங்கிலியை இருபுறமும் சில வெள்ளை வீரர்கள் பிடித்துவர, சின்னமலையைக் கொண்டுவந்து விசாரணை மண்டபத்தில் நிறுத்தினர். வெள்ளை வீரர்கள் நீட்டிய வெடியுடன் எச்சரிக்கையாக நின்றுகொண்டிருந்தனர்; எச்சரிக்கை என்றது ஒரு குரல். படைத் தலைவன் வந்து இருக்கையில் அமர்ந்து.)

படைத் : சின்னமலை ! தங்கள் வீரத்தையும் தீரத்தையும் மெச்சுகிறேன். உங்களைப் போன்ற அரசியல் குற்றவாளிகளுக்கு உரியது கொலைத் தண்டனைதான். வரி கொடுக்க மறுத்த பாஞ்சாலங்குறிச்சிக் கட்டபொம்மனையும் அவ்வாறே செய்தோம். ஆனால், உங்களை நாங்கள் அவ்வாறு செய்யவில்லை. அது எங்கள் நோக்கமும் அன்று. உங்கள் குற்றத்தை நாங்கள் பொறுத்துக்கொண்டோம். சின்னமலை ! தங்களை எங்கள் சேனாபதியாக வைத்துக் கொள்ள முடிவுசெய்துள்ளோம். தங்கள் விருப்பத்தையறிய விருப்பம். ஆகையால், தாங்கள் நன்கு எண்ணிப்பார்த்துச் சொல்லுங்கள். இந்த நல்ல வாய்ப்பை நழுவவிடாதீர்.

சின் : (நிமிர்ந்து நின்று) நான் நன்கு எண்ணிப்பார்த்துத் தான் சொல்லுகிறேன். உங்களை மூன்றுமுறை புறங்காட்டி ஓடச் செய்தேன். ஐந்தாண்டுகள் கோவை நாட்டைத் தனியாட்சி புரிந்துவந்தேன். அரசனாக இருந்து இந்த நாட்டை ஆள வேண்டும் என்பதல்ல என் ஆசை. அயல்நாடராகிம நீங்கள் இங்கு இருக்கக்கூடாது. எங்கள் தாய்நாடு, தமிழ்த்திரு நாடு அண்டிப் பிழைக்க வந்த உங்களுக்கு அடிமையாய் அடங்கி ஒடுங்கிக் கிடக்கக் கூடாது. எந் தாய்நாட்டு மக்கள் உங்களிடம் தலை குனிந்து தாழ்ந்து நிற்கக் கூடாது. நீங்கள் ஆள்வோராகவும் நாங்கள் ஆளப்படுவோராகவும் இருக்கக்கூடாது. அடிமை வாழ்வை தமிழ்நாடு, எனதருமைத் தாய்நாடு என்றுமே கண்டறிந்ததில்லை.

தமிழர் தன்மானம் உடையவர்கள்; மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார், அவர்கள் மானமிழந்து, மதிப்பிழந்து, மாற்றாருக்கு, அதுவும் அயல் நாடர்க்கு, அயல் மொழியாள

ருக்கு அடங்கி ஒடுங்கி வாழக் கூடாது. அயல்மொழியாளராகிய உங்களிடம், தமிழ் தெரியாத உங்களிடம்—எந்தமிழ் மக்கள் தேனினும் இனிய செந்தமிழால் பேசமுடியாது தியங்கி நிற்கக்கூடாது. நீங்கள் எங்கள் அருமைத் தமிழைக் கொச்சையாகப் பேசுவது கேட்டு எந்தமிழர் மனம் புண்பட்டு வருந்தக் கூடாது. அரைகுறையாகப் பேசியும் எழுதியும் செய்யும் தமிழ்க்கொலையைப் பொறுது, தம் தலையில் குட்டியும், அத் தமிழ்க் கொலைஞர் தலையில் குட்டியும், அவர்கள் காதை யறுத்தும், தலையை வெட்டியும் தமிழ் வளர்த்தோர் வழிவந்த தமிழர் உங்களை ஒன்றும் செய்ய முடியாது ஏங்கி யிரங்கி நிற்கக் கூடாது.

மேலும், உலக முதன்மொழி, உலக மொழிகளுக்கே கண் போன்ற எண்ணைக் கொடுத்த மொழி, இனிய எளிய இயல்பாகிய எங்கள் தாய்மொழியாக தமிழ் மொழி, இங்கு அண்டிப் பிழைக்கவந்த உங்கள் தாய் மொழிக்கு அடிமையாகக் கூடாது. நேற்று அரசியான உங்கள் தாய்மொழி எங்கள் நாட்டு அரியணையிலமர, இணைத்தென அறியமுடியாத அவ்வளவு காலமாய் அரசுவீற்றிருந்த எங்கள் தாய்மொழி அடிமைபோல நின்று குற்றேவல் செய்யக்கூடாது. வீரத் தமிழன் அண்டிப் பிழைக்கவந்த அயல் நாடர்க்கு அடிமையானுன் என்னும் பழிமொழி உண்டாகக் கூடாது என்பதுதான் என் ஆசை. அதற்காகத்தான் உங்களோடு எதிர்த்துப் போர் புரிந்தேன்.

நீங்கள் இங்கு அண்டிப் பிழைக்க வந்தீர்கள். நாங்கள் உங்களை அன்போடு வரவேற்ரேம். நீங்கள் வாழ வழியின்றி இங்கு வந்தீர்கள். நாங்கள் வருக வருகவென்று வரவேற்ரேம். இருக்க இடம் கொடுத்தோம்; வணிகஞ் செய்து வாழும் உரிமையை வழங்கினேம்; எங்கள் அன்பை அளித்தோம்; ஆதரவைத் தந்தோம். அந்நிலையில் அமைதியாக நீங்கள் இந்நாட்டில் என்றென்றும் இருந்து இனிது வாழலாம். ஆனல், நீங்கள் அவ்வாறு இருக்கவில்லை. அப் பண்பாடு உங்களுக்கில்லை. உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யத் தலைப்பட்டீர்கள். அன்பு செய்தோரை அடிமை கொள்ளத் துணிந்துவிட்டீர்கள். எங்கள் நாட்டை, எங்களை ஆள ஆசைகொண்டீர்கள். பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாய்த் தன்னரசர்களாய் வாழ்ந்து வந்த எங்களுக்கு நீங்கள் தலைவர்களாய் இருக்க ஆசை கொண்டீர்கள். அதுவுந் தான் உங்கள் திறமையாலா ? இல்லை, சூழ்ச்சியால் !

எங்கள் நாட்டு மன்னர்களை ஒருவர்மேல் ஒருவரைத் தூண்டி விட்டு, ஒற்றுமையைக் குலைத்து, பகையுண்டாக்கி, அவர்களில் ஒருவர்க்கு உதவுவதுபோல் நடித்து எங்கள் நாட்டைக் கொள்ளை கொள்ளத் தலைப்பட்டீர்கள். நீங்கள் எதற்காக எங்கள் நாட்டரசர்களுக்கு உதவவேண்டும் ? 'எம்மரசர் கொடுமை செய்கின்றனர்; அன்பு கூர்ந்து தாங்கள் வந்து உதவி அவர்களை விலக்கிவிட்டு நீங்கள் எங்களுக்கு அரசர்களாய் இருங்கள்; எங்களை ஆளுங்கள்' என்று இந்நாட்டு மக்கள் வந்து உங்களை அன்போடு வெற்றிலை பாக்கு வைத்தா அழைத்தார்கள்? அப்படியேதான் நாங்கள் இன்று ஒருவர்க் கொருவர் அடித்துக்கொண்டாலும் நாளை தாயும் பிள்ளையுமாய்ப் போகிறேம். நீங்களேன் குறுக்கே வந்து விழுந்தீர்கள்? ஆடு நினை கிறதென்று ஓநாய்க்கு என்ன அவ்வளவு அக்கறை?

அரசு அல்லது ஆட்சி என்பதன் பொருள் என்ன? மக்கள் ஒருவர்க்கொருவர் பகையின்றி அமைதியாக இருக்கும் மேற்பார்த்துக்கொள்ளும் தொழில் தானே? அத்தொழிலை அந்தந்த நாட்டினர் செய்துகொள்வது கொள்வதுதானே முறை? ஓர் அயல் நாடர் வந்து வேருெரு நாட்டு மக்களை அடக்கியாள்வதென்பது என்ன முறை? ஆகையால், அயல்நாடராகிய உங்களை இந்நாட்டை விட்டு ஓட்டவே உங்களோடு போர் புரிந்தேன்.

இது எனது சொந்த நாடு. இந்நாட்டு மக்கள் எம்மினத்தவர். அவர்களை அடிமைகொள்ள நீங்கள் முனைந்தீர்கள். அவர்களை நீங்கள் அடிமை கொள்ளாமல் காப்பது எனது கடமை.

தமிழர் தனித்த வீரமுடையவர்; சிறந்த போர்த்திறமையுடையவர்; அதற்கென ஒரு திணை வகுத்துக் கொண்டுள்ள அத்தகு சிறப்புடையவர்; பல பெரும் போர்கள் செய்து வெற்றிப்புகழ் எய்தியவர்; ஆனல், உங்களைப் போல மறப்போர் செய்யத் தெரியாதவர் பாவம்! அறப் போர் செய்வோர் வஞ்சப் போர் செய்தறியார். மாண்பினர் கைக்கூலி கொடுத்து எங்கள் ஆளையே உளவனுக்கி, அதுவும் எங்கள் சமையல் காரனையே உளவனுக்கி எங்களைப்பிடித்து வைத்தது போலத் தமிழர் வீரவரலாற்றில் எப்போதாவது எவராவது செய்ததாகக் கேட்டதுண்டா? உங்களுக்குத் தெரியாது. உங்கள் உறவினர்களைக் கேட்டுப் பாருங்கள். கோட்டைக்குள் கதவடைத்திருப்போரையும், 'வெளியே வா, களம் வகுத்துப் போர் புரியலாம்' என்று அறைகூவியழைத்துப் போர் புரிவதன்றே தமிழர் போர் முறை; கள்வர்களைப் போல நிலவறைக்குள் ஒளிந்திருந்து, படைக்கலமொன்றுமின்றி வெறுங்கையோடு சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது திடீரென்று வந்து சிறை பிடிப்பதா போர் முறை? இதுவா வீரமென்பது? இதுவா வீரர்க்கழகு? ஓகோ! இது வெள்ளையராகிய உங்கள் போர் முறை போலும்!

அன்று நீங்கள் எங்களைப் பிடிக்க வந்த போது என் கையில் ஒரு வெடி இருந்திருந்தால் உங்கள் வீரதீரம் அவ்வளவும் வெளிப்பட்டிருக்கும்; ஏன்? ஒரு தடியிருந்தாற் கூடப் போதும் வஞ்சித்து விட்டான் அவ் விரண்டகன் அவ்வஞ்சகன் சொல்லை உண்மையென்று நம்பி ஏமாந்து விட்டான். உங்களுக்கு வீரப் பட்டம் கிடைத்து விட்டது.

ஐந்தாண்டுகள் உங்களை அடக்கி யாண்டேன். மூன்று

முறை உங்களை ஓடோட அடித்துத் துரத்தினேன். இன்னும் வேண்டுமானால் களம் வகுத்து எதிர் நின்று போர் செய்து பாருங்கள். வெற்றி யாருக்கென்பதை உங்கள் நாட்டிலுள்ள உங்களவர் அத்தனை பேரையும் அழைத்து வந்து எதிர் நின்று வேண்டுமானாலும் பாருங்கள். அவ்வஞ்சகன் காட்டிக் கொடுக்காதிருந்தால் உங்கள் எண்ணம் மண்ணுக்கு என்பது உங்களுக்கே தெரியும். அன்று மைசூரில். பூரணயினையும் திவான் மீர்சாதிக்கையும் விலைக்கு வாங்காதிருந்திருந்தால், அத்துரோகிகள் காட்டிக் கொடுக்காதிருந்திருந்தால், நேரடியான போர் நடந்திருந்தால் நீங்கள் இப்போது எங்கிருப்பீர்கள் என்பது உங்களுக்கே தெரிந்திருக்கலாமல்லவா? அப்படியிருக்க. உங்களுக்கு அடிமையாக, உங்கள் சேனைத்தலைவனாகக் இருந்து உங்களை இந்நாட்டை விட்டு ஓட்டவா முடியும்? ஒருபோதும் முடியாது. பகைவர்களாகிய உங்கள் காலைக் கும்பிட்டுவயிறு வளர்க்க நாங்கள் என்ன மானங் கெட்டவர்களா? பகைவனைத் தொழுது வாழ்த்திக் கும்பிட்டு வாழகில்லேன்' என்பது எங்கள் முன்னோனை கும்பகன்னன் கூற்று. மானத்தின் பிறப்பிடம் தமிழ் நாடென்பதை உங்களிடம் பெருமையாகக் கூறிக் கொள்கிறேன்; வாழ்க்கைக்காக மானத்தை விற்கும் வழக்கம் தமிழனுடையதன்று. நீங்கள் நினைக்கிறபடி நான் உங்கள் அடிமையாய் இருந்து, எந்தாய் நாட்டு மக்களை, எம்மினத்தவனரை, ஒரு பிறப்பினரை அடக்கியாண்டால் எம்மவர்கள் என்ன நினைப்பார்கள்? அல்லது நீங்கள்தான் என்ன நினைப்பார்கள்? மானம் பெரிதா? வாழ்வு பெரிதா?

மேலும், நீங்கள் என்ன எம்மவருக்கு நன்மை செய்யப் போகிறீர்கள்? உங்களுக்கு அடிமையாய் இருந்தபோதிலும் எம்மவருக்கு நன்மை செய்ய நீங்கள் எம்மவருக்குச் செய்ய விருக்கும் கொடுமைகளுக்கு நாங்களுமா துணையாக இருக்க வேண்டும்? அதுவும் உங்களுக்கு அடிமையாக இருந்து கொண்டா துணை செய்யவேண்டும்? நாங்கள் என்ன எப்போதும் இந்தக் கோட்டைக்குள்ளாகவா இருந்து கொண்டே இருப்போம்? எந்தாய் நாட்டு மக்கள் முகத்தில் விழிக்க வேண்டாமா?

எது நல்ல வாய்ப்பு? உங்களுக்கு நாங்கள் அடிமையாக இருந்து கொண்டு எம்மவரை உங்களுக்கு அடங்கி ஒடுங்கி நடந்து கொள்ளும்படி செய்வதா நல்ல வாய்ப்பு? உங்களுக்கு நல்ல வாய்ப்புத்தான்;

நீங்கள் இந்த நாட்டை விட்டுப் போவதாகச்சொல்லுங்கள். உங்களை வழியனுப்ப உங்களுக்கு அடிமையாக இருக்கிறோம் எங்கள் நாட்டை நாங்கள் ஆளவோ நீங்கள் விரும்ப மாட்டீர்கள் இந்த நாட்டை விட்டு உங்களை ஓட்டப் பாடுபட்ட எங்களை வஞ்சனையாகப் பிடித்து வந்து சிறை வைத்து விட்டீர்கள். ஆகவே, உங்கள் விருப்பம் போல் என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள். கட்டபொம்மனைச் செய்ததை விட ஒன்றும் செய்து விட முடியாதே? அதை அவ்வளவு பெரிதாக நாங்கள் எண்ணவில்லை. வேறு ஏதாவது இருந்தால் செய்யுங்கள். உங்களுக்கு அடிமையாய் இருப்பதென்பது மட்டும் எங்களால் முடியாததொன்றாகும்.

படைத்: இல்லை மிஸ்டர் சின்னமலை! நன்கு எண்ணிப் பாருங்கள்; வீண் பிடிவாதம் வேண்டாம்.

சின்: பிடிவாதம் ஒன்றும் இல்லை. வீண்வாதமும் செய்யவில்லை. என் உள்ளத்தில் உள்ளதை, நான் மேற்கொண்டுள்ளது. எதுவோ அதைத்

---

## அண்ணாவின் தேர்தல் உவமை

கர்ப்பவதி குழந்தை பெறுவாள். மருத்துவச்சி உதவிதான் புரிவாள். அவளையும் பிள்ளை பெறச் சொன்னால் முடியுமா ?

ஆளும் கட்சிதான் சாதனை புரிய முடியும் ; எதிர்க்கட்சி குறைகளை எடுத்துச் சொல்ல முடியும் ; சாதனை புரிய முடியுமா ? அதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுங்கள்.





**உழுதலுத்த மக்கள் உதயசூரியன் கண்டு எழுந்து நடைபோடுகின்றனர்**

தான் விளக்கமாகச் சொன்னேன். நீங்கள் எல்லோரும் எங்கள் தாய் நாட்டை விட்டு உங்கள் நாட்டுக்குக் கப்பலேறுவதாகச் சொல்லுங்கள். நான் உங்கள் நாட்டுக்கே வந்து, நீங்கள் காலால் இடும் வேலையைத் தலையால் செய்கிறேன். அங்கேயே வேண்டுமானாலும் இருந்து அங்கேயே இறந்து விடுகிறேன். இறக்கும் வரை உங்கள் அடிமையாகவே இருந்து இறக்கிறேன். நீங்கள் உங்கள் தாய் நாட்டுக்குச் செல்வதை யாராவது எதிர்த்தால் யாராவது என்ன? இத்தமிழ் நாடே ஒருங்கு எதிர்த்தாலும் நான் ஒருவனாக நின்று எதிர்த்து உங்களைப் பாதுகாப்பாக அனுப்பி வைக்கிறேன். தமிழன் சொன்ன சொல் தவறான்.

இங்ஙனமன்றி. நீங்கள் இங்கு இருக்க இந்நாட்டை ஆள, எம்மவரை அடிமைப்படுத்த மாட்டும் நான் ஒரு போதும் உடன்படேன். அதற்கு உடன்பாடாக இரேன் நான் உயிரோடு இருந்து கொண்டு, நீங்கள் இந்நாட்டில் இனிச் சும்மா இருப்பதைக் கூடப் பார்த்துக் கொண்டு சும்மா இரேன். இதுதான் எனது முடிந்த முடிவு திருப்பித்திருப்பி அதையே சொல்வதனால் பயன் இல்லை.

சின்னமலையில் வீரவுரையைக் கேட்டுச் சென்னைக் கோட்டை திடுக்கிட்டது; பல நாள் கூடிப் பேசியது. முடிவில் தூக்குத் தண்டனை விதித்தது.

**இடம் : சங்ககிரிக் கோட்டை**

சின்னமலை கைகால் விலங்குடன் தூக்கு மேடையில் நிற்றல்.

படைத் : மிஸ்டர் சின்னமலை! தப்பாக நினைக்கக் கூடாது இது கல்மனத்தையும் கலங்கச் செய்யும் நேரம். உள்ளபடியே சொல்லுகிறேன். இப்போதாவது நான்கு எண்ணிப் பார்த்து ஒரு நல்ல முடிவுக்கு வாருங்கள் பிடிவாதம் வேண்டாம்.

சின் : நல்ல முடிவுக்கு வந்து தானே இந்த இடத்தில் வந்து நிற்கிறோம்? அந்நல்ல முடிவைத் தர இது தவறுமா என்ன? கோழையல்லவோ தூக்கு மேடையைக் கண்டு அஞ்சுவான்; கெஞ்சுவான்? வீரனுக்குத் தூக்கு மேடை வெற்றி மேடையன்றோ?

படைத் : இல்லை; உண்மையாகவே சொல்லுகிறேன் ஏதாவது கேட்டுக் கொள்ள வேண்டுமானால் கேட்டுச் கொள்ளுங்கள்.

சின் : (தூக்குக்கயிற்றை கையில் பிடித்தபடி) நானா? உங்களையா? என்னைத் தூக்கிக் கொல்லாதீர்கள்; நீங்கள் சொல்லுகிறபடி கேட்கிறேன் என்றா! இதைத் தவிர வேறு என்ன உங்களை நான் கேட்டுக் கொள்வதற்கிருக்கிறது? நீங்கள் ஏதாவது கேட்டுக் கொள்ளுங்கள் என்று அன்போடு கேட்டுக் கொண்டதால் இந்தத் தூக்குக் கயிற்றினிடத்தில் கேட்டுக் கொள்கிறேன். அது உங்கள் மறுபதிப்புத்தானே.

அன்பு கெழுமிய தூக்குக் கயிறே! வணக்கம். இந்நாட்டின் சொந்தக் காரணாகிய நீ, இந்நாட்டை ஆளப்பிறந்த நீ, இந்நாடு எவனுக்கும், இந்நாட்டார் இருக்குப் வரை இந்நாட்டையும் இந்நாட்டு மக்களையும் அடிமை கொண்டு அரசர்களாய் வாழ முனைந்துள்ள பகைவர் சிறையில் இருக்காதே. அது உன் போன்ற வீரனுக்கு அழகன்று. உன் பகைவரோ உன்னை வெளியில் செல்லவிட மாட்டார்கள். இனி நீ உன் தாய்நாட்டு மண்ணை மிதிக்க அவர்கள் மனமொப்பமாட்டார்கள். உன்மேல் அவர்களுக்கு அவ்வளவு அன்பு! இல்லை, வெளியில் செல்வதாகவே வைத்துக்கொள். மண்ணை மிதிப்பதாகவே வைத்துக்கொள்; இந்நாடும் உன் பகைவராகிய அவ்வயல் நாடர்க்கு அடிமைப் பட்டுவிட்டதல்லவா ? நீ அவ்வடிமை நாட்டின் மண்ணை மிதிக்காதே. நீ உன் பகைவருக்கு அடிமைப்படாமல் விடுதலை வீரனாக விளங்க இதோ நான் உதவுகிறேன்' என்று தக்க காலத்தில் உதவ முன் வந்துள்ள உனக்கு மறுமுறையும் தலை தாழ்த்தி வணக்கம் செலுத்துகிறேன். இது தமிழர் பண்பாடு. செய்நன்றி கொல்லும் கயமைத்தனம் தமிழர் பால் இல்லை. தமிழர் செய்ந்நன்றி மறவாச் செம்மையாளர்களென்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். காலத்தால் செய்யும் இந்நன்றியை என்றும் மறவேன். செய்யாமற் செய்யும் இவ்வுதவியை நான் எங்ஙனம் மறக்கமுடியும்? தலைவர் சொன்ன நல்ல முடிவைத் தந்து என்னை வாழ்விக்க வந்த உனக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன் ?

ஏ! தூக்குக் கயிறே! சற்று உற்றுக் கேட்பாயாக! எங்கள் மீது எங்கள் பகைவர்கள் கொலைக் குற்றம் சாட்டியுள்ளார்கள். அதனால்தான் நாங்கள் இங்கு வந்து நிற்கிறோம் என்பது உனக்குத் தெரியும். எங்கள்மேல் சாட்டப்பட்ட அக்கொலைக்குற்றம் தமிழ் மக்கள் மேல் சாட்டப்பட்ட குற்றமாகும். தமிழ் மக்கள் சார்பாகத்தான் நாங்கள் இங்கு வந்து நிற்கிறோம். நாங்கள் செய்த குற்றத்தைக் கருத்துடன் கவனமாகக் கேள்.

அண்டிப் பிழைக்க இங்கு வந்த அவ்வயல் நாடர்களை நாங்கள் அன்புடன் வரவேற்றோம்; 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் தமிழனுடைய பண்பாடு அது. இது முதற் குற்றம் முன்பின் அறியாத அவ்வயல் நாடர்க்கு எந்தாய் நாட்டில் கோட்டை கட்டிக்கொண்டு இருக்க இடந்தந்தோம். அது குற்றம். அவர்கள் விருப்பம் போல் வாணிகம் செய்யும் உரிமையை வழங்கினோம். அது குற்றம். வாணிகம் செய்வோர்க்குப் படை எதற்கு? முதலில் அவர்களைப் படை வைத்துக்கொள்ள விட்டது குற்றம். பின்பு படையைப் பெருக்கி வருவது கண்டும் பெருந்தன்மையோடு சும்மா இருந்தது குற்றம். வெளிநாடர்களாகிய அவர்களைக் கண்காணிக்க எங்கள் படையொன்றை வைக்காதது குற்றம். வேண்டுமென்றே இத்தனை குற்றங்களை அடுக்கடுக்காகச் செய்தால் அவர்கள் எப்படித்தான் பொறுத்துக்கொண்டிருப்பார்கள் பாவம்! பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டல்லவா ?

ஏ! தூக்குக் கயிறே! இன்னுங் கொஞ்சங் கேள். நான் அதிகமாகப் பேசி உனக்குச் சலிப்பை உண்டாக்க விரும்பவில்லை. வாழ வழியின்றி இங்கு வந்த அவ்வயல் நாடர்கள் இந்நாட்டு மக்கள் செல்வத்தைச் சுரண்டி இனிது வாழ்வதோடு அமையாது, இந்நாட்டை, இந்நாட்டின் சொந்தக்காரரை அடக்கியாளத் துணிந்தது முறையா? எனக்குச் சொந்தமான எனது நாட்டுக்குள் புகுந்து, எம்மின மக்களுக்குக் கொடுமை விளைத்த அவ்வயல் நாடரை அங்கு வரவேண்டாம் என்று தடுத்ததும், மீறி வரவே விரட்டியடித்ததும் கொலைக் குற்றம்! அயலார்களாகிய அவர்கட்குப் புக உரிமையிருக்கும்போது, சொந்தக்காரனாகிய எனக்குத் தடுக்க ஏன் உரிமையில்லை? அவர்கள் தீர்ப்பு எப்படியிருக்கிறது? வீட்டுக்குட் புகுந்த திருடரை, வீட்டைவிட்டுவிரட்டியடித்த அவ்வீட்டின் சொந்தக்காரனை, அத்திருடரை அவ்வாறு விரட்டியது குற்றம்; ஏறு தூக்குமேடை என்பது போலல்லவோ இருக்கிறது ? இது அவர்கள் நாட்டு நீதி போலும் !

'நாங்கள் மைசூர் மன்னரை வென்று பிடித்தோம். அதனால் கோவை எங்களுக்குச் சொந்தம். எங்களுக்குச் சொந்தமான நாட்டுக்குள் நீங்கள் எங்களை விடாமல் தடுத்தது குற்றம்' என்பார் எனில், நீங்கள் என்ன மைசூர் மன்னருக்கு உடன் பங்காளிகளா? அவர் உங்கள் பங்கைக் கொடுக்க மறுக்க, நீங்கள் அவரோடு போரிட்டு அவரைக்கொன்று உங்கள் பங்கைக் கைக்கொள்ள? அயல் நாடராகிய நீங்கள் மைசூர் மன்னரோடு போர் தொடுத்ததே குற்றமல்லவா ? இது என்ன உங்கள் நாடா? என்றாவது உங்களுக்குத் தொடர்புடையதா ? 'எங்கள் நாட்டில் ஆள்வதற்கு ஆளில்லை; ஆள்வோரில்லாமல் நாங்கள் அல்லற்படுகிறோம், அன்புகூர்ந்து வந்து எங்களை ஆளுங்கள்! என்று இந்நாட்டு மக்கள் அங்கு வந்து உங்களை அன்போடு அழைத்துக் கொண்டா வந்தார்கள்? வயிறு வளர்க்க இங்கு வந்தவர்கள் இந்த மண்ணை நினைப்பதே குற்றமல்லவா ?

ஏ! தூக்குக் கயிறே! என்று இல்லா விட்டாலும் என்றோ ஒரு நாளைக்கு இவ்வநீதி உலக நீதிமன்றம் ஏறியே தீருமல்லவா? அப்போது நீ முன் வந்து சான்று கூறி நீதியை நிலை நாட்டுவாயாக. அதற்காகவே இவ்வளவு தூரம் இதைஉன்னிடம் சொல்லிக் கொள்கிறேன்.

ஏ! சுறுக்குக் கயிறே! இன்னுமொன்று கேட்பாயாக. இவர்கள் வம்புக்கு எம் நாட்டின் மீது படையெடுத்து வந்தார்கள். நான் எதிர்த்துத் துரத்தினேன். என்பது குற்றமென்றே வைத்துக் கொள்வோம். இவர்கள் மைசூர் மன்னரோடு வம்புக்குப் போனது குற்றமல்லவா? நான் நினைத்திருந்தால் இந்தக் கோட்டை இருந்த இடத்தை இவர்கள் காண முடிந்திருக்குமா?

ஏ! தூக்குக்கயிறே! உனக்கு இன்று நல்ல விருந்து—இனிய விருந்து! பாலும் தெளிதேனும்

**உதிர்ந்து நிற்கும் முள்மரம் ஆனாலும் உதயசூரியன் கண்டால் சிரிக்காதோ ?**






## அண்ணாவின் தேர்தல் உவமை

காங்கிரஸ் கட்சி ஒரு முருங்கை மரம். அதில் தியாகிகள் எனும் முருங்கைக் கீரையையும், முருங்கைக்காயையும் பறித்து குழம்புவைத்துத் துவட்டியாகிவிட்டது.

இப்போது அங்கு கம்பளிப் பூச்சிகள் இருக்கின்றன. மரத்தில் இருக்கிறதே என்பதற்காக அதையுமா பிடித்துக் கறி சமைப்பார்கள் ?

பாகும் பருப்பும், கனியின் கலவையுல் கரும்பின் சாறும் கற்கண்டும் சர்க்கரையும், தெங்கின் பாலும் தெளிவும் கனியமுதும் யாழுங்குழலும் இன்னும் உலகிலுள்ள இனிமை அனைத்தையும் விட இனிமையான தமிழுயிர் எங்களுயிர்! இனிது உண்டு ஏப்பமிட்டு இன்புற்றிரு!

என்னருமைத் தமிழ்நாடே மூவேந்தர் முறைபுரந்த உன்னை இக்கொடுங்கோலர் கையில் ஒப்படைத்து விட்டு நான் போகிறேன். உன் மக்கள் இவ்வயல் நாடர் ஆட்சிக் கீழ் என்ன பாடு படப் போகிறார்களோ?

என்னருமைத் தமிழ்மொழியே! என்னை மன்னிக்க வேண்டும்; அறிமுகமில்லா அயல் நாடார் கையில் உன்னை ஒப்படைத்து விட்டுப் போகிறேன். பருவமடைந்ததிலிருந்து இது நாள் வரை அரசு வீற்றிருந்த நீ அரியணையிலிருந்து இறங்கி விடப் படுவாய்; தமிழ் மக்களாலேயே நீ புறக்கணிக்கப் படுவாய்; இவ்வயல் நாடர் உன்னை அடிமைச் சிறையில் வைத்து

## அண்ணாவின் தேர்தல் உவமை

காலையிலே பற்றவைக்கும்அடுப்பை மாலையிலே அணைத்து விடுவார்கள்; விடியும்வரை இருந்தால் தீப்பற்றிக் கொள்ளும்.

காங்கிரஸ் அடுப்பில் செய்ய வேண்டிய சமையல் வேலையான சுதந்திரம் பெறுவது முடிந்துவிட்டது. அதை அணைத்துப் போட்டிருக்கவேண்டும். அணைத்துப் போடாததால்தான் இன்று நாடே பற்றி எரிகிறது.






### அண்ணுவின் தோர்தல் உவமை

கிழவன் ஒருவனுக்கு 16 வயதுடைய அழகுப் பாவையை நிச்சயம் தருவார்கள் என்ற தைரியத்தில் இருக்கிருன். அவனுக்கு எப்படி அந்தத் தைரியம் வந்தது? அவன் பெட்டியிலிருக்கும் பணம் தான் அந்தத் தைரியத்தைத் தந்தது.

அதுபோல. பணத்தின் பலத்தை நம்பி காங்கிரஸ் எனும் கிழம், நாட்டின் எதிர்காலம் எனும் இளம்பெண்ணை அடைய விரும்புகிறது.

---

விடுவர். நீ எத்தனை நாளைக்கு அவ்வயல் நாடுக்கு அடிமையாய் அலையப் போகிருயோ? மான மதிப்பிழந்து, மதி யிழந்து, கெட்டு அவ்வயல் நாடுக்குக் குற்றேவல் செய்து எங்ஙனம் கொடி நிற்கப் போகிருயோ?

என்னருமைத் தமிழ்மக்களே! அயல் நாட்டர்க்கு உங்களை அடிமையாக்கி விட்டு நான் விடுதலை வீரனுக விளங்கப் போகிறேன். எனது இவ் விரண்டகச் செயலைப் பொறுத்துக் கொள்ளுங்கள், என் செய்வது? வஞ்சனை வென்று விட்டது. ஆம், நான் வஞ்சனைக் கிரையாகி விட்டேன்.

என் கன்னித் தமிழ் மக்களே கடைசியாக உங்களை ஒன்று வேண்டிக் கொள்கிறேன். இனி இந்த உலகமே வருவதானுலும் உயிரே போவதானுலும் தம்மினத்தவனரைக் காட்டி கொடுக்காதீர்! காட்டிக் கொடுக்காதீர்! தமிழ் மக்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாக வேண்டிக்கொள்கிறேன் வயிறு வளர்ப்பதற்காக மானத்தை விட்டு, மதிப்பை விட்டு, மதிகெட்டு அயலானுக்குத் தமிழினத்தைக் காட்டிக் கொடுத்துத் தமிழினத்

---

### அண்ணுவின் தேர்தல் உவமை

பெற்ற குழந்தையை வயல் வரப்புகளிலே கழுத்தை நெரித்துப் போடும் பாவியைப் போல், குலதர்மக் கல்வியைப்பற்றி கடைசி காலத்தில்தனக்குச் சம்பந்தம் இல்லாததுபோல நடித்தவர்தானே நிதியமைச்சர் சுப்பிரமணியம்.






## அண்ணாவின் தோர்தல் உவமை

சுறுசுறுப்பான இன்ஸ்பெக்டர் வந்தால் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களுக்கு ஆபத்து. சட்டசபையில் சுறுசுறுப்பாகப் பணியாற்றி அவர்கள் தவறுகளை எடுத்துச் சொல்வதால், என்னை எப்படியும் தோற்கடிக்க நினைக்கிறார்கள்.

தைக் களங்கமுடைய தாக்காதீர்! களங்கமுடைய தாக்காதீர்! களங்கமுடைய தாக்காதீர்!

சங்கத் தமிழ் மக்களே! எல்லோரும் ஒரு கொடிக் கீழ்ஒன்று கூடுங்கள்! ஒன்று கூடுங்கள்? ஒரு முகப் படுங்கள்! நமது பொதுப் பகைவரான வெள்ளையரை இந்நாட்டை விட்டு விரட்டுங்கள்! விரட்டுங்கள்! மறுமுறையும் தலைதாழ்த்திக் கேட்டுக் கொள்கிறேன். கட்டாயம் விரட்டுங்கள்! இதுவே உங்கள் முன்னிற்கும் முடிவான முதல் வேலை.

(தாழ்ந்த குரலில்) என் அருமைத் தமிழ்நாடே! என் அருமைத் தமிழ் மொழியே! என் அருமைத் தமிழ் மக்களே! நான் தங்களிடம் பிரியாவிடை பெற்றுக் கொள்கிறேன்; வருகிறேன், வணக்கம்!

*




## அண்ணாவின் தோர்தல் உவமை

நமது கழகம் அழகுள்ள பெண். அதற்குச் சீர்வரிசை தேவையில்லை. ஆனால், காங்கிரஸ் மூக்கும் முழியும் நோக்கும், போக்கும் குலைந்திருக்கிறது. அதனால்தான் அதற்கு அதிகப் பணம் கொடுத்து சீர் வரிசை செய்ய வேண்டியிருக்கிறது.

# தென்னாட்டுக் கலைகள்

## நாகரிக நாடு

சீருடைய நுண்கலைகள்
சேர்ந்திலங்கும் நாடொன்றே
பேருலகில் நாகரிகம்
பெற்றிருக்கும் நாடென்பர்;
காடும் மலைக்குகையும்
கைவிட்டு வாழ்வதற்கு
வீடும் பிறநலமும்
வேண்டும் எனும்நினைவு
மாந்தர் கருத்தில்
மலர்வதன்முன் நல்வளங்கள்
ஏந்தும் தமிழ்நாட்டில்
இந்நாட்டில் தென்னாட்டில்
ஓதும் கலைபலவும்
ஒவ்வொன்றாய்த் தான்வளர்த்து
ஏதும் குறைவின்றி
எங்கும் புகழ்மணக்க

கவிஞர் **முடியரசன்**



ஆயகலை அத்துணையும், அத்துணைக்கும் நூற்பகுப்பும்
தூய நெறிமுறையில் தோற்றுவித்து வாழ்ந்தவர்நாம்
நல்ல கலைவளர்த்து நாகரிக நாடென்று
சொல்லும் நிலைதன்னைத் தொன்றுமுதல் பெற்றிருந்தோம் ;

## சிற்பக் கலை

கல்லெடுத்தான் கைச்சிற் றுளியெடுத்தான் அக்கல்லில்
சில்லெடுத்தான் நல்ல சிலையொன்று கண்டெடுத்தான்
கற்பனையில் கண்டெடுத்த காதற் பொருளெல்லாம்
சிற்பமென ஆக்கிச் சிறப்பெடுத்தான் நம்முன்னோன் ;
கல்லைக் கலையாக்கும் கைத்திறனை நீள்கடல்மா
மல்லைக் கருங்குன்றும் மாறின்றிக் கூறிநிற்கும் ;
தென்மதுரைக் கோவிலுக்குள் தேர்வடிவக் கல்லெல்லாம்
நன்மதுர மெல்லிசையால் நாளெல்லாம் பாடிநிற்கும் ;
விண்ணெட்டும் கோபுரங்கள் விந்தைதரும் நற்சிலைகள்
உண்ணட்ட கற்றூண்கள் ஓங்கு மதிற்புறங்கள்
ஒவ்வொன்றும் காட்டும் உயிர்சிலைகள் நம்சிற்பச்
செவ்விதனைக் கூறிச் சிறப்பெல்லாம் பேசிநிற்கும் ;
தஞ்சைப் பெருவுடையான் தங்கும் தளியதனுள்
நெஞ்சைக் கவரும் நிலையில் நிமிர்ந்திருக்கும்
காளை வடிவாய கல்லருகில் செல்வோர்கள்
தோளெல்லாம் பூரிப்பர் தொன்மைத் தமிழ்மாந்தர்
சிற்பக் கலைத்துறையில் சேர்த்துவைத்த சீர்த்தியெலாம்
கற்பனையில் தேக்கிக் களிப்பார்கள் உண்மையிது ;

## கட்டிடக் கலை

வான முகட்டு வழிஏற வைத்தஒரு
ஏணி எனத்தோன்றும் எண்ணில்லாக் கோபுரங்கள்,
மாடங்கள், மாளிகைகள், மாற்றுயர்ந்த பொன்வேய்ந்தே
கூடங்கள், கொற்றவர்கள் கூடும் அரண்மனைகள்,
போர்யானைக் கூட்டம் புகுந்துவரும் நேர்வாயில்,
போர்கருதி யாரும் புகமுடியாச் சீர்வாயில்
மாற்றார் கடந்தறியா மாமதில்கள், இத்துணையும்
சாற்றுவோ கட்டிடத்து நுண்கலைக்குச் சான்றாக ;
விஞ்சும் எழிலால் வியப்பூட்டும் கோபுரத்தைத்
தஞ்சைப் பெரும்பதியில் தந்தமன்னன் சாய்ந்துவிட்டான்
ஆக்கிப் படைத்தானே அன்னவனும் சாய்ந்துவிட்டான்
தேக்குபுகழ் மட்டும் தினையளவும் சாயவில்லை
கோபுரத்தில் காணும் கொடுமுடியின் தன்னிழலும்
ஓர்புறமும் சாயவில்லை ஒப்பில்லை இக்கலைக்கே ;

## இசைக் கலை

நெஞ்சைக் கனிவித்து நெக்குருகச் செய்விக்கும்
விஞ்சைக் கலையாகும் விந்தை இசைக்கலையில்
ஒப்புயர் வில்லாமல் ஓங்குநிலை பெற்றிருந்தோம்
செப்புகின்ற சான்றுகளோ எப்பொழுதும் ஈங்குண்டு ;
காட்டில்வளர் மூங்கிலிடைக் கார்வண்டு போய்த்துளைத்த
தோட்டில் நுழைகாற்றுத் தோற்றுவித்த நல்லிசையைக்
கேட்டான் மனங்களித்தான் நாடோறும் கேட்பதற்கு
வேட்டான் எடுத்தான் வெதிரைத் துளைத்தான்

குழல் கண்டான் வாயைக் குவித்திசையை ஊதிப்
பழகி இனிதாக்கிப் பாருக்(கு) அளித்தவன்யார் ?
வேட்டைக் குதவிவரும் வில்லெடுத்து நாண்தொடுத்துப்
பூட்டித் தெறித்தான் புதிய ஒலிகேட்டான்
விண்ண என இசைத்த ஓசை வியப்பூட்டப்
பண்ணே எழுப்பும்யாழ் பண்ணி நமக்களித்தான் ;
வேட்டை யளித்த விலங்கினத்தின் தோலுரித்து
மேட்டில், உயர்மரத்தில் வீசி எறிந்துவிட்டான்
காய்ந்தெழுந்த தோலிடத்துக் காற்ருல் சிறுகொம்பு
தோய்ந்து தோய்ந் தாடுவதால் தோன்றியதோர் பேரோசை
அன்றே படைத்தான் அளப்பரிய தோற்கருவி
நன்ரும் இசைக்கருவி நாலுவகை யாய்ப்படைத்தான் ;
கூவும் குயில்கண்டான் கொக்கரித்துக் கூவிநின்ருன்
யாவும் இசையாகப் பாயும் நிலேயுணர்ந்தான் ;
பந்தென்றும் கும்மியென்றும் பாய்ந்தாடும் ஊசலென்றும்
வந்த விளேயாட்டில் மங்கையர்கள் பாடிடுவர்
ஏற்றம் இறைப்பார் இசைக்கின்ற பாட்டனைத்தும்
நாற்று நடுவோர்கள் நாவசைக்கும் பாட்டெல்லாம்
கொல்லேத் தினேயிடிக்கும் கோல்வளேயார் பாடுகின்ற
வள்ளேப்பாட் டெல்லாம் வளரிசையைக் காட்டாவோ !
சீராரும் தன்மகவைச் சின்னவொரு தொட்டிலிட்(டு)
ஆராரோ பாடுகின்ற அப்பாட்டுப் போதாதோ ?
ஒப்பாரிப் பாட்டுக்கோர் ஒப்புண்டோ ? அஃதேபோல்
எப்பாரில் கண்டீர்கள் ? ஈடில்லாக் கற்பனேயாம் ;

இரா அரங்கானல்

## ஓவியக் கலே

வீட்டுச் சுவரில் விளங்குமேற் கூரைதனில்
காட்டும் திறமெல்லாம் காட்டித் திரைதன்னில்
ஊட்டும் பலவண்ணம் ஊட்டி உயிரோவம்
தீட்டும் திறலோசனேத் தேர்ந்தெடுத்தே அன்னவனே
‘எண்ணுள் வினேஞன், என அழைத்தார் ஓவியச்
செந்நூல் படைத்துச் செழிப்படையச் செய்தார்கள்;



## நெய்தல்

பாலாவி என்றிந்தப் பாரோர் புகழ்ந்தேத்த
நூலாலே ஆடை நொடியிற் படைத்தார்கள்
பாவோ டிழையோடப் பஞ்சாலும் பட்டாலும்
ஓவா துழைத்தே உயர்ந்த கலைகண்டார்
நெய்தற் கலையாவும் நெய்தல் உரிப்பொருளாய்
எய்தாமல் ஏதோ இயக்கி வருகின்றோம்;

## இலக்கியக் கலை

கல்லைக் கலையாக்கிக் காடெல்லாம் வீடாக்கிச்
சொல்லிற் சுடரேற்றிச் சொல்லரிய காவியமாய்
ஆக்கிப் படைத்தான் அருங்கலைகள், ஆற்றலெல்லாம்
தேக்கிப் படைத்தான் தீந்தமிழின் பெட்டகமாய்,
காதல் சுவைத்திருக்கக் கண்டான் அகமென்று;
மோதும் பகைக்களத்து முன்னார் புறங்கண்டான்;
ஓதும் படியாய் உயர்ந்த புறம்கண்டான்
தீது சிறிதுமிலாத் தென்னாட்டான் நம்நாட்டான்;
நல்ல கலைவளர்க்கும் நற்கலைஞர் வாழ்ந்திருக்கும்
வல்லதிரு நாடிதை நீ வாழ்த்து.



# பொல்லாத ஆட்சியே! போ! போ!



ஆண்டுகள் நூறு கடந்துதான் உயிர் விட வேண்டுமென்பதில்லை. ஆனால், ஒரு மனிதனுக்கு நூறாண்டுகள் வாழ்நாள் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. ஒரு மனிதனாகிலும் சரியாக நூறாண்டுகள்வாழ்ந்து கடைசி வினாடியில் கண்களை மூடினான் என்றால் அதுவும் இல்லை. நூறாண்டுக்கு மேலும் பலர் பல

சிந்தனைச்சிற்பி
சி.பி.சிற்றரசு

நாடுகளிலே வாழ்ந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. ஏன்? நம் நாட்டிலேயே கருநடக மாநிலத்தில் மிகப் பெரிய மேதை சர்விஸ்வேரய்யா அவர்கள் நூறாண்டுக்கு மேலும் வாழ்ந்துக் கொண்டிருக்கிறார் அவர் இன்னும் பல்லாண்டுகள் வாழ்க என வாழ்த்துகிறோம். ஆக மனிதனின் வாழ்வின் எல்லை சீன எல்லையை விட சிக்கலானது தான்!

வாழ்நாள் மனிதர்களுக்கு மட்டிலும் என்பதில்லை. கட்சிகளுக்கும் இயக்கங்களுக்கும் கொள்கைகளுக்கும் ஆயுள் உண்டு என்பதை நாம் வாழ்கின்ற இந்த நூற்றாண்டில் நாம் வாழ்கின்ற தென்னகத்தில் பார்க்கின்றோம். 1925 முதல் 1930–வரை சுயமரியாதைக் கொள்கை கோபுரவாயிலில் நுழைந்து கர்ப்பக்கிரகம் வரையில் ஓங்கார சத்தமிட்ட நேரம். இந்து இதிகாசங்களான இராமாயணமும் பாரதமும் பாகவதர் கையிலிருந்து, பஜனை மேடைக்கு வந்த நேரம்! இருப்பதோசிறு குடுமி, அதற்கென்ன ஆபத்தோ என்று பார்ப்பனத் தோழர்கள் வைகறைத்துயிலெழுந்த உடனே வண்ணமுடியைத் தொட்டுப் பார்த்துக் கொண்டிருந்த நேரம்!

இவன் வாழ்வானா சீதையை விபச்சாரி என்கிறான். இராமனைப்பேடி என்கிறான். இராவணன் ஒருவனே வீரப்பெருமகன் என்கிறான் என்றெல்லாம் வைதிகள், அத்வைதிகள், வசிஷ்டாத் வைதிகள் முதற்கொண்டு முணுமுணுத்து முனிபூசை அறைகளெல்லாம் புல் முளைக்கும் காடாய்ப் போகும் என்று சிந்தைக் கலங்கிக் கொண்டிருந்த நேரம்.

துருக்கியிலே ஒரு முஸ்தபா கெமால், இங்கே ஒரு பெரியார். கெமால் வாழ்ந்த கோட்டத்தில் எல்லாரும் ஒரே இனம், எல்லாருக்கும் ஒரே அப்பா, எல்லாருக்கும் ஒரே நபிகள், எனினும் மூடப்பழக்கங்கள் மலிந்திருந்ததால், ஐரோப்பாவின் நோயாளி என்று துருக்கியை அழைத்தனர். பிறரால் வாரி இறைக்கப்பட்ட புழுதியைத்துடைக்க வேண்டுமென்று கிளம்பினான். ஒரே இனமக்கள் என்றமுறையில் அது அவனுக்கு எளிதாக இருந்தது. அந்த கெமாலுக்கு மற்றோர் வசதியுமிருந்தது. அதுதான் அவன் ஆட்சியைக் கைப்பற்றியது.

அந்த வசதிகள் ஒன்றுமில்லாதவர் பெரியார். எனினும் வேதபுராணங்களை, இதிகாசங்களை ஏன் குறளையே கூட தவறென்று செப்பியவர், வீட்டில் இருட்டறையிலிருந்தல்ல. விளக்கொளி முன்னால் ஆயிரமாயிரவர் கேட்டிருக்கச் சங்க நாதம் செய்தவர்தான் அவர். எனினும் அவர் நிலை மனம் அழிந்த பின் நிழல் மறைந்த கதையாய் முடிந்தது. இப்போது சுயமரியாதை இயக்கத்திற்கு என்ன வயது. 30–ஆண்டுகளிலே மறைந்தது. எந்த முகாமை கொடுமையாகத் தாக்கியதோ அந்த முகாமிலேயே தஞ்சம் புகுந்து விட்டது. எந்தக் கொடியை தன் கரங்கள் கொளுத்தியதோ அந்தக் கரங்களோ கொளுத்திய கொடியை ஏற்றி வைக்கிறது.

காலமே! உன் திருவிளையாடலை என்னென்றே புரிந்துக் கொள்ள முடியவில்லை.

கன்னக்கோல் எடுத்தவன் கையில் செங்கோலைத் தருகிறாய், இருட்டறையிலிருந்தவனை இமயத்தின் உச்சியில் ஏற்றுகிறாய், சங்கத்தை அமைக்கிறாய், சங்கத்தை அழிக்கிறாய், பரதேசியைப் பாராள வைக்கிறாய். பாராண்டவனைப் பரதேசியாக்குகிறாய் நல்லவனைக் கெட்டவன் என்று நாக்கூசாமல் சொல்கிறாய், கெட்டவனை நல்லவனென்பதற்குக் கோடி காரணங்களைக் கூறுகிறாய். பிழைபட்ட ஒரு தலைவன் பின்னாலேயும் ஒரு பத்து பேரையனுப்புகிறாய்- பிழையில்லாத தலைவனைப் பற்றிப் பிறரைப் பிதற்றச் செய்கிறாய். இதற்கும் கைதட்டுகிறாய், அதற்கும் கை தட்டுகிறாய். நீ பல நேரம் சிரிக்காமலிருந்திருக்கிறாய், சில நேரம் விழுந்து விழுந்து சிரிக்கிறாய், சிரிக்காததற்கு விலா வெடிக்கச் சிரிக்கிறாய், விழுந்து விழுந்து சிரிக்க வேண்டியதற்கு உதட்டின் ஓரத்தின் மட்டிலுமே சிரிக்கிறாய். திருமண வீடுகளிலே தீவட்டித் திருடர்கள், திருடர்கள் குகைகளிலும் திருமணக் கோலம். உன் கையின் எழுதுகோலில் மைவற்றுவதுமில்லை. அது ஒரு விநாடி ஓய்ந்து நிற்பதுமில்லை. உன் கோரைப்பற்களுக்கு இரையானோர் எண்ணிலடங்காதவர். இருக்கும் போது தாழ்த்தி இறந்தபின் வாழ்த்தியிருக்கிறாய்.

உனக்குக் கருணையில்லை என்றும் சொல்ல முடியவில்லை. கடினமனந்தானா என்றும் கொள்ள முடியவில்லை. கோபித்துக் கொள்ளாதே.—

எவ்வளவு பெரிய கீர்த்திக்குன்றத்தின் மேல் வீற்றிருந்த சீர்திருத்தவாதியின் சித்த வைராக்கியத்தைச் சிதைத்து சின்னா பின்னப் படுத்தி விட்டாய். அவருக்கு முன்னாலே சென்று வணங்கி வாழ்த்தி கழுத்தில் மலராரமிட்ட நீ, இன்று, எந்த வாய் துக்க நாளென்று சொல்லிற்றோ, அந்த வாயிலிருந்து, வந்தே மாதரத்தைக் கக்கச் செய்திருக்கிறாயே, இங்கே தான் உன்கபடத்தைக் கண்டு கலங்காமலிருக்க முடியவில்லை.

நீ இப்போது எங்கே நின்று கொண்டிருக்கிறாய், அதுவும் எங்களுக்குப் புரிகிறது.

பெற்றதை இழந்து விடுவோமா என்ற பேராசையின் பட்டாளத்திற்கும் இழந்ததைப் பெறுவோமா என்ற விடுதலைப் பட்டாளத்திற்கும் இடையே உன் கரங்களை வேகமாகச் சுற்றிக் கொண்டிருக்கிறாய். அந்த வேகம் வினாடிக்கு வினாடி வேகமாகச் சுற்றிக் கொண்டிருக்கிறது. பிப்ரவரியை நோக்கி ஓடிக் கொண்டிருக்கின்ற உன் கால்கள். ஓடு, ஓடு தடுக்கி விழுந்து விடாமல் ஓடு.

நீதியின் பேரால் அவர்கள் அதைப் பெற்றிருந்தால், பெற்றதை மற்றவர்க்குப் பங்கிட்டளித்திருந்தால், கடலளவு கண்ணீரைச் சிந்தும் மக்களின் கண்களில் கடுகளவு கண்ணீரைத் துடைக்கும் பெருங்குணம் அவர்களுக்கிருந்தால்? அவர்களே ஆளட்டும். ஓநாயின் ரத்தம் அதன் உடலில் பரவாமல் பசித்த புலிக்கு இறையாகும் கொடுமையை மக்கள் தடுத்து நிறுத்தும் வல்லமை பெற்றால், பொல்லாத ஆட்சியே போ, போ, மறைந்து விடு என்று சொல்ல நீ மக்களைத் தூண்டுவாய் என்று எங்களுக்கு நிச்சயமாகத் தெரியும்.

நாம் நீண்ட நாளைய நாகரீகத்தைப் பெற்றிருக்கிறோம் என்பதை நேருவே சொல்கிறார் இப்படி.

*Dravidians had a Long back ground Civilization Behind them-Nehru* காலமே நீ எங்கள் நாகரீகத்தை. மொழியைப் பண்பாட்டை கலையை, இலக்கியங்களை சாகாக் குறளை எங்களுக்குத்தா, இன்றேல், அதைக் காப்பாற்ற 10 லட்சம் கரங்கள் இருக்கின்றன. பார்த்துக் கொள்வோம்.

★

---

# ஜனநாயகத் தொட்டிலின் கதை!



ஜனநாயகத்தின் தொட்டில் என அழைக்கப்படும் இங்கிலாந்தில் ஜனநாயகம் வளர்ந்தவிதம், தனித் தன்மைவாய்ந்த ஒன்றாகும். கொஞ்சம் கொஞ்சமாக ஜனநாயகத்தின், முழு மணத்தையும் பெற்றுக்கொண்டனர், அந்த நாட்டினர்.

கி. பி. 1161, முதலாம் ஹென்றி இரண்டாம் ஹென்றி மன்னர்கள் ஜனநாயக வளர்ச்சிக்குப் பெரிதும் உதவினர். மக்களுக்கு சட்ட உணர்வை ஊட்டினர். அதிலும் குறிப்பாக இரண்டாம் ஹென்றி அடிக்கடி நாடெங்கும் நீதி விசாரணை சபையைக்கூட்டினான் நீதிவழங்குவதற்கு உதவிகரமாக இருக்கும்பொருட்டு, சான்றோர் சிலரை நியமித்தான். இதுவே 'ஜுரி'கள் நியமிக்கப்படும் முறைக்கு வழி கோலியது—எனலாம்.



கி.பி. 1215, நார்மன் மன்னர்களின் படையெடுப்பிற்குப்பின் மன்னர்களின் அதிகாரம் தலை தூக்கியது. 'மாக்ன கார்ட்டா' (பெரிய உரிமைச் சீட்டு) ஜான் மன்னனால் 1215-ல் கையெழுத்திடப்பெற்று அமுலுக்கு வந்தது. இதுவே பிரிட்டிஷ் அரசியல் சாதனத்தின் அடிப்படையாகும்.



மன்னன் விருப்பத்திற்கெதிராக மக்கள் உரிமை இதில் வற்புறுத்தப்பட்டுள்ளது. மன்னன் தன் விருப்பப்படி காசு செலுத்தாமல், சட்டப்படி ஆட்சி செலுத்தும்படி இந்த 'மாக்ன கார்ட்டா' வழிசெய்தது.

1295-ல், முதலாம் எட்வர்ட் காலத்தில், நாட்டிலுள்ள எல்லாருடைய கருத்தும் அறிய முயற்சி எடுக்கப்பட்டது. அதன்படி ஒரு மாநாடு (பார்லிமெண்ட்) கூட்டப்பட்டது. அரசனின் மேற்பார்வைக்குக் கீழ் முடிவெடுக்கும் அதிகாரம் தரப்பட்டது.

முதலில், பிரபுக்களுக்கே இந்தச் சபையில் மதிப்ப இருந்தது. மந்திரிகள்கூட பிரபுக்களிடமிருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

*1648*-ல் முடியாட்சியை ஒழித்து, குடியாட்சியை இங்கிலாந்து மக்கள் நிறுவிப்பார்த்தனர். இதற்கு கிராம்வெல் தலைமைவகித்தார். இந்த முறை சர்வாதிகாரத்திற்குத்தான் அழைத்துச் சென்றது. எனவே, மீண்டும் முடியாட்சி வந்தது.

இந்தப் பரிசோதனையில் இங்கிலாந்து மக்கள், மன்னனை, அரசியல் உறுதியின் சின்னமாக வைத்துக் கொண்டு, மற்ற ஆட்சிமுழுவதையும் பாராளுமன்றத்திற்குத் தருவது என்ற முடிவுக்கு வந்தனர்.

*1679*-ல் அரசன், தன் எதிரிகளுக்கு நீதிவழங்குவதில் காலதாமதம் செய்து, சிறையிலேயே அதிக நாள் இருக்கச் செய்வதுண்டு. எனவே. அந்த அநீதியை நீக்கும் முறையில் ஹேபியஸ் கார்பஸ் சட்டம் வந்தது. அதன்மூலம் நீதியில் ஏற்படும் தாமதம் தடுக்கப்பட்டது



*1689*—கிராம்வெல்லின் புரட்சிக்குப் பின் வந்த அரசர்கள் தாமே சட்டத்தை இயற்றி, பார்லிமெண்டிற்கு மதிப்புத்தராமல் இருந்தனர். இதை எதிர்த்து மக்கள் மன்றத்தின் கருத்து வளர்ந்தது. இரண்டாம் ஜேம்ஸ் காலத்தில் இக்கருத்து புரட்சி எரிமலையாக வெடிக்க விருந்தது. உடனே அந்த மன்னன் நாட்டை விட்டு ஓடிவிட்டான். அதன் பிறகு மன்னனின் அதிகாரங்களைக் குறைக்கும் மசோதா நிறைவேறிற்று.



*1807*—அடிமைகளை வைத்துக் கொள்ளக்கூடாது எனும் சட்டம் இந்த ஆண்டில் நிறைவேறிற்று. பிற நாடுகளும் அந்த முயற்சியில் இறங்காத வண்ணம் தடுத்தது,

*1841*—பார்லிமெண்ட்டிலுள்ள பெரும்பான்மைக் கட்சித் தலைவர் பிரதம மந்திரியாவதும், அவர் மந்திரிசபை அமைப்பதும், மந்திரி சபைமுடிவுக்கு மந்திரிகள் கட்டுப்படுதலுமாகிய கேபினட் முறை இந்தக் காலத்தில் தான் தோன்றிற்று.

*1832*—படிப்படியாக காமன்ஸ் சபையின் முக்கியத்துவம் பெருகிற்று. முதலில் சொத்து உள்ளவர்களுக்கு ஓட்டளிக்க அதிகாரம் இருந்தது, பின்னர், ஆண் பெண் எல்லோருக்கும் ஓட்டளிக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது, அதன் மூலம் காமன்ஸ் சபையின் முதன்மை பெருகிற்று. அதே போல் பிரபுகள் சபையின் முக்கியத்துவம் குறைக்கப்பட்டது, இதன் மூலம் பொது மக்களின் ஆட்சி—ஜனநாயகம் முழு உருவெடுத்தது.

---

## அண்ணாவின் தேர்தல் உவமை

காங்கிரஸ் கட்சியைக் காப்பாற்ற அபாரத் திறமை பெற்ற பெரியார் புறப்பட்டிருக்கிறார்.

பெரிய டாக்டர் நோயாளி வீட்டுத்திண்ணை உட்கார்ந்திருக்கிறார் என்றால் என்னபொருள்? நோய் அவ்வளவு கடுமை என்று அர்த்தம்.



# பாரதபுத்திரர்கள் ஆட்சியில்

1954-ம் ஆண்டிலேயே சீனர்கள் வட எல்லையில் சுமார் 15,000 சதுர மைல்களை ஆக்ரமித்துக் கொண்டனர்!

ஆனால் —

1959, ஆகஸ்ட் 13-ம் தேதிவரை பண்டிதநேரு இந்தத் தகவலை நாட்டிற்கும் பாராளுமன்றத்திற்கும் தெரிவிக்கவே இல்லை!

★

இதுதான் பாரதத்தின் மீதும், பாராளுமன்றத்தின் மீதும் காங்கிரஸ் வைத்திருக்கும் நம்பிக்கையா? ஜனநாயகத்திற்குக் காட்டும் மரியாதையா?

**வாக்காளர்களே!**
**பதில் சொல்லுங்கள்.**

★



# புஷ் போலீஸ்

ஆர். பி. மல்லாரி

அந்தமான் தீவினிலுள்ள செலுலார் ஜெயிலின் ஒரு பாகத்தில் அமர்க்களமாக இருந்தது — ஒரேயடியாகப் பாட்டும், கூத்தும், கேளிக்கையுமாக வெளுத்து வாங்கிக் கொண்டிருந்தார்கள். கலாச்சார விழாவில் அவர்கள் பங்கெடுத்துக்கொள்ளப் போகிருர்கள் அல்லவா!

செலுலார் ஜெயில் என்ருல், அங்கே கைதிகள் மாத்திரந் தான் இருக்கிருர்கள் என்று எண்ணிவிடக்கூடாது! தற்காலத்தில் அதற்கு "டிஸ்டிரிக்ட் ஜெயில்" என்ற பெயர் வழக்கத்தில் இருந்தபோதிலும், குற்றம் இழைக்காதவர்களும் அங்கிருக்கத்தான் செய்கிருர்கள்! அந்த ஜெயிலுக்கு ஏழு இறக்கைகள் (விங்ஸ்) இருந்தன. ஜப்பானியர்கள் மூன்றை அழித்துவிட்ட பிறகு, இப்போது மிஞ்சி இருப்பது நான்கு பகுதிகள்தான். இந்தப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான தனி அறைகள்! இவைகளில் இரண்டு பகுதிகளில் குற்றவாளிகள் இருக்கிருர்கள். மூன்ருவது பகுதியில் சர்க்கார் உத்தியோகம் பார்க்கும் 'பிரம்மச்சாரி'களும், நான்காவது பகுதியில், பாக்கிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு அகதிகளாக அங்கு போய்க் குடியேறினவர்களும் இருக்கிருர்கள்!

அந்த ஆண்டு கலாச்சார விழா அவ்வளவு கலகலப்புடன்ஆரம்பமானதற்குக் காரணம் அப்துல்லாதான். 'காலிகட்'டிலிருந்தவன் 'கேரளாவிலுள்ள காலிகட் அல்ல; அந்தமான் தீவுகளிலேயே'காலிகட்' என்றெரு இடம் இருக்கிறது—அங்கு சுதந்தரமாக வந்துவிட்டான். அந்த ஆண்டு விழாக் கொண்டாட்டத்தில் அவன் முக்கிய பங்கு கொண்டு, மிகவும்அக்கறையுடன் பாடுபட்டு வந்தான்.



அவன் பட்ட பாடு வீண் போகவில்லை. "அந்தமானின் சுதந்தர மனிதன்" என்றஅவனுடைய நாடகம் அவன் நடிப்பாலும், அவனுடைய திறமை மிக்க டைரெக்ஷனுலும் சிறப்புடன் விளங்கியது. மாயா பந்தர், ரங்கத், நிகோபார் போன்ற நாகரிகம் நிறைந்த முக்கியமான இடங்களைத் தவிர, ஆஸ்டினுபாத். துஷானுபாத், மேய்மியோ போன்ற கிராமங்களிலிருந்தும் ரசிகர்களும், ரசிகைகளும் கூட்டங்கூட்டமாக வந்து குழுமி இருந்தார்கள். போர்ட் பிளேரிலுள்ள ஒரே சினிமாக் கொட்டகையான 'மௌன்ட்பேட்டன்' டாக்கீசில் அன்று கூட்டமே இல்லை என்ருல் பார்த்துக் கொள்ளுங்களேன்! என்ன காரணமோ அந்தமான் தீவுகளிலுள்ளபலஇடங்களின் பெயர்கள் ஆங்கிலேயர்களின் பெயர்களை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன!

அன்று அவள் நடிப்பில்தன் மனத்தை இழந்தவள் ஷ்யூமிஎன்பவள். அவள்ஒரு பர்மிய முஸ்லிம் பெண்!

பர்மிய முஸ்லிம் பெண் அந்தமானுக்கு எப்படி வந்தாள் என்கிறீர்களா? ஒரு கதை உண்டு!

பர்மியப் பெண் ஒருத்தி பர்மாவின் கடல்களில் எறியப்பட்டாள். அவள் அப்போதுகர்ப்பமாக இருந்தாள் கிடைத்த ஒரு பலகைத் துண்டைப் பிடித்துக்கொண்டு மிகவும் சிரமத்துடன் போராடினுள். அந்தப் பலகை அவளை நிகோபார் தீவில்கொண்டுவந்துசேர்த்தது. அவள் பெற்றெடுத்தகுழந்தை தான் நிகோபார், அந்தமான் தீவுகளில் பர்மிய மக்களாகப் பெருகி வாழ்ந்துவருகிருர்கள்! —இதுதான் அங்கே பரம்பரையாகவழங்கிவரும் கதை!






தன்னுடைய மூக்கின் அழகை அளந்துவிட்டு ஷ்யூமி தன்னை ஒரு பர்மியப் பெண் என்று சொல்லிக்கொண்டாலும், அவளுடைய பாட்டன் ஒரு முஸ்லிம் என்று அவள் தந்தையான ஷா சொல்லக் கேட்டிருக்கிருள். பத்தொன்பதாம் நூற்ருண்டின் இறுதியின்போது, மலபாரில் "மாப்பிள்ளா ரகளை" நடந்ததே, அப்போது நாடு கடத்தப்பட்ட முஸ்லிம்களில் ஒருவர்தான் ஷாவின் தந்தை. அந்தமான் தீவை அடைந்த பிறகு அவர், மன வருத்தத்தைப் போக்க எதிர்ப்பட்டவள் ஒரு பர்மிய மங்கை. அவளைத் தம் மதச் சம்பிரதாயப்படி,தகுந்த சாட்சிகளைக் கொண்டு, மணந்து, தம்முடைய வாழ்க்கைத் துணைவியாகவும் மாற்றிக் கொண்டார்! அவருடைய ஒரே மகன்தான் ஷா—ஷ்யூமியின் தந்தை. ஷ்யூமியின் தந்தை எளிய நிலையில், மிகவும் எளிய நிலையில், தம் வாழ்க்கையை ஆரம்பித்து, படிப்படியாகமுன்னேறி செல்வம் திரட்டியவர். நிக்கோபாரில் பெரிய வியாபாரியாக இருந்துவரும் அக்கோஜி ஜாத்வித் என்பவரின் அந்தரங்க ஆட்களில் ஒருவராக இருந்து, அவருடைய ஆழ்ந்த அபிமானத்தைப்பெற்றவர்! நிக்கோபார் தீவு தான் தென்னைமரங்களும் பாக்கு

மரங்களும் மண்டிக் கிடக்கும் தீவு ஆயிற்றே! அதோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது கேரளாப் பிரதேசங்கூட சர்வ சாதாரணமாக ஒரு தோப்பைப் போலத் தோன்றும்! சர்க்காருக்கு ஏதோ ஒரு தொகையை ராயலடியாகக் கொடுத்து விட்டு, அக்கோஜி ஜாத்வித் கம்பெனியார் செல்வத்தைக் குவித்து வந்தார்கள். தமக்கு உண்மையாக உழைத்துவந்த ஹ்யூமியின் தந்தையான ஷாவுக்கும் தாராளமாக வாரிக் கொடுத்தும் வந்தார்கள். ஷாவும் பெரிய பணக்காரரானார். ஹ்யூமி மிகவும் செல்வாக்குடனும், செல்லத்துடனும், செல்வத்துடனும் வளர்க்கப்பட்டாள். சிறுவயதிலிருந்தே அவளுக்குப் பாட்டு, நாட்டியம், நாடகம் போன்ற கலைகளில் மாளாத ஆசை. தாயற்ற அவளை, அவள் தந்தையும் அவள் இஷ்டப்படியே வளர்த்து வந்தார்.

ஒருநாள் போர்ட் பிளேரியிலிருந்த தம் கம்பெனியின் ஆபீஸுக்கு ஷா போக வேண்டி இருந்தது. ஹ்யூமியும் உடன் வந்திருந்தாள். இருவரும் "மாரீன் ட்ரைவி"லுள்ள "ஹோட்டல் பிளெஸிங் கார்ட்"னில் தங்கினர். அதிக ஆழமில்லாத கடல் பிராந்தியமான "கார்பைன்ஸ் கேப்" என்ற இடத்திற்குப் 'பிக்னிக்' சென்றார்கள்; உல்லாசமாகப் பொழுதைக் கழித்தார்கள்; போர்ட் பிளேரில் பிரபல வியாபாரிகளாக இருக்கும் ஆறுமுகம், கிருஷ்ணசாமி, குருசாமி போன்றவர்களின் விருந்தாளிகளாகவும் இருந்தார்கள். ஆபர்டீன் பஜாரில் பர்மியர்கள் அதிகமாக வசித்து வந்த "பாபுலேன்" என்ற இடத்தைப் பார்க்க வேண்டுமென்று ஹ்யூமி விரும்பினாள். அவளுடைய தாயின் மூதாதையர்கள் பர்மியர்கள்தானே! ஷா அவளை அங்கு அழைத்துச் சென்றார். அதே பகுதியில் மலையாள முஸ்லிம்கள் நடத்திவரும் "பிஸ்மில்லாஹ் ஹோட்டலி"ல் திருப்தியாக உணவு உண்டார்கள். அவள் தந்தையின் வம்சத்தார்களில்லையா இந்த ஹோட்டலை நடத்துபவர்கள்!

அந்த ஹோட்டலில்தான் அவர் தம்முடைய ஆப்த நண்பர்களான மேவிலாலையும் ரத்தன்ஜித்தையும் சந்தித்தார். அவர்களும் உணவருந்த வந்திருந்தார்கள், அவர்கள் "ரே அண்டு கம்பெனி" அந்தக் கம்பெனியின் பிரபல ப்ளைவுட் பாக்டரி, "பம்பு ஃப்ளாட்" என்ற இடத்திலிருந்தது. அந்த இடத்திற்குப் போக போர்ட் பிளேரிலிருந்து கப்பலில் போனால் ஒரு மைல் தூரந்தான்; தரை மார்க்கமாகப் போனால் சுமார் ஒரு இருபத்தைந்து மைல் இருக்கும்!

அவர்கள் தங்கள் ஜீப்பில் அந்த பாக்டரிக்குப் போய்க் கொண்டிருந்தபடியால், ஹ்யூமியின் தந்தையையும் அழைத்தார்கள். அவர்கள் ஜீப்பில் போக விரும்பியதற்கு முக்கிய காரணம், அவர்கள் திரும்பி வரும்போது, மான் வேட்டையாட விரும்பியதுதான். வலை வீசி மானைப் பிடிப்பது அங்கு சர்வ சாதாரணமான விளையாட்டு. ஹ்யூமியும், தனக்கு ஒரு அழகான மான்குட்டி வேண்டுமென்று பலநாட்களாகச் சொல்லிக்கொண்டிருந்தபடியால், ஷாவும் இணங்கினார். ஆனால், ஹ்யூமி தானும் உடன் வருவதாகச் சொன்னாள்! அவள் தந்தைக்கு அழைத்துப் போக இஷ்டமில்லை. ஜீப்பில் போவதில் ஒன்றும் பயமில்லை என்றாலும், அந்த வட்டாரத்தில், அந்தத் தீவுகளின் ஆதிவாசிகளான 'ஜார்வாஸ்' என்ற மக்களில் ஒரு சிலர் உலவுவதாகவ தந்தி இருந்து வந்தது. இந்த விஷயத்தை ஹ்யூமிடம் அவர் சொல்லவில்லை. சொல்லிஇருந்தால் அவரையும் போகவிடாமல் அவள் தடுத்து இருப்பாள்!

போர்ட் ப்ளேரில், கடலுக்கு அடுத்தாற்போலிருக்கும் மிகவும் அழகான ஜிம்கானா கிரௌண்டில் அன்று விசேஷமான விளையாட்டுகள் இருப்பதாகவும், அதை அவள் காண வேண்டுமென்றும், அதற்குள் அவர் திரும்பி வந்து அவளை 'ஹோட்டல் பிளெஸிங்ட'னில் சந்திப்பதாகவும்அவர்சொல்லி விட்டு, தம் நண்பர்களுடன் கிளம்பினார். போகும்போது மான்களைப் பிடிப்பதற்கான வலைகளை வீசிவிட்டுச் சென்றனர். திரும்பி வரும்போது. அவர் நண்பர்கள் இருவரும் தங்கள் வலைகளில் அகப்பட்டிருந்த மான்களுடன் ஜீப் இருக்குமிடம் வந்தார்கள். ஆனால் ஷா திரும்பி வரவில்லை. அவருடைய வலையில் ஒளிந்து கொண்டிருந்த காட்டுமனிதனான ஜார்வானின் விஷம் தோய்ந்த அம்புக்கு அவர் இலக்காகி இறந்து கிடந்தார்! தங்கள் சொத்தான மானை வேட்டையாடுபவர்களை அந்த ஆதிவாசிகள் இப்படித் தான் வஞ்சம் தீர்த்துக் கொள்ளுகிறார்கள்!

விஷயம் தெரிந்து ஹ்யூமி கதறி அழுதாள்.

ஆனால் பயன்?

தாய் தந்தையற்ற அனாதையாக நின்றுவிட்டாள்!

நிறைய பொருள் இருந்தாலும், சொந்தம் என்று பந்தம் பாராட்ட அவளுக்கு உலகில் யாருமில்லை. 'பிஸ்மில்லா ரெஸ்டாரன்டி'ன் சொந்தக்காரர்களின் உறவினனான அபூபக்கர் அவள் உதவிக்கு வந்தான். அவள்பொருளின்மேல் ஆசை கொண்டல்ல; அவனும் நல்ல

பணக்காரன்தான்! அவளுடைய கவர்ச்சியான அழகில் மையல்கொண்டு, அவளுக்கு உதவ முன் வந்தான்.

ஷ்யூமி நிகோபார் தீவுக்குத் திரும்பிப் போகவில்லை. அங்கே அவளுக்குஎன்னவிருக்கிறது? தன் பால்ய சிநேகிதியான 'தின்தின்' என்பவள் மாயா பந்தரிலேயே இருப்பதை அறிந்தாள். அவள் வீட்டுக்குப் பக்கத்திலேயே, மரத்தாலான சுவர்களைக் கொண்ட ஒரு இரண்டடுக்கு மாடி வீட்டைக் கட்டிக்கொண்டு, அங்கேயே தங்கிவிட்டாள். இதையெல்லாம் செய்து கொடுத்தவன் அபூபக்கர்! அவன் இருதயத்தில் அவளுக்காக இருந்த அன்பு வளர்ந்துகொண்டே இருந்தது. ஆனால், அவன் அதை வெளியே சொல்லவில்லை. ஷ்யூமியும் அவனிடம் அன்பாகவே பழகி வந்தபடியால், 'உரிய காலம் வரும்!' என்று அவன் பொறுமையுடன் காத்திருந்தான்!

அவளும், கொஞ்சம்கொஞ்சமாகத் தன் தந்தையின் நினைவை மறந்து வந்தது போலக் காணப்பட்டாள். முதல் வருஷ ஃபாத்திஹாவின் போது தன் தந்தையை நினைத்துக் கதறி அழுதாள். அபூபக்கரும் தின்தினும் சமாதானம் செய்தார்கள். பிறகு இலேசாக மறந்து பொழுது போக்குகளிலும் கேளிக்கைகளிலும் கலந்து கொள்ளலானாள். அப்போதுதான் அப்துல்லாவின் நாடகத்தைக் காணும் வாய்ப்பும் அவளுக்கு ஏற்பட்டது.

அப்துல்லா சாதாரணஏழைதான். இன்னும் சரியாகச் சொல்லப் போனால், மிகவும் ஏழை! இந்தியாவில் இருக்க மனமில்லாமல் அந்தமான் தீவுக்கு வந்தவன். பத்தாவதுவரை படித்திருந்தாலும் ஒரு ரிக்ஷா இழுத்தாவது பிழைத்துக் கொள்ளலாம் என்றே அவன் வந்தான். காரணம், கேரளாவில் அவன் மனமார நேசித்த அவன் முறைப் பெண்ணை, அவனை உதாசீனம் செய்து, ஒரு பணக்கார கிழவனுக்கு மணமுடித்துக் கொடுத்து விட்டார்கள். ஏனெனில், அவன் கூத்தாடியாம்! நாடகம், கேளிக்கை, கலை என்றே தன் பொழுதை வீணாக்கி வந்தானாம்! இதனால் மனமுடைந்த அப்துல்லா 'ரிக்ஷா இழுத்தால் கூடப் பரவாயில்லை, கண் காணாத தூரம் போய்விட வேண்டும்!' என்று தீர்மானம் செய்து, ஒரு இருபத்தைந்து ரூபாய் டிக்கெட் எடுத்து எம். வி. நிக்கோபார் கப்பலில் ஏறி அந்தமான் தீவுகளுக்கு வந்துவிட்டான். பிறகு தான் அவனுக்குத்தெரிந்தது போர்ட் பிளேர் நகரத்தில் ரிக்ஷாவே கிடையாது, இழுக்க முடியாது என்று! அவ்வளவு பள்ளமும் மேடும் நிறைந்த ஊர் அது; வேறு என்ன செய்வது பிழைப்புக்கு? ஆசியாவிலேயே மிகச் சிறந்த, மரங்களை அறுக்கும் மில்களில் ஒன்று போர்ட் பிளேரில் இருக்கிறதல்லவா? அதில் ஒரு கூலியாளாகச் சேர்ந்து வேலை செய்தான் ஆனால் அவனுடைய திடகாத்திரமான தேகமும் விளையாட்டுத் திறனும், அவனுக்கு ஒரு நல்ல வேலையை விரைவில், போலீஸ் இலாக்காவில் தேடிக் கொடுத்தன! அவன் 'புஷ் போலீ'ஸில் சேராமல் தன் சமதத்தைக் கொடுத்தான். 'புஷ் போலீஸ்' என்பது அந்தமான் தீவுகளிலுள்ள பெரிய பெரிய காடுகளை காக்கும் போலீஸ் படை அந்தத் தீவுகளின் சொத்து காடுகள் தானே!

இதற்குப் பிறகு தான் அந்த வருடாந்திரக் கலாச்சார விழா நடந்தது. ஷ்யூமியின் மனதைக் கவரும் வகையில்கூட அவன் பிரமாதமாக நடித்து, எல்லாராலும் புகழப்பட்டான். சிறு பிராயத்தில், அவன் நடிப்பின் மோகங்கொண்டு, மேடைக்கு மேடை தெருக்கூத்தாடியைப்போல அலைந்து கொண்டிருந்ததால் தானே, அவன் அத்தை மகளைக்கூட



ஒட்டகக் கூட்டம் உழைத்து ஓய்ந்திடும் கூடம்! நிழற்படம் சாமி

அவனுக்கு மணம் செய்து கொடுக்க மறுத்தார்கள்!

இப்போது—

அதே நடிப்பு ஷ்யூமியைக் கவர்ந்தது!

அவனைப் பாராட்டும் வகையில். அவள் அப்துல்லாவுக்கு ஒரு விருந்து ஏற்பாடு செய்தாள். இந்த ஏற்பாடுகளை எல்லாம் செய்தவன் அபூபக்கர். ஷ்யூமியின் விருப்பமே அவன் விருப்பமாக இருந்தது!

இத்தகைய அரிய பாராட்டுதலை அப்துல்லா எதிர்பார்க்கவே இல்லை. அவள் எத்தகைய பணக்காரி இவனோ—

பார்ட்டி மிகவும் குதூகலமாக நடந்தது. ஷ்யூமி அவனிடம் மிகவும் அன்புடனும், வித்தியாசமின்றியும்பழகினாள். அவள் அவ்வளவு சாதாரணமாகப் பழகியது அவனுக்கு எல்லையற்ற வியப்பாகவும் பெருமையாகவும் இருந்தது.

இந்த முதல் சந்திப்பு, முதல் சந்திப்போடு நின்று விடவில்லை. அவனை அவள் தொடர்ந்து சந்தித்தாள். அப்துல்லாவிடம் ஷ்யூமிக்குத் தனி பற்றுதல் ஏற்பட்டது. அவனும் அவளிடம் பேசுவதில் மகிழ்வுகொண்டான். அவள் எளிமை அவனுக்குப் பிடித்திருந்தது. கலாச்சாரம் வெறும் உடையில் என்று பகட்டித் திரியும் பட்டாப்பூச்சிகள் மிகுந்த நாகரிக உலகில், ஷ்யூமி போன்ற பணக்காரி இவ்வளவு சாதாரணமாக அருந்ததை அப்துல்லாவினால் நம்பவே முடியவில்லை.

அபூபக்கர் இந்த இருவரின் சந்திப்பை ஏற்பாடு செய்து வந்தான். பஞ்சில் பரவும் தீப்பொறியைவிட நெஞ்சில் பொருமை ஜ்வாலை அதிக விரைவில் பரவிவிடும் என்பார்கள். ஆனால் அபூபக்கர் ஷ்யூமியின் மேல் கொண்டிருந்த பாசம் அவ்வளவு தூய்மையானதாக இருந்தது.

தனக்கு ஓய்வு இருக்கும் போதெல்லாம் அப்துல்லா ஷ்யூமிடம் பேசிக்கொண்டிருப்பான், இன்னும் சரியாகச் சொல்லவேண்டுமானால், அவள்தான் அவனைத் தேடி ஓடிவந்து விடுவாள். ஒரு படி அதிகமாகக்கூட அவள் சொன்னாள்—'இந்தப்போலீஸ் வேலை எதற்கு, அதை ராஜிநாமா செய்து விடலாமே' என்றுகூட ஒருநாள் அவனிடம் சொல்லி வைத்தாள்! ஆனால், அவனோ அதற்கு இணங்கவில்லை. அந்த புஷ் போலீஸ் பிரிவில் வேலை செய்து, ஆதிவாசிகளை அடக்கி, அவர்களை சர்க்காரிடம் விசுவாசம் கொண்டவர்களாக மாற்ற வேண்டுமென்பதைவிட, ஷ்யூமியின் தந்தையைக் கொன்றதற்குப் பழிவாங்க வேண்டும் என்பதே அவன் குறிக்கோளாக இருந்தது!

ஷ்யூமி அவனை மீண்டும் வற்புறுத்தவில்லை. ஆனால்முன்பிருந்ததைவிட இன்னும் நெருங்கிப் பழக ஆரம்பித்தாள்.

அறிவைப் பணக்காரர்களின் ஆபரணம் என்று சொல்லுவார்கள்; ஆனால் ஏழைகளுக்கு அதுதான் செல்வம். ஆனால் பணக்காரியான ஷ்யூமி அறிவைத் தான் தன் செல்வமாக மதித்திருந்தாள். அதனால் தான் அப்துல்லாவிடம் சிறிதுசிறிதாகத் தன் இதயத்தை இழந்து வந்தாளா?

அன்று அப்துல்லாவின் விடுமுறை தினம். 1960-ஆம் மாடலாக ஓடிக்கொண்டிருந்த புது பஸ்ஸில் அவனும் ஷ்யூமியும் சென்றுகொண்டிருந்தார்கள். அவள் சொந்தமாக ஒரு கார் வாங்க வேண்டுமென்று தான் விரும்பினாள்; ஆனால் இயலவில்லை. பிரைவேட் கார்களின் எண்ணிக்கைதான் அங்கு மிகவும் குறைவான தாயிற்றே! புதிதாக வந்திருந்த 'மன்' என்ற படத்தைப் பார்க்கவேண்டுமென்று ஷ்யூமி விரும்பியபடியால், அப்துல்லா அவளோடு சென்று கொண்டிருந்தான். 1957-ஆம் ஆண்டு 'சிப்பாய்க் கலகத்தின் விளைவாக எத்தனையோ வீரர்கள் அந்தமானுக்குக் கடத்தப்பட்டார்கள். அவர்கள் ஞாபகார்த்தமாக ஒரு ஸ்தூபி இப்போது இருக்கிறது. அதைக் கடந்து அந்த பஸ் சென்ற போது, அப்துல்லாவுக்கு என்னென்னமோ நினைவுகள்! அவர்கள் வீரர்களாக அங்கு வந்தார்கள்; இவனோ அடிமை வேலை செய்ய அந்தமானுக்கு வந்திருக்கிறான்! அவன் அத்தை மகள், அவன் உள்ளத்தைத் திருடியதற்காக, இவனுக்கு அந்தமான் தண்டனை! சுலைமானின் மகள் கலைமான் இவனுக்குக் கிடைக்காததால் இவன் அந்தமானுக்கு வரவேண்டி இருந்தது!.........

ஷ்யூமியின் மனதிலோ வேறு எண்ண அலைகள்—படம் முடிந்ததும் அவனைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று உண்ணச் செய்ய வேண்டும்! காய் கறிகளும், ஆட்டிறைச்சியும் சற்று அதிக விலையில் விற்றாலும் அவைகளை வாங்கிப் பிரத்யேகமாக உணவைத் தயாரிக்கும்படி தன் சமையற்காரியிடம் சொல்லி வந்திருக்கிறாள். மலிவானமான் இறைச்சி தின்று தின்றுதான் சலித்துவிட்டதே! பாலின் விலை அதிகமாக இருந்தபோதிலும், ஸ்பெஷல் பால் பாயஸம் செய்யவேண்டுமென்று உத்திரவு போட்டிருந்தாள். ஏனென்றால், அப்துல்லா பால் பாயாபத்தை விரும்பிச் சாப்பிடுவதை அவள் பார்த்

திருக்கிருள் சிநேகிதி தின்தினும் வருவாள்; அபூபக்கரும் வருவான். அவர்கள்மூலமாக, தன் இருதயத்தில் இது கரை பாதுகாத்து வந்த தன் எண்ணத்தை, அன்று அப்துல்லாவிடம் தெரிவித்துவிட வேண்டுமென்றும் தீர்மானம் செய்திருந்தாள். அபூபக்கரோ இன்னும் ஷ்யூமியை நம்பி, ஷ்யூமிக்காகக் காத்திருந்தான்!......

படம் முடிந்தது—

இருவரும் ஷ்யூமியின் வீட்டிற்குச் சென்ருர்கள். தின்தினும் வந்திருந்தாள். அபூபக்கரும் இருந்தான்.

விளையாட்டுப் பேச்சு, சிரிப்போடு, விருந்து ஆரம்பமாயிற்று. அதோடு பெரும் மழையும் பிடித்துக் கொண்டது! அந்தமான் தீவுகளில் மழைக்கா பஞ்சம்!

"கல்யாணம் என்பது என்ன தெரியுமா? ஒருவர் மனத்தை மற்றவர் திருடுவதால் பெறும் பரிசு! அது ஆயுள் தண்டனை!" என்று தின்தின் ஆரம்பித்தாள்.

அந்தமான் தீவுக்கு வந்துமா ஆயுள் தண்டனை விடவில்லை?" என்று அப்துல்லா சிரித்தான்.

"அவள் கல்யாணத்தைப் பற்றிச்சொல்லுகிருள்" என்று வேண்டுமென்றே, கல்யாணம் என்று சொல்லும் போது, அழுத்தமாகச் சொன்னுள் ஷ்யூமி!

"ஆமாம்! கல்யாணம்!!... அது ஒரு தும்மல் போன்றது! எப்போது வரும் என்று சொல்ல முடியாது!!" என்ருன் அப்துல்லா.

"உங்களுக்கு ஒரு பெண் மேல் காதல் என்று வைத்துக் கொள்ளுங்கள்!......" என்று தின்தின் சொல்லுமுன், "காதலா!" என்று 'கடகட' வென நகைத்தான் அப்துல்லா.

"ஏன் காதல் கொள்வது தவரு?"-ஷ்யூமியின் கேள்வி!

"காதல் என்பது என்ன தெரியுமா? 'ஆத்மா' என்ற வீட்டுக்காரரிடம் வாடகைக்குக் குடி இருக்கும் பொறுப்பற்ற குடித்தனக்காரன்தான் காதல்! விலகும்போது, வீடு என்ன பாழடைந்து, சின்னு பின்னம் அடைந்து விடுகிறது!..."

"உலகில் வந்த பத்து மரக்கால் பேச்சில், பெண்கள்தான் ஒன்பதரை மரக்காலை எடுத்துக் கொண்டார்கள் என்று எண்ணி இருந்தேன். நீங்கள் பேசுவதைக் கேட்டால், ஆண்கள்தான் ஒன்பதரை மரைக்காலை எடுத்துக் கொண்டார்களோ என்று எண்ணவேண்டி இருக்கிறது!" என்று அப்துல்லாவைப் பார்த்து தின்தின் சிரித்தாள்!

பேச்சுத் துணையோடு விருந்து இதாக முடிந்தது.

மழை இன்னும் கொட்டிக் கொண்டிருந்தது! ஷ்யூமிக்கு எல்லையற்ற மகிழ்ச்சி. அப்துல்லா இன்னும் சற்று நேரம் தங்கி இருக்க இயற்கையே உதவுவதுபோல எண்ணிக் கொண்டாள்!

இறுதியில், ஷ்யூமியின் இருதயத்தோடு ஒட்டி இருந்த எண்ணத்தைப் பற்றி தின் தின் அப்துல்லாவிடம் சொல்லிவிட்டாள்.

அப்துல்லாவைவிட அபூபக்கருக்குத்தான் தூக்கிவாறிப்போட்டது அப்துல்லா ஒன்றும் தெரியாதது போல பாவனை செய்து வந்தாலும், ஷ்யூமியின் எண்ணத்தைப்பற்றி ஜாடைமாடையாக அறிந்திருந்தான். அபூபக்கரோ இதை எதிர்பார்க்கவே இல்லை. இதைக் கேட்டதும் ஒரு கணம் திணறிவிட்டான். ஆனால் பொருமை உணர்ச்சியால் பொசுங்கவில்லை. ஒரு பெண்ணை அவள் மனதுக்கு மாருக, பலவந்தமாக அடைவதில் பயனில்லை என்று அறிந்து, நடந்து கொண்டான். அவன் மனதில் வீசிய புயல் வெளியில் தெரியவில்லை.

வெளியிலும் இயற்கையின் சீற்றம் சற்று குறைந்தது; மழையும் ஓய்ந்தது. அப்துல்லா, வரவிருப்பமில்லாமல் வெளியே வந்தான். ஷ்யூமியைவிட, அப்துல்லாதான் இந்தச் செய்தியைக் கேட்டு பூரித்திருந்தான் என்பது பேதை அவளுக்கு எப்படித் தெரியும்? அவன்

## இந்தக் கை



இது ஆப்பிரகாம் லிங்கனின் கை. தம் மேஜை மீது இருக்கும் இதைப் பார்க்கும் போதெல்லாம் பண்டித நேருவுக்கு அரசியல் உறுதி பிறக்குமாம்!

அத்தை மகளை மறக்கச்செய்தது ஷ்யூமியின் தூய்மையான அன்புதானே? இப்போது ஷ்யூமியை விட்டுப் பிரிவது மனதிற்கு மிகவும் கஷ்டமாக இருந்தது! ஆனால், மணந்து கொள்ளு முன் அங்கு தங்கி இருக்கவும் அவன் மனச்சாட்சி இடந்தரவில்லை! மனச்சாட்சி குத்திப் பார்க்கும் என்பது முள்தானே! இந்தக் காலத்தில் இதனால் காயமடையவர்கள் வேண்டுமானால் அரிதாக இருக்கலாம். ஆனால் அப்துல்லாவோ, அதனால் காயமே படவிரும்பாத உண்மை முஸ்லிமாகவே வாழ்த்து வந்தான்.

அடுத்தநாள்—

அவன் கான்வாயுடன் காட்டிற்குள் போகவேண்டி இருந்தது. ஓங்கிஸ், ஷாம்பென் போன்ற காட்டு மக்களில் யாவோ சிலர் எல்லையில் திடீரென்று தொல்லை கொடுக்க ஆரம்பித்து விட்டதாகத் தகவல் வந்து அவர்களை அடக்க உடனே ஒரு 'கான்வாய்' புறப்படவேண்டி இருந்தது. அதோடு இவனும் சென்றான்.

ஆனால் —

போனவன் திரும்பவில்லை!

அந்தக் காட்டு மக்களுக்கு ஆசை காட்டித் தங்கள் வலையில் வீழ்த்த அந்தப் போலீசார், மிட்டாய், சிகரெட், நெருப்புப்பெட்டி போன்ற பொருள்களை அவர்கள்வழக்கமாக வரும் வழியில் வைத்து விட்டு வருவார்கள். அதை அந்தக் காட்டு மக்கள் எடுத்துக் கொண்டு, இந்த நன்றியறிதலுக்காக, தொல்லை ஏதும் கொடுக்காமல் இருப்பார்கள். பிறகு சர்க்கார் ஊழியர்களோடு.... ஊழியர்களாகவும் சேர்ந்து விழுவார்கள். இப்படித்தாள் அவர்களில் ஒரு சிலரை இந்த புஷ் போலீஸார் பிடித்திருந்தனர். இந்த வகையில், அந்தக்காட்டு மக்களுக்காக தின்பண்டங்களையும் மற்றவைகளையும் வைக்க அப்துல்லாவெகு தூரம் காட்டிற்குள் சென்று விட்டான். அவன் திரும்பி வரவே இல்லை, உடலும் கிடைக்கவில்லை.

ஷ்யூமி, பாவம் அவனுக்காகக் காத்து நின்றுகொண்டிருந்தாள்.

அவள் தந்தை எந்தவகையில் அவளிடமிருந்து பிரிக்கப்பட்டானே, அதேவகையில் யாரை அவள் கணவனாக வரித்தாளோ அவனும் செத்துமறைந்தான் என்பது அவளுக்குத் தெரியாது, அபூபக்கர்தான் அவளிடம் ஒரு பெரிய பொய்யைச்சொல்லி வைத்திருக்கிறானே! இந்திய சர்க்கார் ஏதோ ஒரு முக்கியகாரணமாக அவனை இந்தியாவுக்கு அனுப்பி இருக்கிறார்களாம்! அவன் எம். வி. அந்தமான் என்ற கப்பலில் சென்றுவிட்டானும்!! விரைவில் திரும்பிவருவானும்! வேலையெல்லாம் முடிந்த பிறகு!!!

உண்மையைச் சொன்னால் ஷ்யூமியின் இருதயம் தாங்காது என்று அபூபக்கருக்குத் தெரியும்.

"நான் அந்தமானில்இருக்கும்போதுஇந்தியா அல்லவா கடத்தப்படவேண்டிய இடமாக இருக்கவேண்டும்!" என்று புன்னகையுடன் சொன்ன ஷ்யூமி, அப்துல்லா அவசியம் திரும்பிவந்து தன்னை ஏற்றுக்கொள்வான் என்று காத்துக்கொண்டிருந்தாள்!

அபூபக்கரோ—

ஒரு உண்மைச் சகோதரனாக அவளிடம் நடந்துவந்தான். தங்கையின் மனம் நோகாமல்பார்த்துக்கொள்ள வேண்டியது அவன் கடமையல்லவா?

'அப்துல்லா இறந்துவிட்டான்!' என்று சொல்லி அவன் அவளை மணக்கமுன் வந்திருக்கலாம், ஆனால், விருந்துநடந்த அன்று தன்னை ஷ்யூமியின் சகோதரனாக எண்ணிவிட்டபிறகு, மீண்டும் இப்படிநினைத்தால் மனிதனுக்கும்மிருகத்திற்கும் என்னவித்தியாசம்? ஆணும் பெண்ணும் நெருங்கிப்பழகினால், கேவலம் ஒருவகை அன்பாகத்தானு இருக்கவேண்டும்? சகோதரப்பாசமாக இருக்கமுடியாதா?

அடுத்த ஆண்டுவிழா ஒருவித கோலாகலமுமின்றி 'சப்'பென்று நடந்தது.

"இந்த ஆண்டுக்குப் 'அவர்' வந்துவிடுவார். நாங்கள் இருவரும்சேர்ந்து மிகப் பிரமாதமாக நடத்திவிடுவோம்!" 'என்றுஷ்யூமி சொல்லிக் கொண்டிருந்தாள்! அபூபக்கர் செய்வதறியாமல் திணறிக்கொண்டிருக்கிறான் அவன் எங்குபோய் அப்துல்லாவைக் கொண்டுவருவான்?

அவன் மனச்சாட்சி தினமும் குத்திக்குத்தி அவனைச் சித்ரவதை செய்து கொண்டு வந்தது. அவன் செய்யாத குற்றத்திற்கு! செய்த தியாகத்திற்கு!!

—

நமது மேயர்கள்



அ. பொ. அரசு



அப்துல்காதர்





குசேலர்



சிவசாங்கரன்



தேவராசன்

# துணை மேயர்கள்



செல்வராசன்



வேதாசலம்



# தலைவன்

ஈராயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம்! குறுநில மன்னரும், முடிகொண்ட வேந்தரும் அறநெறி போற்றி அரசாண்ட காலம்! ஆடவர்க்கு வீரமும், மகளிர்க்குக் கற்பும் — மாட்சி தந்த நிலை. இருபாலரிலும் கற்றோர் பலர்.



# மாட்சி

மகளிர் பலர் கற்றவராக — புலமை நிரம்பியவராகத் திசழ்ந்தனர். அவருள்ளும், குறமகள் ஒருத்தி. இளவெயினி — இளையவளான எயினி — என்னும் இனிய பெயருடையவள். ஏறைக் கோன் என்னும் தலைவனே அவள்



பாடினாள். அவன் பெருமையையும் புகழையும் நிலைபெறச் செய்தாள்.

ஏறைக் கோனின் இயல்பும் சிறப்பும் இவையெனப் புகன்றாள். 'தனக்கு வேண்டியவர்கள் தனக்கொரு தவறு செய்யின் அதைத் தாங்கிக் கொள்ளுதலும், பிறருடைய வறுமைத் துன்பத்தைக் காணுங்காலை, அந்நிலை தோன்றாது தடுக்க இயலாமைக்குத் தான் நாணமடைதலும், போர்க்களத்தில் - படையிடையே பிறர் பழிப்பதற்கு இடமில்லாத துணிவுடையவனாக விளங்குதலும் அரசர்கள் அமர்ந்துள்ள அவைக்களத்தின் தலை நிமிர்ந்து புகுதலும் பிற தலைவர்கட்கு இயல்வதல்ல. எம்முடைய தலைவன் — ஏறைக் கோனுக்கே இவை இயல்பாம்— என்று குறமகளின் பாட்டு கூறுகின்றது.

''தமர் தன் தப்பின் அது நோன்றலும்
பிறர்கை யறவு தான் நாணுதலும்
படைப்பழி தாரா மைந்தினன் ஆதலும்
வேந்துடை யவையத்து ஓங்குபு நடத்தலும்
நும்மோர்க்குத் தகுவனவல்ல எம்மோன்
.....................
பெருங்கல் நாடன் எம் ஏறைக் குத் தகுமே.''

'முடியரசு விளங்கிய காலத்தில் குறமகள் பாடிய பாட்டில் தலைவனுக்குத் தரப்பட்டுள்ள இலக்கணம் குடியரசு அமைந்த இக்காலத்திலும் குடிமகன் எவனும் ஒரு தலைவனிடம் எதிர்பார்க்கக் கூடிய சிறப்புக்களாகவே உள்ளன. அந்நாளைக்குப் பொருந்தியது இந்நாளைக்கும் பொருந்துவது காணலாம்.

தன்னைச் சார்ந்தோர்-தமது அறியாமையாலேனும், அகம்பாவத்தாலேனும், தமக்கு ஒரு தீமை செய்யக் காணினும், அது தனது குறிக்கோளை — இலட்சியத்தைச் சிதைப்பதாகாதெனின் — பொது நலத்துக்கு உலை வைப்பதல்லவாயின்— அதனைப் பொறுத்து-பின்னும் அவரிடம் காட்டும் அன்பாலே-ஆதரவாலே அவரையும் நாட்டுக்குப் பயன்படச் செய்யும் வண்ணம் பொறுத்தலே தலைமைக்குச் சிறப்பாகும்:—அது. ''தமர் தற்றப்பின் னது நோன்றலும்'' என்பது.

பிறருடை வறுமைத் துன்பத்தைக் காணும் காலை—அது என்றென்றும் தோன்றாதிருக்கச் செய்வதையே, அதற்கேற்ற சமூகப் பொருளியல் வாழ்வை அமைத்துத் தருவதையே நோக்கமாகக் கொண்டு பணியாற்றும் ஒருவன்—அந்நிலையை ஏற்படுத்தாமைக்கு நாணுதல் இயல்பன்றோ! வளம் ஒருபக்கம் நெல்வயல்போலே—வறுமை மறுபக்கம் முட்புதர் போலே என்றால் - காண்பவர் நாணவேண்டுமன்றோ? சந்தனக் கிண்ணம் கையிலே—சகதியும் சாணியும் காலிலே என்றாலும் தலை குனிவோமன்றோ? அதே போன்று சமுதாயம் என்னும் உடம்பிற்குத் தன்னை உயிராக அமைத்துக்கொண்ட தலைவன்—அந்த உடம்பின் ஒரு பக்கத்தில் வளமென்னும் சவ்வாது பொட்டு—மறு பக்கத்தில் வறுமையெனும் சிரங்குப் புண் என்றால் வருத்தம் விளையாதோ? அந்த உணர்ச்சி சிறப்பதையே—

''பிறர்கை யறவு தானாணுதலும்'' என்பது புலப்படுத்துகின்றது.

குறிக்கோள் வெற்றிபெற—தான் கண்ட இலட்சியம் நிறைவெய்த—எத்தகைய இன்னலுக்கும் இழப்புக்கும் துயருக்கும் அழிவுக்கும் தன்னை ஒப்படைத்தாகவேண்டும் ஒரு தலைவன். அறப்போரில் அஞ்சாமையும்—விளைவுக்குக் கலங்காமையும்—சூதான முறையில் தான் மட்டும் தப்பித்துக்கொள்ளாமையும் — அனைவருக்கும் ஒத்தது எனக்கொத்தது என்னும் துணிவுடைமையும்—புறமுதுகிடாமையும்—ஒதுங்காமையும் பின் வாங்காமையும் ஆகிய இயல்புகள் ஒரு தலைவனுக்கு இன்றியமையாதவை. இதனையே ''படைப்பழி தாராமைந்தினனாகலும்'' என்னும் வரிவிளக்குகின்றது.

ஒரு தலைவன் தனது நெறியாலும் நேர்மைத் திறத்தாலும், நெஞ்சுறுதியாலும், அறிவாற்றலாலும் பிற தலைவர்களிடையே தாழ்வு மனப்பான்மையின்றிப் பீடுநடை போடவேண்டும். தனது பெருமைக்கும் பொறுப்புக்கும் ஊறு இன்றி நடந்த எவரும் தலை நிமிர்ந்து நிற்பர். உறுதியுடன் உரையாடுவர். நம்பிக்கையுடன் செயல்படுவர். அதிலும் அறிவாற்றலால் தெளிவுடைமையால் கொள்கைவலிவால் தலைவர் ஆக அமைந்தோர்-எந்த அவையிலும் சிறப்புற்று விளங்குவர். அதனையே, ''வேந்துடையவையத்து ஓங்கு நடத்தலும்'' என்றாள் இளவெயினி.

இவையனைத்தும் ஒருவரிடத்தே ஒருங்கியைந்து விளங்குவது எளிதோ? அன்பு, இரக்கம், வீரம், அறிவு, ஆற்றல், தியாகம், கொண்டு இவற்றொடும் கூடினால் அன்றோ-ஒரு தலைவன் இத்தகையவனாதல் கூடும்? அப்படி ஒரு தலைவன் இந்நாளும் உண்டென்பதை எண்ணி மகிழுகின்றவருள் நானும் ஒருவன்,

அப்படி ஒருவனும் எவனுண்டு இக்காலத்தில் என்பார்க்கு, நீர் அறிந்தவருள் ஒருவரும் இல்லை போலும், என்செய்வது? என்று விடையளித்து, நானறிந்தவருள் உளனொருவன், அத்தகு ஆற்றல் மிக்கோன் மாட்சிமைப்பட்டோன் என்று கூறிடக் கருதுவேன் நான்.

இளவெயினி கூறுகிறாள் — இச் சிறப்புகள்,

நும் மோர்க்குத் தகுவனவல்ல
வெம்மோன்
பெருங்கல நாடனெம்மேறைக்குத்
தகுமே'' என்று. அதே வகையில், அப்படிப்பட்டவன் இன்றுளனே என்பார்க்கு—

நும் மோர்க்குத் தகுவன வல்ல-
எம்மோன்
திருவிட நாடன் எம் அறிஞனுக்
குத்தகுமே'

என்று பதிலிறுப்பாம்.

திராவிடத்தின் வழிகாட்டி—தென்னகத்தின் விடிவெள்ளி—மறுமலர்ச்சியின் தூதுவன்—உரிமை வாழ்வின் எழுகதிர் என விளங்குபவனன்றோ நமக்குக் கிடைத்த பண்புமிக்க தலைவன்! தமிழக மக்கள்—'அண்ணா' என்று அழைப்பதில் காணும் மகிழ்ச்சியும்-பெருமிதமும் சொல்லுந் தரமாமோ?

'குற்றம் பார்க்கில் சுற்றமில்லை' என்று உணர்ந்து, 'அன்பெனப் படுவது தன் கிளைசெறாமை'எனக் கொண்டு, வறுமையும் வாட்டமும் போக்கிட, இல்லாமை இல்லையாகிட நாளும் உழைத்து, அறப்போர் பல கண்டு, அதற்கே தன்னை ஒப்படைத்து, கற்றோரும் மற்றோரும் சூழ்ந்துள்ள பேரவையினும்-தன் ஆற்றல் விளங்கிடத் தலை நிமிர்ந்து நின்று—மாட்சியுறத் தோன்றிடும் தலைவன்—'அண்ணா' ஒருவரே யன்றோ?

# சேரனும் கிழவியும்

துறையூர் ந. அலி, பி.ஏ.



நன்னிழல் விரிந்த சோலையில் ஒருநாள்
நானிலம் போற்றும் விற்கொடி சேரன்
தன்னிலை மறந்து தூங்கிய வேளை
தாவி வந்தது சிறுகல் லொன்று
மன்னன் முடியென்ற றியுமா அக்கல்?
மறுநொடி வேந்தன் துடித்தெழுந் திட்டான்
பொன்முடி தாங்கிய தலையைக் கையால்
பொத்தினுன், ஊற்றெனக் கசிந்தது இரத்தம்.

படைஞரைக் கூவி யழைத்தனன், வீரர்
பணிவுடன் வந்து நின்றனர் ஆங்கே
குடைநிழல் போலக் குடிகளைப் புரக்கும்
கொற்றவன் தலையில் குருதியைக் கண்டார்
நடந்ததைக் கேட்டார், நெஞ்சம் துடித்தார்,
நயனம் சிவக்க நாற்புறம் விரைந்தார்
கடைவிழி சிவக்க வாளினை ஏந்திக்
காய்சினத் தாலே பொங்கினுன் சேரன்.

தேடிய வீரரோர் கிழவியைக் கொணர்ந்து
சேரனின் முன்பு நிறுத்தினர், அவளின்
வாடிய முகத்தில் வேதனை பொங்கி
வழிவதைப் பார்த்துச் சிலையாய் நின்றுன்
பாடிய வாய்க்குப் பொற்கிழி தந்த
பைந்தமிழ்ச் சேரன் வீரரை நோக்கி
ஆடிய மேனிக் கிழவியை இங்கே
அழைத்தன் காரணம் யாதெனக் கேட்டான்.



"மன்னவா உங்களை வருத்திய குற்றம்
மாதிவள் புரிந்தனள், அழைத்துவந்தோம்நாம்
என்றனர் வீரர்; சேரனின் மைந்தன்
எரிவிழி யாலே கிழவியைப் பார்த்தான்
ஒன்றுமே யறியா மாதவள் நடுங்கி
உயர்குலச் செம்மல் தலையினைப் பார்த்தாள்
குன்றிப் போன சிறுகிளி யாகக்
கொங்குதார் மார்பன் முன்அடி பணிந்தாள்

கதறி அழுது கண்ணீர் வடித்தாள்
"காவல யானோர் பாவமும் அறியேன்;
பதறும் குழந்தை பசியைப் போக்க
பழத்தை நாடிக் கல்லெறிந் தேன்நான்"
இதழ்கள் துடிக்க இதயம் நடுங்க
இயம்பினள் கிழவி, மன்னனும் கேட்டு
சிதறிய கண்ணீர்த் துளிகளைத் துடைத்தான்
சினந்தனர் வீரர்ப் பெருங்குடிக் கூட்டம்

வளைந்த முதுகுக் கிழவியின் வாட்டம்
வளர்வதைத் தடுக்க சேர மன்னன்
விளைந்த மகிழ்ச்சியைக் காட்டினான் முகத்தில்
வேதனை யடைந்த கிழவியும் துயரம்
களைந்தவ ளாகி மன்னனைப் பார்த்தாள்
காவலன் அவளிடம் பொன்முடி ஒன்றை
அளித்தனன்; கிழவி வணங்கிச் சென்றான்
அரசனோ அவள்வழி பார்த்து நின்றான்.

வியப்பினால் மலர்ந்த வீரரைப் பார்த்து
வீசினான் இன்சொல் செந்தமிழ்ச் சேரன்
"உயர்மரக் குலையில் கல்லெறிந் ததனால்
ஓரிரு பழங்களைத் தந்தது மரமும்
நயம்பட என்னை வருத்திய வளுக்கு
நானும் ஓர்பரி சளித்தேன்; இதிலே
வியப்பிலை; நாமென மரத்தைக் காட்டிலும்
வீழ்ச்சியுற் றவரா? இல்லை! இல்லை!!"



**ப**த்தாண்டுகளுக்கு முன்புகூட அந்தமான் தீவுகள் என்றால் பலருக்குத் தெரியாமல் இருந்தது தெரிந்த சிலரும் அங்குக் குற்றவாளிகள் மட்டுமே வாழ்வதாகக் கருதினர். அந்தமான் தீவுகள் இந்திய துணைக்கண்டத்தை சேர்ந்தவை என்பது கூடச் சிலருக்குத் தெரியாமல் இருந்தது; இதனை மெய்ப்பிக்கவோ என்னவோ, இந்திய அரசினர் தாங்கள் வெளியிட்ட இந்திய நாட்டுப் படம் கொண்ட அஞ்சல் தலையிலும் அந்தமான் நிக்கோபார்த் தீவுகளைச் சேர்க்க மறந்து விட்டனர். இந்தப் பக்கம் வங்காளக் குடாக்கடலில் இருக்கும் அந்தமான் நிக்கோபார்த் தீவுகளும், அந்தப் பக்கம் அரபிக் கடலில் அமைந்திருக்கும் இலக்கத் தீவு, மினிகாய், அமிந்திவி தீவுக் கூட்டங்களும் குறிப்பிட்ட அஞ்சல் தலையில் விடுபட்டிருப்பது, அல்லது விடப்பட்டிருப்பது வேதனை தரத்தக்கதாகும்! இதனையே வாய்ப்பாகக்கொண்டு அண்டைநாட்டினர், "அந்தமான் நிக்கோபார்த் தீவுகள் எங்களைச் சார்ந்தவை; உங்களுடையவையாயின், உங்களால் வெளியிடப்பட்ட அஞ்சல் தலையில் இருக்க வேண்டுமே! அவ்வாறு இல்லையே!" என்று வாதிட்டாலும் வியப்பதற்கில்லை! ஏனெனில் உலகம் இன்று அவ்வாறு இயங்குகிறது.

ஆங்கிலேயர்களின் ஆட்சியில் அந்தமான் தீவுகள், இந்தியாவின் சிறைக் கோட்டமாய்க் கருதப்பட்டன; இந்திய நாட்டின் எல்லா மாநிலத்தின் குற்றவாளிகளையும் அவர்கள், இத்தீவுகளிலேயே சிறை வைத்திருந்தனர்; இத்தீவுகளிலிருந்து தப்பிச் செல்ல இயலாது. நாற்புறமும் நீரால் சூழப்பட்டிருக்கும் இத்தீவுகளைக்கடக்க நாவாய்களின்றி முடியாது; இத்தீவுகளைச் சிறைக் கோட்டமாய்க் கருதியதால், ஆங்கிலேயர்கள், இங்கொரு பெரிய சிறைச் சாலையை அமைத்திருக்கின்றனர்;






இஃது அமைப்பிற் சிறந்தது; அளவில் பெரியது. ஆங்கிலேயர்கள் இத்தீவுகளைச் சிறைக்கோட்டமாய்க் கருதாமல் இருந்திருந்தால், ஒரு வேளை இத்தீவுகள், அவர்கள் ஆட்சிக் காலத்திலேயே, சீருஞ் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்திருக்கலாம்.

அந்தமான் நிக்கோபார்த் தீவுகளின் மீது நமது தமிழ் மன்னன் இராசேந்திரன் அந்நாளிலேயே தனது கடற்படை செலுத்தி வெற்றிவாகை சூடினன் என்னுஞ் செய்தி, நமது செவிகளில் இனிமையாய் ஒலிக்கிறது; அவ்வண்ணம் சரித்திரப் புகழ்பெற்ற இத்தீவுகள், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படாதது வருத்தத்தைத் தருகிறது; ஆயினும் இரண்டு மூன்றும் ஐந்தாண்டுத் திட்டங்களில் இத்தீவுகள் சேர்க்கப்பட்டு, இத்தீவுகளுக்காக ஒரு கணிசமான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அந்தமான் தீவுகளை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை தெற்கு அந்தமான்; நடு அந்தமான்; வட அந்தமான் என்பன. அந்தமான் தீவுகளின் தலைநகரான போர்ட்பிளேயரும் Port Blair- தெற்கு அந்தமானையே சாரும். இவை தவிர சிறிய அந்தமான் என்றொரு தீவும் உள்ளது; நிக்கோபார்த் தீவுக்கூட்டங்கள் தனித்து நிற்கின்றன.

இத்தீவுகளில் வங்காள அகதிகளைப் பெரும்பான்மையும், கேரள, பீகார் அகதிகளைச் சிறுபான்மையும் குடியேற்றியிருக்கின்றனர். இன்னும் குடியேற்றி வருகின்றனர். இலங்கையில் அல்லலுறும் தமிழர்களை இந்திய அரசினர், இத்தீவுகளில் குடியேற்றலாம்; வீணாகக் கிடக்கும் நிலங்களை இதனால் பொன் கொழிக்கும் பூமியாக மாறும்;

அந்தமான் அரசுக்கும், தமிழக அரசுக்கும் இது குறித்துப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன என்று தெரிய வருகிறது; ஆயினும் இத்திட்டத்தை ஆறப்போட்டு வருவது ஏனோ தெரியவில்லை!

இத்தீவுகளில் தமிழ் அச்சுக்கூடம் இல்லை; பிற எம்மொழி அச்சகமும் இல்லை. ஆயினும் அரசாங்கத்தின் ஆங்கில அச்சுக்கூடம் ஒன்று உள்ளது; இங்குத்தான் அரசாங்கச் செய்தித்தாளான 'தினத்தந்தி' -Dally Telegram-வெளியாகிறது. இவ்வச்சுக் கூடத்தில், தனிப்பட்டவர்களுக்கு, அவர்கள் விரும்பும் திருமண அழைப்பிதழ், விழாக்களின் அழைப்பிதழ் போன்றவைகளைக் கட்டணம் பெற்று அச்சிட்டுக் கொடுக்கின்றனர்; ஆனால் இவை யாவும் ஆங்கிலத்திலேயே இருக்கும்.

தமிழர் ஒருவர் இங்கு திருமணம் செய்துகொள்கின்றார் என்றும், அவர் திருமண அழைப்பிதழ் அச்சடிக்க விரும்புகின்றார் என்றும் கொள்வோம்; அவர் தமிழில் அழைப்பிதழ் அனுப்பாமல், ஆங்கிலத்திலேயே அழைப்பிதழ் அனுப்புவார், தமிழ் அச்சுக் கூடம் இல்லாமையால்!

இத்தீவுகளில் சென்ற குடி மக்கட் தொகைக் கணக்கெடுப்புத் தொகையைவிட இரட்டிப்பு மக்கள் தொகை பெருகிவிட்டதாக, இம்முறை எடுக்கப்பட்ட குடி மக்கள் தொகைக் கணக்கெடுப்பறிக்கை கூறுகிறது. இத்தீவுகளில் அப்போது அறுபதினாயிரத்திற்கும் மேற்பட்ட பலமொழி மக்கள் வாழ்கின்றனர்; இன்ன மொழியினர்தான் மிகுதியாக வாழ்கின்றனர் என்று கூறமுடியாவிட்டாலும் தமிழர், மலையாளிகள், வங்காளியர் ஆகியோர் மிகுதியாக வாழ்கின்றனர் என்று கூறலாம்! அறுபதினாயிரம் மக்கள் தொகைக்கு ஒரே ஒரு திரையரங்கமே உள்ளது.

போர்ட் பிளெயரில் 'ஆடோ' Haddo எனப்படும் பகுதியில் 'பாரதி படிப்பகம்' என்னும் பெயரில் படிப்பகம் ஒன்றும், நடு அந்தமானில் எராடா என்னும் பகுதிகளில் 'திராவிட படிப்பகம், என்னும் பெரிய படிப்பக மொன்றும் இயங்கி வருகின்றன; நடு அந்தமானில் நெடுந்தீவில் அமைக்கப்பட்டிருக்கும் 'தமிழர் படிப்பகம்' சொந்தக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

இத்தீவுகளில் வாழ்பவர்களில் பெரும்பான்மையோர், இங்கு நிலையாகத் தங்குவதில்லை. ஓரிரண்டு ஆண்டுகளே தங்குகின்றனர், மேலும் பெரும்பான்மையோர்அரசாங்கஅலுவலகங்களில் பணிபுரிவோராவர்! இங்குள்ள ஆட்சிமுறை அரசியலை அனுமதிப்பதில்லை; காவல்துறை அவர்க



—புகைப்படம்: து. ராமதாஸ், இலயோலாக் கல்லூரி

ளுக்குத் துணை நிற்கிறது! கட்சி பற்றி யாரேனும் தங்களுக்குள் பேசிக் கொண்டாலும், கட்சியேடு களை வரவழைத்துப், அவர்களின் நடவடிக்கைககளைக் கண்காணிக் கத் துப்பறிபவர்கள், அவர்களைச் சுற்றிக்கொண்டே யிருப்பார்கள்.

கலப்புத் திருமணம் இத்தீவுக ளில் பெரிதும் நடைபெறுகின்றன சாதி விட்டு சாதியும், மதம் விட்டு மதமும், இனம் விட்டு இனமும், மொழி விட்டு மொழியும், நாடு விட்டு நாடும், மக்கள் திருமணம் செய்துகொள்கின்றனர். எனவே இத்தீவுகளில் சாதிச் சழக்கும், மத வேறுபாடும், இனச்சண்டை யும், மொழிச் சிக்கலும் இல்லை; ஆனால் இது நிலையான மறு மலர்ச்சி இல்லை.

கடந்த ஆறுண்டுகளுக்குப் முன்பு வரைகூட இத்தீவுகளில் ஒரு பிச்சைக்காரன் கூட இல்லை என்று துணிந்து கூறிவிடலாம்! ஆனால் இன்றைய நிலை தலை கீழாகி விட்டது! அரசாங்கம் அகதிகள் என்னும் பெயரில் பல மாநில மக்களைக குடியேற்றுகிறது அவர்களுக்கு ஐந்து ஏக்கர் பயிரி டத் தகுந்ததும், ஐந்து ஏக்கர் மலை சார்ந்த இடமும், ஒரு சோடி உழவு மாடுகளும், திரும்பப் பெரு ரொக்கம் பணமும். திரும்பப் பெறும் பண உதவியும், சிறு திட் டத் தொழில்களை ஊக்குவிக்கப் பண உதவியும் செய்கிறது; ஆயி னும் இத்தீவுகளில் பிச்சைக்காரர் கள் பெருகி வருவது விந்தையா கவே இருக்கிறது. இதனை முளை யிலேயே கிள்ளியெறியாவிடின், பின்னர் இதுவே மலைபோன்ற சிக்கலாய் மாறிவிடும்.

'இன்பத் தீவுகள்' **Happy-Islands** என்னும் பெயரில் இந் திய அரசினர் அந்தமான் தீவுகள் பற்றிய செய்திப்படம் ஒன்றைத் தயாரித்து, இந்தியாவின் பல மாநிலங்களிலும் வெளியிட்டன ராம்! மற்ற மாநிலமக்களின் உள் ளத்தில், இத்தீவுகளைப் பற்றி ஒரு நல்லெண்ணத்தை, நன்னம்பிக் கையை ஏற்படுத்தவும், வெளி நாட்டாரிடம், 'எங்களிடமும் ஓர் இன்பத்தீவு இருக்கிறது' என்று காட்டவுமே, இப்படம் பயன் படும்! குறை நிறையிரண்டையும் அப்படத்தில் காட்டியிருந்தால், அதுபோற்றத்தகுந்ததாய் இருந்தி ருக்கும்; குறைகளை மறைத்து, நிறைகளை மட்டும் காட்டியிருப் பதை எவ்வாறு போற்ற முடியும்?

இத்தீவுகளுக்கு மக்கள், இன்று வேலை தேடி வருவதுபோல், வேறு எந்த நாட்டிற்கும், மக்கள் இத்துணை ஆர்வத்தோடும், இத் தனை அளவிலும்சென்றிருக்கமாட் டார்கள்! தமிழ்மக்கள் இலங்கைத் தீவுகளுக்கு முன்பு சென்றது போல் இத்தீவுகளை நாடி இன்று வருகின்றனர்.

## அனைவருக்கும் அண்ணா



அழைக்கின்ற போது அண்ணன் உறவிருக்கும்
அணைக்கின்ற போது அன்னை நினைவிருக்கும்
நடக்கின்ற போது முன்னைப் பொலிவிருக்கும்
நகைக்கின்ற போது பிள்ளை முகமிருக்கும்

படைக்கின்ற எழுத்து அறிவு பசியடக்கும்
படிக்கின்ற நெஞ்சில் குறளின் சுவை கொடுக்கும்
அழிக்கின்ற அடிமை அகலத் துடிதுடிக்கும்
அவர்தான் அண்ணா அனைவருக்கும்.

—கலைமதி



செலலுர் சிறை

தற்சமயம் இத்தீவுகளில் வேலை வாய்ப்புக்கள் இருப்பினும், நிலையான வாய்ப்புக்கள் என்று கூறமுடியாது! சாலை போடப்படும் பணி எத்தனை ஆண்டுகளுக்கு இருக்கின்றதோ, அதுவரைதான் வேலை வாய்ப்புக்கள் என்று கூறி விடலாம்.

தெற்கு அந்தமானில் உள்ள சாத்தம் துறையில் அமைந்திருக்கும், ஆசியாக் கண்டத்திலேயே பெரியதான 'சாத்தம் வாட் தொழிற்சாலை' Chatham Saw Mill, "விம்கோ' கம்பெனியாரின் தீக்குச்சித் தொழிற்சாலை, நடு அந்தமானில் பேட்டாபூர் என்னுமிடத்தில் அமைந்திருக்கும் வாட் தொழிற்சாலை ஆகியவற்றில் வேலை வாய்ப்புக்கள் இருக்கின்றன.

நடு அந்தமானில் எராடா என்னுமிடத்தில் அடைந்திருந்த காட்டிலாக்காவின், பகல் இரவு மாற்ற முறையில் நடைபெற்று வந்த வாட் தொழிற்சாலையைக் கடந்த நான்காண்டுகளாக நிறுத்தப்பட்டுள்ளது.

இத்தீவுகளில் கனிப் பொருள்களும், எண்ணெய் வகைகளும் கிடைக்கலாம் என்றொரு நம்பிக்கை இருந்து வந்தது. இதனையே, இந்திய அரசினர் அனுப்பி வைத்த வல்லுநர்களும் ஆய்ந்து வலியுறுத்தியுள்ளனர். இவ்வகைப் பொருள்களை எடுப்பின், அவ்வேலை முயற்சியில் நிறைய வேலை வாய்ப்புக்கள் இருக்கும்,

'ஓங்கிஸ்' Onq-s என்னும் தொல் குடிமக்கள் இத்தீவுகளில் உறைகின்றனர்; இவர்கள் 'சிறு அந்தமான்' போன்ற மக்களுக்குத் தொல்லைகள் தருவதில்லை; ஆனால் 'சார்வாக்கள்' Jarwas என்னும் தொல் குடிமக்கள் காடுகளில் ஒளிந்து வாழ்கின்றனர். இவர்கள் முன்னவர்களினின்றும் இயல்பில் மாறுபட்டவர்கள். இவர்களை நாம் காண்பதென்பது இயலாது; அவர்கள் நம்மைக் கண்டுவிட்டால் நாம் உயிரோடு திரும்புவதும் இயலாது. இவ்விரண்டு இன மக்களும் அமைப்பில் நீக்ரோ இன மக்களை ஒத்திருக்கின்றனர்.

'சார்வாக்கள்' நம்மவர்களை விரோதியாகக் கருதுகின்றனர்; நம்மவர்களை அவர்கள் விரோதியாகக் கருதுகின்றனர். ஒருவரை யொருவர் புரிந்து கொள்ளாததினாலேயே, இரண்டு தரப்பிலும், உயிரிழப்புக்கள் நேரிடுகின்றன.

இத்தீவுகளில் மருத்துவ வசதி மிகவும் பிற்போக்கான நிலையிலேயே இருக்கிறது. அறுபதினாயிரம் மக்களுக்குப் பன்னிரண்டு மருத்துவர்கள் கூட இருக்க மாட்டார்கள் என்றுதான் கூற வேண்டும்! இத்தீவுகளில் தனிப்பட்ட மருத்துவர் ஒருவர்கூட இல்லை. போர்ட் பிளேயரில் ஓரளவு மருத்துவ வசதியிருப்பினும் உட்தீவுகளில் சரிவர இல்லை. மருத்துவர்களின் விழிப்பின்மையாலும் சமயத்தில் மருத்துவ வசதி கிடைக்காமையாலும் இறந்தவர்களின் எண்ணிக்கை எழுத்திலடங்கா!

## அண்ணாவின் தேர்தல் உவமை

நீதி கட்சிக்கு தந்தையாக இருந்தவர்கள் சட்டசபை சென்று தூங்கி விட்டார்கள். நாட்டில் கொள்ளையடிக்க வரும் காங்கிரஸ் கள்வரைப் பார்த்து அழும் ஒரே ஒரு ஜீவன் சிறு குழந்தை பருவமாயுள்ள தி. மு.க. அக்குழந்தையையும் கொல்ல துணிகிறது காங்கிரஸ்



# இசையின் இன்னல் நிலை

இசைச் சித்தர் சி.எஸ்.ஜெயராமன்

**த**த்தளிக்கும் சுரங்கள் கொண்ட இசையின் கூட்டை (டியூன்) தமிழகம் இன்று ரசித்து வருகின்றது. சிலிர்க்கும் சுரங்களும், பிழிந்து வழிந்திடும் சுர அலைகளும் அதிகமாகி விட்டன. கழுத்தைப் பிடித்துக்கொண்டால் சிரமப்பட்டு உயிர்போகும் நிலையில் குரல் எப்படி ஒலித்திடுமோ அதைப்போல சுர அலைகளுக்கான ஓசையும், ஒலியும் பழக்கத்தில் வந்து கொண்டே இருக்கிறது. நடுக்கம் கொண்ட அசைவுகளும், மிரளும் தன்மை படைத்த ஓசையும் அத்துடன் இல்லாமல் மிருகங்களின் கர்ஜனையும் வீறுதரும் இன்னும் பலவித வரம்புக் கடங்கா இசை விஞ்ஞானமும் துணையோடு உலாவுகிறது. காரணம் அடிப்படையான நீதிக்குடைய இலக்கண இலக்கியங்களுடன் இசையைப் பயிற்சி செய்து கொள்ளாத ஒன்றுதான். இன்று தவறான இசையை மக்கள் மன்றத்தில் தைரியமாகப் பரப்பும் வாய்ப்பை மக்கள் அளித்துவருவதால் தைரியம் கொண்ட செயற்கை இசை விஞ்ஞானிகள் துணைவருடன் இன்னல் இசை பவனி வருகின்றனர். ஆதார இசையின் அகண்ட வழி துறைகளை மிக மிகச் சாதாரணமாக எண்ணி இந்தத் துணிகர இசை விளையாட்டு நடைபெற்று வருகிறது. மெல்லிசை என்ற பெயரால் மேனாட்டு இசையின் பாணியைத் தமிழ் இசையுடன் இணைத்து மக்களை மந்தைக் கூட்டமாக நினைத்து செய்து வருகின்றனர். இந்த நிலை நீடித்து வரும் என்று மனக்கோட்டை அநீதி அதிகப்படுவது அழிவை விரைவில் தேடும் புயலை அழைக்கின்றது என்ற பொருள்தான்.

தமிழிசைக்கு அணிவித்தல் என்ற வகையில் தமிழ்பண்பாட்டிற்கான இசையினைத்தான் அணிவிக்க வேண்டும். அதனை விட்டு, இசைக் கூடுகளை தமிழிசை முறையாலும், அழகு செய்தல் என்பதை மேல் நாட்டவரின் ஆபரணங்களாலும் இணிவித்து வருகின்றனர்.

காரணம், மக்கள் கேட்கும் இசையின் தரத்தை உற்றுக் கேட்டு, அதனை சிந்தனை செய்ய ஆரம்பித்துவிட்டால் அட்டுழியக்காரர்கள் ஆழம் தெரியாத அளவிற்குப் புதையுண்டுவிடுவர். பொது மக்கள் மத்தியிலே பொம்மலாட்டம் காண்பிப்பதைப்போல பொய்க்கால் குதிரையையும்,



பொம்மலாட்டத்தையும் விளை யாட்டு காட்டிவருகின்றனர்.

சிறந்த முறையில் இசை வளர வேண்டுமென்று அரசாங்கமும் பல கட்சிகளின் தலைவர்களும் பேசியும் எழுதிக்கொண்டு இருப் பதை அழிவுக் கூட்டம் இன்னும் கண்ணோட்டமிடவில்லை.

எந்த அளவு உயர்வாக இருந்த இசை இன்று கேட்டாரற்ற நிலை களில் பலவிதக் காட்சி அளித்து வருகிறது. இதனைத் திருத்தி அமைக்க வேண்டிய பொறுப்பு பொதுமக்கள் உள்ளத்தில்தான் இருக்கின்றதே தவிர என்போன் றவர்கள் அதிகாரத்தில் இல்லை.

மக்கள் மனம் மாறுபடவேண் டும். உயர்ந்த இசையைத்தான் ரசிப்பது என்ற உறுதி கொள்ள வேண்டும். இழிவான இசைக் கூடுகளுக்கு சிறிதளவும் இட மளிக்கலாகாது.

கடந்த 16 ஆண்டுகளாக தமிழிசையின் ஆதாரங்களையும், அதற்கான இலக்கிய இலக்கணங் களையும் பண்டைய மேதைகளால் வகுக்கப்பட்ட வரம்புகளையும், பிரிவினைகளையும் அதற்கான சான்றுகளையும் பலவடிவங்களில் எழுதியிருக்கின்றேன்.

அதற்கான தமிழிசையின் ஆதாரப்பெயர்களையும், லய சம் பந்தமாகவும், சுர சம்பந்தமாகவும் எத்தனைவிதமாக பயிற்சி செய்து கொள்ள வேண்டுமென்ற முறை யினையும் எளிய விளக்கங்களால் கொடுத்துள்ளேன்.

சிறுகூடு, பெருகூடு, யாழிசை, பேரிசை, சகோடயாழ், மகரயாழ் இன்னும் பல்வித இலக்கணங் களின் தெளிவாக அளவுகோலு டன் புள்ளியிட்டு கொடுத்துள் ளேன்.

இத்தனை ஆண்டுகள் நான் மட்டுமில்லாமல் பெரு மேதைகள் அனைவரும் தங்கள் தங்கள் திற னுக்கேற்றவாறு எத்தனையோ வழிகளை அளித்துள்ளார்கள். இத்தனைக்கும் நடுவே பித்தர்கள் கூத்து அதிகரித்து வருகிறதே தவிர, பெருமேதை வகுத்த தமிழி சையின் கட்டுப்பாட்டை கன விலும் கூட கண்டிராதவர்களுக்கு கதைகள் சொல்வதுபோல் 16-வது ஆண்டிலும் எழுத முடிகி றதே தவிர, அதற்கான சிறந்த இசையின் நுணுக்கங்களுக்கான இசைக் கூடுகளை கேட்கமுடிய வில்லை.

ஒரு விளரிக்கையால் எத்த னையோ பகுதிகளையும் அதற்கான பாவமும், நெளிவும், அசைவும் கொண்ட பல இசைக் கூடுகளை உருவாக்கமுடியும்.

ஏன் அவ்விதம் அமைக்கக் கூடாது? வரம்பு தெரியாத கார ணமா? பயிற்சி இல்லாத தன் மையா? இலக்கணம் எங்கு இருக்கின்றது என்ற நிலையா? இதற்குப் பொதுமக்கள் பொறுப் பாக முடியுமா?

எனவே, இசையாளர்கள் தான் இசையின் உயர்வினைகை யாளும் தன்மை பெறவேண்டும். தனக்குத் தெரியாவிடில் தெரிந்த வர்களிடம் பயிலவேண்டும்.

ராகம் என்ற ஒன்று எல்லோ ருக்கும் தெரிந்த பொருள். எந்த ராகம், அதனின் தன்மை, நிறம், கட்டுப்பாடு ஆகியவற்றை பொது மக்கள் கேட்க முடியுமா? இசை யாளர்கள் தான் உணர வேண் டும். எதைப்பாடினாலும் செவிக்கு இன்பமாக இருந்தால் மிக நன் ருகப் பாடுகிருர் என்று சொல்லி வருவது பல நோய்களுள், அது மாற்றமுடியாத பெரிய நோய் என்று சொல்லலாம். இசையா ளர்கள்தான் எந்த நோயையும் பொதுமக்களிடம் பரவாது, மருத்துவமுறையினை இசையின் வரம்பு வாயிலாக, இவர்கள் அளிக்கவேண்டிய பெரும் பொறுப்பிற்குரியவர்கள்.

எந்த நாட்டு எந்த இலக்கண மும் நமது தமிழ்நாட்டின் சிறு இலக்கணத்தின்முன் சிதறுண்டு விடும் தன்மைபடைத்தது. இந் நிலையிருக்க, மேல்நாட்டவரின் பாணியினை தமிழ்நாட்டவரி டையே புகுத்துதல் அதனை கேட்கும் அனைத்தும் யாரைத் துணையாக வைத்துக்கொண்டு என்று சிந்திக்கவேண்டும். பொது மக்களைத்தான்!

பொதுமக்களை போலித்தன மாக ஏய்த்து வருவதை பொது மக்கள்தான் உணர்ந்து, போலி களைத் திருத்தி அமைக்க வேண் டும்: எப்படி?

உயர்வான இசையை தவிர, மற்ற இசைக்கூடுகளை சிறிது சிறிதாக கழித்துவருதல் வேண் டும். விஷம் கலந்துவிட்டது. உடன் அதனை போக்க முடியாத நிலை என்பதால் அதற்கான மருந்துகளை ஒவ்வொருநாளும் சிந்தித்துச் சிந்தித்து சிறிது சிறி தாக எதிர்ப்பு மருந்தை கொடுத் துத்தாள் பெரு நோயை போக் கிடமுன்வர வேண்டும்.

மேலே ராகம் என்று குறிப் பிட்டது இராகம் படிப்பதற்கு இசையின் மூலம் செலாற்றுகை யில் இட்பொருள் ஆனந்தம் என ஒலி ஓசையுடன் கேட்கும் உட் பொருள் ஆனந்தம் என்ருலும் இசைவாயிலாக ராகம் என்று சொன்னுல் ஆசை என்று எண்ண வேண்டும்.

ஆசைக்கோர் அளவில்லை என்பதுபோல் முடிவே இல்லாத ஆசை என்ற எண்ணத்தில் எழுந்து சுரங்களின் கற்பனை மூலம் இராகம் என முன்னோர் வகுத்த முறை. எத்தனையோ கூறலாம். மறு ஆண்டிற்குள்ளா கிலும் பொதுமக்கள் முனைந்து உயர் இசையை உயர்த்த பாடு படுவார்கள் என்று எனது எண் ணங்களை வெளியிட்டேன். மீண் டும் அடுத்த மலரில் உங்களிடம் நான்.



தி.மு
கழகத்தின்
தேர்தல்
அறிக்கை
திராவிடத்தாய்
தமிழகம், ஆந்திரம், கேரளம், கர்நாடகம்
மொழிவழி பிரிந்து இனவழி கூடும்
சுதந்திர திராவிடம் பெற தொடர்ந்து
பணியாற்றுவோம்
அரசியலில், பொருளாதாரத்
தில், சமுகத்தில் ஏற்றத்தாழ்வற்ற
நிலைக்காகப் பாடுபடுவோம்
நம் சட்டமன்ற நுழைவால்....
...சட்டமன்ற முனையிலேயே
காங்கிரசை சந்தித்து கழகம் தன்
குறிக்கோளை எடுத்துரைத்தது.
பொய்ப் பிரச்சாரம்
சட்டமன்ற நுழைவால்
காங்கிரசின் தவறான
பிரச்சாரம் குலைந்தது



தி.மு.க. வைக்காட்டி மாநில மந்திரிகள்
வடக்கேயிருந்து உரிமைபெற்றனர்.
தி.மு.க
ஜனநாயகவாதிகள் நம்
பணிக்குப்பாராட்டு.
தி.மு.க
காங்கிரஸ் ஏதேச்சாதிகாரத்தைத்
தடுத்தோம்.
தி.மு.க.
அநீதிகளைக்
கண்டித்திருக்
கிறோம்.
தி.மு.க
காங்கிரஸ்
மக்களுக்காக போராடி
இருக்கிறது.
விலை
ஏற்றம்
உணவு விலை
ஏற்றத்தைத்
தடுக்க
போராடியிருக்
கிறது


வேலையில்லாதோர் திண்டாட்டம்பற்றி எடுத்துரைத்திருக்கிறது.
INDIA
பணவீக்கத்தை தடுக்க வேண்டுமென வற்புறுத்தியுள்ளது.
ஏழை விவசாயிக்கு வரியை குறை என எடுத்து கூறியுள்ளது.
வரி
உணவுப் பொருள் வரியைக் குறைக்கும்படி போராடியுள்ளது.
குவிதல் அதிகாரம் தவறு என்ற கருத்து பரவியது.
குறையுள்ள நில உச்சவரம்பு சட்டத்திற்கெதிராக அணி


உழவர்களுக்குவசதி
கிடைக்க வழியேற்பட
போராடியுள்ளது.
பணம்
விதை
உரம்
கைத்தறியாளருக்கு அதிகச்
சலுகைதரக் கோரிக்கை.
தொழிலாளர் போராட்டங்களுக்கு
துணை நின்றோம்.
மீனவ மக்களுக்கு மீன் பிடி
கருவிகள் தர வற்புறுத்தினோம்.
தாழ்த்தப்பட்டோ
ருக்கு உதவுக.
மரமேறும் தொழிலாள-
ருக்கு நல்ல வேலை தருக.


சீர்திருத்தத் திருமணச்
சட்டம் இயற்றுக.
அரசாங்க ஊழியர்
நிலை உயர்த்துக.
FILE
ஆரம்ப ஆசிரியர்
நிலையுயர....
சிறுவர்களுக்கு பள்ளியில்
பகலுணவு, சீருடை சரிவரத்
தருக.
CINEMA
பஸ்களை, சினிமாக்கொட்ட-
கையை தேசியமாக்குக.
தமிழ் முழுமையான
ஆட்சிமொழியாக
ஆக்குதற்குப்
போராடினோம்.
தமிழ்


திரு
திருமதி
திரு, திருமதி என்ற தமிழ் சொற்களை பயன் படுத்தப் பாடுபட்டுள்ளது.
கட்டாய இந்தித் திணிப்பிற்கு எதிர்ப்பு.
இந்தி
தேவநாகரித் திணிப்பிற்கு எதிர்ப்பு.
கவர்னர் பதவிக்கு எதிர்ப்பு.
உதகை சட்ட மன்ற வீண் செலவிற்கு எதிர்ப்பு
சென்னை மாநகராட்சியைக் கைப்பற்றி லாபம் காட்டியது.


சென்னை மாநகராட்சிக்கு ரோடு, குடிநீர் வசதிபோன்றவற்றிற்கு உதவிட வேண்டிற்று.
நடைபாதை வாசிகளுக்கு உதவிட வற்புறுத்தினோம்.
குடிசை வாழ்வோருக்கு இழைக்கப்படும் அநீதியைக் கண்டித்தோம்.
கிராமங்களில் சாலை, குடிதண்ணீர், கல்வி வசதி பெருகிட வற்புறுத்தினோம்.
ஊராட்சி மன்றம்
ஊராட்சி மன்றங்களின் அதிகார உயர்வுக்குப் போராடினோம்.
புதிய ரயில் பாதைகளுக்கு வற்புறுத்தினோம்.


ஆயிரம் கோடி வேண்டும்!
ஆயிரம் கோடி
ஆயிரம் கோடி திட்டத்திற்கு வற்புறுத்தினேம்
இலங்கைத் திராவிடர் இழிநிலே துடைக்கப்பாடுபட்டோம்
இத்திட்டங்களே- கருத்துகளே காங்கிரசாட்சி ஏற்காததால், நாட்டில் ஊழல்கள் பெருகிற்று.
தாயகம் திரும்பியவருக்கு வாழ்க்கை வசதி
உலுத்தர் கொழுத்தனர் உழைப்பாளர் நலிந்தனர்.
முதலாளி
இதை தடுக்க சட்ட மன்றம் செல்லும் தி.மு.கவை அழிக்க முதலாளிகள் காங்கிரசைத் தூண்டுகின்றனர்.
இந்தி நுழைவைத் தடுக்கும் தி.மு.கவை அழிக்க மத்திய அரசு காங்கிரசிற்கு ஆணையிடுகிறது.

# இந்த நிலைமாற்றிட தி.மு.கழகம்





அண்டை மாநிலங்களின் உதவி



சூரிய வெப்பத்தை மின்சாரமாக்கும் திட்டம்.



கடல் நீரை குடி நீராக்கும் திட்டம்



கடலோர வாணிபப் பெருக்கம்



பக்கிங்காம் கால்வாயை வேதாரண்யம் கால்வா-யுடன் இணைத்தல்.



மீன்பிடித் தொழிலை முறையுடன் பெருக்குதல்



இறைச்சித் தொழிலை லாபமாக்குதல்.



உரத் தொழிற்சாலைகளை நிறுவுதல்


கோழி வளர்ப்பை முறையுள்-
-ளதாக்குதல்.
தேங்காய் நார் மூலம்
செயற்கை ரப்பர்.
முந்திரி ஆராய்ச்சி
பழங்களை ஏற்றுமதி
செய்தல்.
தாவர எண்ணெய்
தொழிற்சாலை
கரும்புச்சக்கை கிடைக்குமி-
-டத்தில் காகித ஆலை.
மக்னசைட், மாங்கனீஸ், ஜிப்சம்
அலுமினிய செய்பொருள்கள்


வரிப்பளு
வரிப்பளு குறையும்
BANK
பாங்குகள் தேசியமயம்
பொதுத்துறை
தனியார் துறைநிபுணர்கள்
பொதுத்துறைக்கு வரவர்.
அரசாங்க பஸ் தொழிலை
விரிவாக்குதல்
தொழிலாளருக்கு
சட்டங்கள்
கரைபோட்ட
வேட்டியும், சேலை
யும் கைத்தறிக்கு
கைத்தறி பற்றிய வெளி
நாட்டு ஒப்பந்தங்கள்


முஸ்லீம், கிருஸ்த்தவர்
குறைகளைப் போக்கும்.
தரிசு நிலத்தை நிலமில்லாத
உழவருக்கு வழங்குதல்
கிராமச் சீர்திருத்தத்திற்கு
பட்டாளம் பயன் படும்
17 லட்சம்
35 லட்சம்
50 பேர்
100 பேர்
விகிதாச்சார பிரதிநிதித்
துவம் வரும்.
குறிப்பிட்ட பிரச்சினை மீது
வாக்கெடுப்பு நடத்தி சட்டமாக்
குதல்.
'லேண்ட் ஆர்மி' கிராம
பணிகளை புரியும்


பிரதிநிதிகளைத் திரும்ப
அழைத்துக் கொள்ளும்
உரிமை
வட்டத்திற்கொரு
மருத்துவ வான்
கட்டாயக்
கல்வி.
கலைத் துறை மேம்பாட்-
-டிற்கு வழி
தமிழகத்திற்கு மற்றொரு
பல்கலைக் கழகம்
வெளிநாட்டாரை வரவழைத்து
தொழில் நுட்ப அறிவு.
திராவிட நாகரீகத்தை
ஆராய தனிக்குழு.


குறள் நெறி உலகில் பரவிட ஒரு நிறுவனம்
எல்லா நகரங்களிலும் பாதாள சாக்கடைத் திட்டம்
MFS
MFS
எல்லா ஊர்களிலும் தீயணைப்பு
இந்தி
இந்தியை தடுத்து நிறுத்தும்
சீர் திருத்த திருமணங்கள் செல்லும்படியாக்கும்
உரிமைகள் காக்கப்படும்
FILE
கூட்டுறவுத் துறை செம்மையாக்கப்படும்




## 14. ஆண்டுகால ஆட்சியில்...






கேடுகள் போக்கிட நாடு வாழ்ந்திட
தி.மு. கழ[illegible]கு நல்லாதரவு தாரீர்!

# அண்ணுவும் ஜின்ஞுவும் — மாறன் எம்.ஏ.

★

கற்பனை உலகில் அறிஞர் அண்ணுவை ஜனுப் ஜின்ஞு சந்தித்து உரையாடும்போது திரை உயர்கிறது:

ஜின்ஞு: கடலில் கோடிக் கணக்கான அலைகள் எழும், விழும். அரசியல் தலைவர்கள் அனைவரும் மடிவதற்காகவே தோன்றும் அலைகளைப் போன்றவர்கள்தான். ஆனல், ஒரு இனத்தின் விடுதலைக்காக வாழ்நாளின் எல்லாச் சுகங்களையும் புறக்கணித்துவிட்டு தாயகத்தின் தளை அறுக்கப் பாடுபடும் உம் போன்ற தலைவர்கள் இருக்கிருர்களே, அவர்களும் ஒரு நாள் மற்றவர்களைப் போலவே மண்ணுக்குள் உறங்கினுலும் அவர்களால் அந்த மண் மணம் பெறுகிறது அந்த மண்ணை மூடியிருக்கும் விண்ணும், அந்த விண்ணிலே வட்டமிடும் கதிரவனும், கார்முகிலும், விண் மீனும், வட்ட நிலாவும் உள்ளவரை அவர்கள் பெயரும் நிலைத்து நிற்கும்.

அண்ணு: என்னை அதிகமாகப் புகழ்கிறீர்கள்!

ஜின்ஞு: நீர் அப்படிச் சொல்வீர் என்பது எனக்குத் தெரியும் "குலப்பெருமையோ, குடும்பப் பெருமையோ எதுவும் இல்லாத ஒரு சாமான்ய குடும்பத்தில் பிறந்த என்னை நீங்கள் அனைவரும் மிகைபடப் புகழ்ந்தது என்னை வெட்கத்தில் ஆழ்த்திவிட்டது" என்று நீர் மதுரை பொது மாநாட்டில் பேசியதை நான்படிக்கும்பேறு பெற்றேன். "நான் ஒரு பாங்கிபோல. பாங்கியில் பணம் போட்டால்தான் எடுக்க முடியும். நீங்கள் உங்களிடம்இருக்கும் ஆற்றலை என்னிடம் கொடுத்தால் தான் அதை என்னிடமிருந்து நீங்கள் பெற முடியும். அதை விட்டு, என்னிடமே இருப்பதாக நீங்கள் நினைத்தால் ஏமாற்றம் தான் கிடைக்கும்" என்று நீர் கோவை சிறப்பு மாநாட்டில் பேசியது உமது கழகத்தோழர்களை உற்சாகப் படுத்துவதற்குத்தான் என்பதையும் நான் அறிவேன் உம்மைப்போலத்தான் நானும் ஒரு சாமான்யன் என்று ஒருகாலத்தில் நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனல் நாமெல்லாம் வரலாறு தேர்ந்தெடுத்துவிட்ட வழிகாட்டிகள் சரித்திரம் தனது சுமையைத் தோள்களில்தூக்கிவைத்துவிட்ட பிறகு அதை எடுத்துக் கொண்டு நடப்பது தான் நம்போன்ருேரின வேலை

அண்ணு: வந்து......

ஜின்ஞு: நீர் என்ன சொன்னுலும் பல தலைமுறைகளுக்கு ஒருமுறை தோன்றும் என். அவதரிக்கும் என் ஙு ... ச்சொல்வேன்— கர்மவீரர் நீர்! சரித்திரம் உம்மைத் தேர்ந்தெடுத்து வீட்டது; உம்மால் சரித்திரம் உருவாகிக்கொண்டிருக்கிறது. "இந்தியாவின்மீது தீர்ப்பு" (*Verdict on India*) என்னும் நூலை எழுதிய பெவர்லி நிக்கோல்ஸ் (*Beverley nichols*) 'ஆசியாவின் மிகவும் முக்கியமான மனிதர்' என்று என்னைப்பற்றிக் குறிப்பிட்டிருந்தார். இதோ என் முன்னே உட்கார்ந்திருப்பது எனக்குப்பின்னே தோன்றியிருக்கும் ஆசியாவின் இன்னெரு மிகவும் முக்கியமனிதர் என்பதை உணர்ந்துகொள்ள என் போன்ற தீர்க்கதரிசிகளால்தான் முடியும்... உம்...உங்கள் திராவிட நாடுகோரிக்கை.........

அண்ணு: கிடைக்காது என்கிருர்கள்!

ஜின்ஞு: அப்படித்தானே நான் பாகிஸ்தான் கேட்டபோதும் சொன்னுர்கள். பிறகு என்ன; நிச்சயம் கிடைக்குமென்ரு சொல்வார்கள் கிடைக்கும்என்று முன்கூட்டியேதெரிந்தால் அவர்கள் ஏன் அங்குஇருக்கிருர்கள்? உமது கழகத்தில் இடம் பிடிப்பதற்காக 'மியூசிக்கல்சேர்'விளையாட்டில்நடப்பதுபோலபோட்டிபோட்டுக்கொண்டு ஓடிவரமாட்டார்களா?உம்! உமது இலட்சியம் கைகூடாது என்று கேலி சொல்பவர்கள் ..?

அண்ணு: வேறு யார்? பண்டித நேருவிலிருந்து, அவ

வெள்ளேயர்களே நாட்டை விட்டு வெளியேறச்சொல் லவில்லே.

அண்ணு: ஆமாம்: காந்தி யார் கூட அப்படித் தானே சொல்லிக் கொண்டிருந்தார்!

ஜின்ஞு: 29-12-1920 அன்று 'யங்இந்தியா' (*Young India*) பத்திரிகையில் காந்தியார் எழுதியிருந்தது எனக்கு இன்னும் நன்ருக நினே விருக்கிறது' நான் தூரத் துக் காட்சியைப் பார்க்க விரும்ப வில்லே. ஒரு அடி எடுத்து அப்பால் வைப் பதே எனக்குப் போதும். என்று கார்டினல் நீயூ மேன் என்னும் அறிஞர் கூறியிருக்கிருர் காந்தி யார். மேற்கோள் காட்டி இன்னும் பல ஆண்டுகள் கழித்து நடப்பதைப் பற்றி நான் கவலேப் படவில்லே, அடுத்து என்ன — என் பது தான் பிரச்சனே என்று குறிப்பிட்டி ருந்தார். ஒரு இரவில் ஆங்கிலேயர்கள் எல் லாவற்றையும் விட்டு விட்டு வெளியேறுவார் கள் என்று நான் நம்ப வில்லே—என்று எழுதி யிருந்தார். அதாவது அதன் பொருள்...

அண்ணு: வெள்ளேக்காரர் கள் எல்லா ஏற்பாடுகளே யும் செய்து முடித்து விட் டுத் தான் போவார்கள் என்பது! வெள்ளேயனி டமிருந்து ஒரு திட்டமிட்ட தக்க இராணுவப் பாது காப்பு உடைய இந்தி யாவைப் பெற்றவர்கள்

இன அடிப்படையில் இந்திய உபகண்டத்தைப் பலநாடு களாகப் பிரித்து, அந்தப் பல நாடுகள் அனைத்தை யும் சேர்த்து பிரிட்டிஷ் காமன்வெல்த்போல ஒரு இந்தியக் காமன்வெல்த் அமைக்கலாம் என்கிற யோசனேயும் எனக்குண்டு

ஜின்ஞு: அந்தக் கருத்தை நீங்கள் சட்டக் கல்லூரி சொற்பொழிவின்போது குறிப்பிட்டிருந்தீர்கள். நீங் கள் ஆசியாவின் மிகவும் முக்கியமான மனிதராகப் போகிறீர்கள் என்று நான் சொன்னது அதையெல் லாம் வைத்துத்தான்!

அண்ணு: இந்த நிலேயில் தான் உள்நாட்டுப்போரே ஏற்பட்டாலும் நாட்டுப் பிரிவினேக்குச் சம்மதிக்க மாட்டோம்—என்று மது ரையிலே கொக்கரித்திருக் கிருர், இந்தியாவின் பிர தமர்!

ஜின்ஞு: இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிந்த போது எந்த இடத்தில் எந்த ஆண்டு உள்நாட் டுப்போர் நடைபெற்றது! உள்நாட்டுப் போர் நடத் திய பாரதத்தாயின் ஒரு அங்கமான இலங்கை பிரிந்துபோயிற்று? பர்மா வின் பிரிவினேயை முடிவு செய்தது உள் நாட்டுப் போர் அல்லவே; வட்ட மேஜை மாநாடு தானே! அப்படியே உள் நாட்டுப் போர் ஏற்பட்டால்தான் என்ன?

அண்ணு: எதற்கும் தயாராக இருக்கும் எஃகுக்கம்பிகள் தான் என் தம்பிகள்! என் கழகத்தில் அங்கம் வகிக் கும்நான்கு இலட்சத்திற் கும்மேற்பட்ட உறுப்பினர் கள் சமயம் நேர்ந்தால் இங்கும் ஒரு அல்ஜீரியா வைச் சந்திக்கத் தயங்க மாட்டார்கள்!

ஜின்ஞு: அலட்சியப் படுத்துங்கள் நண் பரே; அலட்சியப்படுத் துங்கள்மகத்தானஅறவழி யைக் கேடயமாக வைத்தி ருக்கும் உங்களே எந்த உள்நாட்டுப் போர் தான் என்ன செய்ய முடியும்?

அண்ணு: ஒன்று சொல்ல மறந்துவிட்டேனே! அண் மையில் தமிழகக் காங்கிர சின் உயிர் நாடியான ஒரு நபரைச் சந்திக்க நேர்ந் தது. அவர் என்னிடம் என்னகூறினுர் தெரியுமா? 'திராவிடநாட்டை நீங்கள் பிரிக்கப் போவதில்லே; உத்தரப் பிரதேசக்காரன் பிரித்துக் கொடுக்கப் போகிருன்' என்ருர்! என்ன வேடிக்கை பார்த் தீர்களா?

ஜின்ஞு: யார் அந்த மனிதர்? (அண்ணு அவர் காதில் அந்தப் பெயரை ரகசிய மாகச் சொல்கிருர்)

ஜின்ஞு: ஓ! அந்தத் தமிழரா! இதில் வேடிக்கை என்ன இருக்கிறது? பாகிஸ்தான் கோரிக்கை ஆரம்பமா னதே இந்துக்களால் தானே! 1867-ம் ஆண்டு முஸ்லிம்களின் முக்கிய மான மொழியான உரு துவை நீக்கி, இந்தியைத் திணிப்பதற்கு இந்துத் தலேவர்கள் காசியில் ஒரு இயக்கத்தை ஆரம்பித்தார் கள். அப்போதுதான் இந்துக்களும் முஸ்லிம் களும் இனி ஒன்ருக இருக்க முடியாது என் பதை சர். சையத் அகமத் பகதூர் K. C. S. I., L. L. D முதன் முறையாக உணர்ந் தார். "இப்போது அந்த இரு சமூகத்தாரிடையே அதிக விரோதம் இல்லா விட்டாலும் படித்த மக்கள் என்று சொல்லப்படுகிற அவர்களால் (இந்துத் தலேவர்களால்) அந்த விரோதம் வருங்காலத்தில் வருங்காலத்தில் வளர்ந்து விடும் அப்போது உயி ரோடு இருக்கப் போகிற

வர்கள் இதை உணர்வார்கள் என்று அவர் 1867-ம் ஆண்டிலேயே பிரிட்டிஷ் டிவிஷனல் கமிஷனரான மிஷ்டர் அலெக்சாண்டர் ஷேக்ஸ்பியரிடம் அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார். அன்று இந்தி வெறியர்கள் ஊன்றிய விதைதான் பின்னால் பாகிஸ்தான் என்னும் தருவதாக உருவெடுத்தது. இன்னும் அதே இந்தி வெறியர்களால்தான் திராவிடநாடு கோரிக்கை தீவிரமடையப் போகிறது.

அண்ணா: நிலைமை இப்படி இருந்தும்பெரியார் என்ன சொல்கிறார், தெரியுமா? திராவிட நாடாவது வெங்காயமாவது என்கிறார்!

ஜின்னா: அப்படி என்றால்?

அண்ணா: அதில் அவருக்கு நம்பிக்கை இல்லையாம்.

ஜின்னா: உங்கள் தந்தை அப்படிக் கருதுகிறார். சகோதர முஸ்லிமான அபுல்கலாம் ஆசாத் இறுதிவரை பாகிஸ்தான் கோரிக்கை உண்மை என்றே நம்பவில்லை. முஸ்லிம்கள் பெரும்பான்மையோராக உள்ள மாகாணங்களுக்கு அதிக சுதந்தரம் பெறுவதற்காகவே நான் பேசுவதாக அவர் அமெரிக்காவின் முன்னாள் இந்தியத் தூதுவரான செஸ்டர் பௌல்சியம் கூறினார். ஏன் என் உடன் பிறந்த சகோதரிபாத்திமா என்ன கருதினாள் தெரியுமா? "எங்களுடைய ஆயுட் காலத்தில் இதைப் பெறப் போகிறோமென்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை" என்று கூறியிருக்கிறாள்.

அண்ணா: நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? என் ஆயுட் காலத்தில் திராவிடத்திற்கு விடுதலை கிடைக்குமா?

ஜின்னா: நிச்சயம் கிடைக்கும்; கிடைக்க வேண்டும். இலட்சியம் கைகூடாது என்று என்னைவிட்டு எல்லோரும் போய் விட்டாலும் நான் மட்டுமாவது வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்துகொண்டு திராவிட நாடு திராவிடருக்கே என்று கூறிக் கொண்டிருப்பேன் — என்று கோவை மாநாட்டில் நீர் கூறிய அந்த வீர வாசகங்கள் ஆலய மணி ஓசை போல் என் காதுகளில் இன்னும் ஒலிக்கக் கேட்கிறேன். அத்தகைய வைர நெஞ்சும், அந்த நெஞ்சத்தில் உதிக்கும் திட்டங்களைச் செயல்படுத்த,வெட்டிவா என்று உரைத்தால் கட்டி வரும் காளைகளும் லட்சோப லட்சமாக இருக்க திராவிடநாடு உம்மிடம் வராமல் வேறு எங்கே போய்விடும்? அறிஞரே!சகோதரத்துவத்தை உபதேசிக்கும் முஸ்லிம் மதத்தை அடிப்படையாகக் கொண்ட நான் நடத்திய முஸ்லிம் லீகில்கூட அண்ணன் தம்பி உறவு இருந்ததில்லை. உலகத்திற்கே புதுமையாக குடும்ப பாசத்தை அடிப்படையாகக்கொண்டு விடுதலை இயக்கத்தை நடத்தும் உம்படை தோற்றால் வேறு எப்படைதான் ஜெயிக்கும்! உமக்கு அண்ணா என்று பெயர் வைத்த தாயின் வாய்க்கு எத்தனை பிடி சர்க்கரை போட்டாலும் என் மனக்குறை நீங்காது! இந்தத் தலைமுறையிலே நம்மோடு பழக நேர்ந்தவர்கள், நம் தோளோடுதோள் நின்று உம் படை வரிசையிலே அணி வகுத்து நிற்பவர்கள் எத்தகைய ஊறு செய்தவர்கள் என்பதை எண்ண எண்ண எனக்கு ஆனந்தக் கண்ணீர் ஊற்றாய்ப்பெருகுகிறது. எனக்குப் பிறகு என் இடத்தை நிரப்ப லீக்கிலே ஆள் இல்லை. நேருவுக்குப்பிறகு காங்கிரசிற்கு வாரிசு இல்லை. அண்ணாஎன்னும் அதிமதுரப் பெயர் பெற்ற ஆற்றல் மிகு சிங்கமே! உமக்குப் பிறகும் அணி அணியாய்த் தலைவர்களைத் தயார்செய்திருக்கும்உமது திறமையை வர்ணிக்க வழக்கறிஞனான எனக்கு வார்த்தைகள் கிடைக்கவில்லை. நீர்மட்டும் என் காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைக்கண்டிருந்தால் தகுதியொன்றுமில்லாக் காங்கிரசாரிடம் போராடிக் கொண்ராமல் வெள்ளைக்காரனிடமிருந்து திராவிடத்தைத் தட்டிப் பிடுங்கிக்கொண்டு இந்நேரம் புதிய திராவிடத்தின் தூதுவரை ஐ. நா. வில் அமர்த்தியிருக்கலாம்! புதிய வரலாறு கிடைக்க எழுத்தாணியைக் கையிலேந்தியிருக்கும் எழுச்சிமிகு ஏந்தலே! ஓட்டும், ஓட்டும், தம்பி துணையுடன் வளமார்திராவிடம் மீட்டிடவும் வீரமிகு எழுத்தாணியை ஓட்டும்! புலிக்குரல் கேட்ட புள்ளிமான் கூட்டம்போல் வடவரை ஓட்டும்! ஓட்டும்!!

ஆனால் அறிஞரே!எனக்கிருப்பதுஒரேகவலைதான்!

அண்ணா: என்ன?

ஜின்னா: அல்லாஉமக்கு நிறைந்த ஆயுளைக் கொடுக்கட்டும்! வாழ்க நீவிர் வளமார் திராவிடம் பெற்று

(திரை விழுகிறது)

நாடு பகற்கனவு என்று கூறுபவர்கள். அவர்களை யெல்லாம் அலட்சியப்படுத்துங்கள்! அடுக்குமா, இது; அசல் தேசத் துரோகமாயிற்றே — என்பார்கள்; அலட்சியப்படுத்துங்கள்! விட்டேனா, பார்; துவம்சம் செய்து விடுகிறேன் என்று ஆரவாரம் செய்வார்கள்; அவர்களையும் அலட்சியப் படுத்துங்கள்!

நாளைக்கு பண்டிதரே அழைத்து உங்களிடம் திராவிட நாட்டுச் சாசனத்தைக் கொடுப்பதாக வைத்துக் கொள்ளுங்கள் —கொடுக்கத்தான் போகிறார்- அப்போது மட்டும் திராவிட நாடு பலிக்காது என்று கூறுபவர்கள் என்னசொல்வார்கள் என்று நினைக்கிறீர்கள் ?

அண்ணா : இந்தத் திராவிட நாடு இன்னும் எத்தனை நாள் வாழப் போகிறது— என்றுதான் சொல்வார்கள்!

ஜின்னா: நன்றாகச் சொன்னீர்கள்! பாகிஸ்தான் கிடைக்கும் வரை கிடைக்காது என்றார்கள். கிடைத்த பிறகு வாழாது என்றார்கள்.

அண்ணா: இப்போதுகூட அங்கு மக்களாட்சி இல்லையே என்றுதானே கேலி செய்கிறார்கள்!

ஜின்னா: அதற்கென்ன; பிரான்சில் டிகாலே நடத்துவதும், இந்தோனேஷியாவிலிருப்பதும், கானாவில்என்குருமா செயல்படுத்துவதும் நூறு சத விகித ஜன நாயகமா? ஜனநாயகப் போர்வையால் மூடப்பட்ட சர்வாதிகாரம்தானே! அவர்களுக்கு அது பிடித்திருக்கலாம். அதைக் கேட்பதற்கு இவர்கள் யார்?

அண்ணா: பாகப் பிரிவினை கேட்கும் சகோதரனிடம் நீ தனியாகப் போனால் வீட்டைப் பழுதாக்கி விடுவாய் என்று கூறுவதில் நல்லெண்ணமா இருக்கமுடியும்? எங்கள் விதியை—அது நன்றாக இருந்தாலும்சரி; இல்லாவிட்டாலும் சரி—நாங்களே தீர்மானித்துக் கொள்ள வேண்டும் என்பதுதானே பிரிவினைக் கொள்கையின் அடிப்படை!

ஜின்னா: திராவிட நாடு கூடாது என்பதற்கு அவர்கள் வேறு என்ன கூறுகிறார்கள்?

அண்ணா: திராவிட நாடு என்பது இலக்கியத்தில் இல்லையாம்!

ஜின்னா: பாகிஸ்தான் என்னும் பெயர் எந்த இலக்கியத்தில் எந்த —மொழியில் இருக்கிறது? 1906-ம்ஆண்டு டிசம்பர் மாதம் 30-ம் தேதி டாக்கா நகரில் முஸ்லிம் லீக் தோன்றியபோது இந்திய முசல்மான்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் விசுவாசமாக இருப்பதும், முசல்மான்களின் அரசியல் உரிமைகளைப் பாதுகாப்பதும் இதர சமூகத்தாரோடு ஏற்படும் கசப்பைப் போக்குவதும் தானே அதன் மூன்று குறிக்கோள்கள்!

அண்ணா: ஆமாம், ஆமாம் காங்கிரசின் நோக்கமும் அதுதானே?

ஜின்னா: பிறகுதான் தனிநாடு கோரிக்கை மெதுவாகத் தலைநீட்டியது அப்போதும் அதற்கு என்ன பெயர் வைப்பதென்று நாங்கள் கனவுகூடக் காணவில்லை. பிறகு ஒருவழியாக இந்தப் பிரச்னைக்கு முடிவு கண்டோம். ஆசியாவில் உள்ள அத்தனை முஸ்லிம் தாயகங்களின் பெயரையும் எடுத்து, அவற்றின் முதல் எழுத்துக்களை ஒன்று சேர்த்து பாகிஸ்தான் என்று பெயர் வைத்தோம். P-என்பது பஞ்சாபைக் குறிக்கும் . என்பது ஆப்கானியா. K-என்பது காஷ்மீர். I-ஈரான். S-சிந்து. T-துகாரிஸ்தானின் முதல் எழுத்து. A-ஆப்கானிஸ்தானைக் குறிக்கும். இத்தனை பர்சிய உருதுப் பெயர்களின் முதல் எழுத்துக்களுக்கும் முழுமை உருவம் கொடுத்து எழுந்த பெயர்தான் பாகிஸ்தான்!

அண்ணா: அடுத்து திராவிட நாடு இலட்சியம் தமிழகத்தில் நன்கு பரவியிருப்பதுபோல, ஆந்திர கேரள கர்நாடகத்தில் பரவவில்லையே என்கிறார்கள்!

ஜின்னா: அப்படியானால் தமிழகத்தில் அந்த இலட்சியம் வளர்ந்து வேரூன்றி இருப்பதை அவர்கள் ஒப்புக் கொள்கிறார்களே; அதுவரைக்கும் மகிழ்ச்சிதானே! ஆந்திர-கேரள - கர்நாடகத்தில் அந்த இலட்சியத்திற்கு ஆதரவு கிடைத்தால் அதை ஒப்புக் கொள்வார்களா? நண்பரே! விடுதலை இயக்கம் இதுபோன்ற குதர்க்கவாதங்களைச் சந்தித்துத்தான் தீர வேண்டும்! 1937-ல் பிரிட்டிஷ் இந்தியாவில் நடைபெற்ற தேர்தலில் 29 கோடியே 50 லட்சம் வாக்காளர்கள் இருந்தனர். அவர்களில்மூன்று கோடி பேர் தேர்தலில் பங்கு கொண்டு வாக்களித்தனர். இந்த மூன்று கோடி பேரில் 30 சதவீதத்தினர்—அதாவது 90 லட்சம் பேர் முஸ்லீம்கள்!

தேர்தலில் போட்டியிட்ட முக்கிய கட்சிகள் காங்கிரசும் முஸ்லிம் லீகும்!

முஸ்லிம் லீகிற்கு 90 லட்சம் முஸ்லிம்களின் மொத்த வாக்குகளுமா கிடைத்தன? இல்லவே இல்லை. மொத்தமுஸ்லிம்

ஓட்டுகளில் 5 சத வீதத்திற்குக் குறைவாகத்தான் லீகிற்குக் கிடைத்தது. அதாவது நூற்றுக்கு 95 முஸ்லிம்கள் பாகிஸ்தான் கேட்கும் முஸ்லிம் லீக்கை ஆதரிக்கவில்லை.

அண்ணா: அதையே தான் நாங்களும் சொல்கிறோம் 1937-ல் 5 சத விகித முஸ்லிம் வாக்காளர்களின் ஆதரவையே பெற்றிருந்த போதிலும் எப்படிப் பின்னால் எல்லா முஸ்லிம்களின் ஆதரவையும் பெற்று தனிநாடு பெற்றதோ அது போலவே தான் நாங்களும் படிப்படியாக வளர்ந்து ஆந்திர கேரள கர்நாடகத்தவரின் ஆதரவு பெற்று திராவிட நாடு பெறுவோம்!

ஜின்னா: கடைசி நேரத்தில் கூட எங்களுக்கு எல்லா முஸ்லிம்களின் ஆதரவும் இல்லை 1946 தேர்தல் முடிவுகூட எங்களுக்கு முழு வெற்றி என்று சொல்லிவிட முடியாது. வடமேற்கு எல்லைப் புற மாநிலத்தின் முதலமைச்சரும், இதர அமைச்சர்களும் பாகிஸ்தானை எதிர்க்கும் காங்கிரஸ்காரர்கள். பஞ்சாபின் முதலமைச்சர் சர் கிசிர் ஹயத்கான் திவானா என்னையும், லீக்கையும் எதிரிகளாக நினைத்தவர். அவர் இந்து, முஸ்லிம், சீக்கியர்கள் ஆதரவுடன் ஒருகூட்டு அமைச்சரவையைத்தான் நடத்தி வந்தார்.

அண்ணா: இருந்தாலும் பிரிவினை உதயம் கண்ணுக்குத் தெரிய ஆரம்பித்தவுடன் எதிர்த்தவர்கள் உங்களுக்கு ஆதரவு கொடுக்கவில்லையா! அது தெரியாமல் கேள்வி எழுப்பிக் கொண்டே இருப்பவர்களை என்ன செய்வது?

ஜின்னா: அலட்சியப்படுத்துங்கள், அண்ணாதுரை; அலட்சியப் படுத்துங்கள்!

அண்ணா: மேலும்; திராவிட நாட்டின் எல்லை என்ன; அதன் தாத்பரியம் என்ன என்று ஒரு சிலர் கேள்வி எழுப்புகிறார்கள்!

ஜின்னா: என்னை ஒரு சமயம் பேட்டிகண்ட பெவர்லி நிக்கோல்ஸ் இப்படித்தான் கேட்டார், பாகிஸ்தான் என்றால் என்ன, அது எப்படி இருக்கும் அதன் பொருளாதாரம் எப்படிப்பட்டது — என்று நீங்கள் வியாக்யானம் தரவில்லையே. என்று!

அண்ணா: அதற்கு நீங்கள் தந்தபதில் மிகவும் ஆணித்தரமானது அல்லவா?

ஜின்னா: ஆமாம்; பிரிட்டிஷ் வரலாறு படித்த எந்த புத்திசாலி வெள்ளைக்காரனும் கேட்கக்கூடிய கேள்வி இதுவல்லவே என்றேன். பிரிட்டனிலிருந்து அயர்லாந்து பிரிக்கப்பட்ட போது அந்த ஒப்பந்தப் பத்திரம் சுமார் பத்தே வரிகளுக்குள் அடங்கிவிட்டது.

பல நூற்றாண்டுகளாக பிரிட்டிஷ் அரசியலைக் குழப்பிக் கொண்டிருந்த ஒரு பிரச்னை பத்தே வரிகளில் முடிந்துவிட்டது ஆனால் பத்து வரிகளில் அது எப்படி முடிந்தது! நாடு பிரியும் என்பதைத் தவிர மற்ற பிரச்னைகளை — எது எல்லாப் பிரச்னைகளையும் தீர்க்கும் சர்வ வல்லமை படைத்ததோ அந்தவருங்காலத்திடம் ஒப்படைத்துவிட்டார்கள். அந்தப்பத்து வரிகளுக்கு மேலாகவே நான் பாகிஸ்தானைப்பற்றி விவரித்து விட்டேன்!

அண்ணா: நானும் அப்படித்தான்!

ஜின்னா: பிறகென்ன அது போதுமே! மேலும் ஒரு நாட்டுப் பிரிவினைக்கான சகலத்தையும் உள்ளடக்கிய ஒரு நகல் திட்டத்தை (*Blue Print* தயாரிப்பது என்பது யாராலும் முடியாத காரியம் உங்களைக் கேட்பது போலத்தான் அன்று என்னையும் பாகிஸ்தானின் எல்லை என்னவென்று கேட்டார்கள் எனக்கேதெரிந்தால் தானேபதில் சொல்லமுடியும்" இறுதியில் என்ன ஆயிற்று?

அண்ணா: வருங்காலம்தக்க பதில் சொல்லி விட்டது!

ஜின்னா: ஆமாம்; பிரிவினைத்திட்டம் ஒப்புக்கொள்ளப்பட்டால் மற்றவை அதைப் பின் தொடரும். மேலும். திராவிடம் பிரிந்தால் பாதுகாப்பை எப்படிச் சமாளிப்பீர்கள் என்று கேட்பார்களே!

அண்ணா: ஆமாம்; கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள்!

ஜின்னா: பெவர்லி நிக்கோல்சிடம் நான் நன்றாகப் பதில் சொன்னேன். ஆப்கானிஸ்தானை யார் பாதுகாக்கிறார்கள்? ஆப்கானியர்கள். அதைப் போல நாங்களும் என்றேன்.

அண்ணா: விடுதலை கோருகிறவர்கள் நாட்டைக்காப்பாற்ற போராட மாட்டார்களா?

ஜின்னா: மேலும் நான் பாகிஸ்தானை கேட்ட போது ஒரே இரவில்

ரது படத்தைக்காட்டிஓட்டு பெறும் சாதாரணக் கொடி தூக்கித்தொண்டன்வரை அனைவரும்தான்!

ஜின்னா: ஹஹ்ஹஹா...... [சிரிக்கிறார்]

அண்ணா: ஏன் சிரிக்கிறீர்?

ஜின்னா: இந்தப் பண்டிதரைப்பற்றிச் சொன்னதும் எனக்குச் சிரிப்பு வருகிறது. அவர் தனது 'சுயசரிதம்' என்னும் புத்தகத்தில் என்ன எழுதியிருக்கிறார் தெரியுமா? "இந்தியாவுக்குள் ஒரு முஸ்லிம் நாடு—ஒரு நாட்டுக்குள் இன்னொருநாடு—அதுவும் ஒரே பிராந்தியமாக இல்லாத—தெளிவில்லாத தீர்மானமில்லாத அது அரசியல்ரீதியாக ஒரு அபத்தமான கருத்து. பொருளாதார ரீதியாக அது ஒரு (அமுலாக முடியாத) விநோதம். அது யோசிப்பதற்கே லாயக்கில்லாத விஷயம்" அறிஞரே! இப்படிச் சொன்னவர்தான் இன்று திராவிட நாட்டைக் கேலி செய்யும் பண்டிதநேரு!

அண்ணா: அந்தப் புத்தகத்தில் பாகிஸ்தானைப்பற்றி அதோடு நிறுத்திக் கொண்டாரா! "முஸ்லிம்களுக்குத் தனிநாடு என்னும் கருத்து சிலரது யோசனையில் தோன்றிய ஒரு கற்பனையே. பத்திரிகைகள் மட்டும் அதற்கு விளம்பரம்கொடுத்திருக்காவிட்டால் அதைப்பற்றிச் சிலர்தான் கேள்விப்பட்டிருக்க முடியும். அதைப் பலர் நம்பிக்கொண்டிருந்தாலும் உண்மையின் கைபட்டு அது மறைந்துவிடும்." என்றுகூட அல்லவா எழுதியிருக்கிறார்.

ஜின்னா: அவர் சிலர் என்று சொன்னது 850 லட்சம் மக்களின் ஏகோபித்த குரலை! உண்மையின் கைபட்டு பாகிஸ்தான் பிரிந்ததே தவிர; அந்த எண்ணம் மறைந்துவிடவில்லை, அறிஞரே!

அண்ணா: எனக்கு இன்னொன்றும் நினைவு வருகிறது. 1942-ம் ஆண்டு, ஜூலை மாதம் 19-ம் தேதி "நியூயார்க் டைம்ஸ் மெகசைன்" என்னும் பத்திரிகைக்குப் பண்டித நேரு செய்தி அனுப்பியபோது, "இந்தியாவைப் பிரிக்க வேண்டும் என்று இப்போது சில முஸ்லிம்கள் கோரிக்கை எழுப்புகின்றனர். அந்தக் கோரிக்கைக்கு வயது நான்குகூட ஆகவில்லை என்பது நினைவுகொள்ளத்தக்கது. சிலர்தான் அதைப் பொருட்படுத்துகிறார்கள்" என்று குறிப்பிட்டிருந்தார்.

ஜின்னா: ஆமாம் அறிஞரே! வயதைவைத்துக் கணக்குப்போட்டு ஏமாந்தார் பண்டிதர். விடுதலைப்போர் ஆயிரம் ஆண்டும் நடைபெறும்; ஒரே விநாடியிலும் முடிந்துவிடும் என்பதை அவர் மறந்துவிட்டார். நான்கு வயதுக் குழந்தையைக் கண்டே பயந்து உளறியவர், பன்னிரண்டு வயது சிறுவனை உங்கள் ஆசிரியத்தையைக்கண்டு படாதபாடு படுவாரே! உம், அறிஞரே! விடுதலைக் கிளர்ச்சி என்பது ஒரு எரிமலை. அது திடீரென்று ஒருநாள் நெருப்புக்குழம்பைக் கக்கினாலும், பலநாட்கள் பூமியின் மடியில் அந்தக்குமுறல் நடைபெற்று அடக்க முடியாத கடைசி நேரத்தில்தான் அதன் வாய் பிளக்கிறது. பாகிஸ்தான் எனும் இலட்சிய எரிமலை வெடித்துத் தீக்குழம்பை வாரி இறைக்கும் வரை, தபண்டி நேரு மட்டுமல்ல; எங்கள் இனத்தைச் சேர்ந்தவர்களே சிலர் இதை உணர முடியாத நிலையில் இருந்தார்கள்.

ஜான்குந்தரைப் பற்றித்தான் உங்களுக்குத் தெரியுமே!

அண்ணா; ஆமாம்;புகழ்பெற்ற பத்திரிகைக்காரர்!, 'ஆசியாவுக்குள்ளே' 'அமெரிக்காவுக்குள்ளே' 'ரஷ்யாவுக்குள்ளே' என்று பல புத்தகங்கள் எழுதி 'Great Insider' என்று புகழ் பெற்றவர்!

ஜின்னா: அவர் என்னைப் பற்றி எழுதியதை நினைத்தால் இப்போதுகூட சிரிப்புவருகிறது. 'தீவிர பிரிவினைக்கொள்கையைத் தழுவிய காரணத்தால் ஜின்னா தனது புகழைப் பாழ்படுத்திக்கொண்டார்' என்று 1939-ல் எழுதியிருக்கிறார்.

அண்ணா: இன்று நீங்கள்

# அண்ணாவும் ஜின்னாவும்

பாகிஸ்தான் பிதா என்று போற்றப்படுகிறீர் ஒவ்வொரு பாகிஸ்தானியின் வீட்டிலும்—ஏன்; அவர்களது நெஞ்சத்தில் எல்லாம்–உங்கள் திருவுருவம் அலங்கரிக்கிறது!

ஜின்னா: அதுபோலவே நெவரண்ட் ரெஜினால்ட் சோரென்சன் (Rev. Regianld sorensen) பற்றியும் நீங்கள் அறிவீர்கள்!

அவர் 1947-ல் எழுதிய தனது புத்தகத்தில் R. sovensen, "My impressions of india" London, 1947

பாகிஸ்தான் "முடியாத காரியம் மட்டுமல்ல; விரும்பத்தகாததும்" — என்று குறிப்பிட்டிருந்தார் "மீண்டும் இந்தத்தீபகற்பத்தின் குறுக்கே ஒரு கள்ளி வேலியை ஏற்படுத்துவது நாகரிகத்துக்கே எதிரான குற்றம்" என்று வர்ணித்தார்.

அண்ணா: பாகிஸ்தானை உருவாக்கியது நாகரிகத்துக்கு எதிரான குற்றமானால் மரண தண்டனையே கிடைத்தாலும் நானும் அதே குற்றத்தைச் செய்தே தீருவேன்!

ஜின்னா: இந்த உறுதி இருந்தால் உங்களை யாரும் அசைக்க முடியாது. இந்த நேரம் உங்களுக்கு இன்னொன்றையும் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். 193?-ம் ஆண்டு பாராளுமன்ற கூட்டுப் பொறுக்குக்குழு (Joint Sclect Committee of Parlia) ment) வைச் சந்தித்த சில முஸ்லிம்லீக் பிரதிநிதிகள் "பாகிஸ்தான் என்பது துடிப்புள்ள சில மாணவர்கள் உருவாக்கிய யோசனையே தவிர வேறில்லை" என்றும், "நடைமுறைக்கு ஒத்துவரமுடியாதது" என்றும் கூறினார்கள். நண்பரே! இப்படிக் கூறிய அதே நபர்கள்தான் பின்னால் பாகிஸ்தானையே நிறுவுவோர்களாக மாறினார்கள். இந்த வேடிக்கையைப்பற்றி நீங்கள்என்ன கருதுகிறீர்கள்

அண்ணா: வெடிக்கும் வரையில் எரிமலையின் குமுறலை உணர முடியாதவர்கள்!

ஜின்னா: அப்படிப்பட்டவர்கள்தான் இன்று திராவிட



# சந்தன நிலா

நா.பாண்டுரங்கன், எம்.ஏ.

வாத்துப்பண்ணை அகன்றதும் வயலில் கிடக்கும் ஒரே முட்டையைப் போல வானத்தில் நிலவு கிடக்கிறது!" என்று மயில்வாணன் சொன்னான். அவனுக்கு அருகில் கடற்கரையில் மணற்பரப்பில் அலைகளுக்கு அருகே அமர்ந்திருந்த சந்தனநிலா "உங்கள் கற்பனையை எந்தக் கவிஞர் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் நான் ஏற்றுப் பாராட்டுவேன் என்பது நிச்சயம்.



ஆகையால் தொடர்ந்து உங்கள் கற்பனை நடந்துசெல்லலாம். உம்... தொடரட்டும்!'' என்று சிரித்துக் கொண்டே கூறினாள். வானத்திலிருந்த பார்வையை அவள் முகத்துக்கு மாற்றிக் கொண்டு மயில்வாணன் தன் கற்பனையைத் தொடர்ந்தான். "பகல் பறவை வானத்தில் விட்டு விட்டுப்போன முட்டைதான் இந்த வட்ட நிலவு! இரவுப் பறவை இதை அடைகாத்ததும் முட்டை வெடித்துக் குஞ்சுபுறப்படுகிறது. என்ன குஞ்சு, தெரியுமா? சூரியக் குஞ்சு!" அவன் சிரித்தான். அவள் சிரித்தாள். "முட்டை என்றதும் ஓர் எழுத்தாளரின் வாக்கியங்கள் என் நினைவில் வருகின்றன!'' என்றாள் சந்தனநிலா. "முட்டையைப் பற்றி அந்த எழுத்தாளர் என்ன சொல்லுகிறார்?" என்று மயில்வாணன் ஆவலோடு கேட்டான். "காதல் என்பது முட்டை! கல்யாணம் என்பது அதிலிருந்து வெளிப்படும் குஞ்சு! எல்லாமுட்டைகளிலிருந்தும் குஞ்சுவெளிப்படுவதில்லை. அதுபோல் எல்லாக் காதலிலும் கல்யாணம் மலர்வதில்லை!''-என்று அந்த எழுத்தாளர் சொல்லுகிறார். "எந்த எழுத்தாளர்? எனக்கு எதிரே உட்கார்ந்திருக்கும் பெண் எழுத்தாளர் அப்படிச் சொல்லுகிறாரா?" என்று கேட்டுவிட்டு மயில்வாணன் சிரித்தான். சந்தனநிலா புன்னகை புரிந்தாள். "நட்சத்திரங்களையும் நிலவையும் நினைத்தால் எனக்கு என்ன தோன்றுகிறது தெரியுமா? வானம் ஒரு குளம். நட்சத்திரங்கள் அந்தக் குளத்தில் மலர்ந்துள்ள நல்ல அல்லிப் பூக்கள்! தண்ணொளி வீசும் வெண்ணிலவு தலைகீழாகத் தண்ணீரில் மிதக்கும் வெள்ளிக்குடம்!'' அவள் சொல்லி முடித்ததும் அவன் சிரித்தான். "ஏன் சிரிக்கிறீர்கள்? என் கற்பனை, சிரிப்பைஉண்டாக்குகிறதா?" என்று பொய்க் கோபத்தோடு கேட்டாள் சந்தன நிலா. "கற்பனை குமரியினுடையது. ஆகவேகுடமும் குளமும்தவறுமல் இடம் பெற்றுவிட்டன என்று நினைத்தேன். சிரிப்புத் தானே வந்துவிட்டது!'' என்று சொல்லி மீண்டும் சிரித்தான் மயில்வாணன்.

"ஆண்களுக்கு மட்டுமே உரிய பண்பு அவர்களை விட்டு எப்போதும் விலகுவதில்லை. கற்பனையில் கூட ஆண் பெண் என்றுபிரித்து ஆணின் உயர்வை எண்ணிச்சிரிக்கிறார்கள். இந்தப் பண்புக்குப் பெயர் தான் ஆணவம்!" புன்னகையுடன் சொன்னாள் சந்தன நிலா.

பெண்ணுக்கு ஆணவம் கிடையாதா?"

"கிடையாது! ஆணவம் என்றுதான் வழக்கில் இருக்கிறதே தவிரப் "பெண்ணவம்" என்று யாராவதுபேசிக் கேட்டது உண்டா?"

சந்தன நிலாவின் பதிலை கேட்டு மயில்வாணன் சிரித்தான். "இந்த அலை ஓசையைக் கேட்[illegible]னக்கு எந்த ஓசை நினைவில் வருகிறது?" என்று அவன் கேட்டான்.

"உங்களுக்கு எந்த ஓசை நினைவில் வரும் என்பது எனக்குத் தெரியும்"

"எங்கே! சொல்! கேட்கலாம்."

"பொதுக்கூட்டத்தில் எழுந்து அடங்கும் கைதட்டல் ஓசைதான் இந்த அலைஓசை உங்களுக்கு-இப்போது!"

"சரியான பதிலைச் சொன்னதற்காக என்ன பரிசு தரலாம் உனக்கு என்று சிந்தித்துக்கொண்டிருக்கிறேன்!"

"நீங்கள் சிந்திப்பது வீண்!"

"ஏன்? நான் இப்போது உனக்கு எந்தப் பரிசும் அளிக்க முடியாது என்று நினைக்கிறாயா? நான் ஏழைதான் என்றாலும் ஒரு பரிசு உனக்கு வாங்கித் தருவதற்குக்கூட வழியில்லாத அவ்வளவு ஏழையல்ல! என் பையில் இப்போது பதினைந்து ரூபாய் இருக்கிறது!"

"பத்துப் பவுன்களே உங்கள் பையிலிருந்தாலும் நீங்கள் இப்போது எனக்குப் பரிசளிக்க முடியாது! ஆகையால் தான் பரிசைப் பற்றி நீங்கள் சிந்திக்க வேண்டாம் என்று சொன்னேன்!"

"கருமி என்று என்னை நினைத்துவிட்டாயா?"

"இருபதாம் நூற்றாண்டுப் பாரிவள்ளலாகவே நீங்கள் இருக்கலாம்! உங்களிடம் எந்தப்பொருள் இருந்தாலும் அதில் உங்களுக்கு உரிமை இல்லை!"

"ஏன்?"

"நீங்களே என்னுடைய பொருள்! வலது கை இடது கைக்கு வழங்கி வள்ளலாகி விட முடியுமா?"

"என்னைப்பொருள் என்று சொல்லி விட்டாயே! நான் உயிருள்ள மனிதன் சந்தனு!"

"நீங்கள் மனிதராக இருக்கலாம். ஆனால் உங்களிடத்தில் உயிர் இல்லை!"

"உயிர் இல்லாமல் எப்படி வாழ முடியும். நான் இதோ பேசுகிறேன்! என் உயிர் இல்லாமல் நான் பேச முடியுமா?"

"முடியும்!"

"எபபடி?"

"உங்கள் உயிர்தான் உங்களிடத்தில் இல்லை. ஆனால் என் உயிர் உங்களிடத்தில் இருக்கிறது."

"அப்படியானால் என் உயிர் உன்னிடத்தில் இருக்கிறதா?"

'என்னிடம் இல்லை!'

"பின் எங்கே இருக்கிறது?"

"உங்களோடு பக்கத்தில் இந்தக் கடற்கரையில் உட்கார்ந்து இதோ பேசிக்கொண்டிருக்கிறது!"

மயில்வாணன் சிரிப்போடு சந்தன நிலாவின் சிரிப்பு இணைந்தது

மயில்வாணனும் சந்தன நிலாவும் கதையில் வரும் காதலர்கள் அல்லர்; கதையால் காதலர்கள் ஆனவர்கள்! புகழ்பெற்ற வார இதழ் ஒன்று ஆயிரம் ரூபாய்ச் சிறுகதைப் போட்டி ஒன்று நடத்தியது. போட்டிக்குச் சுவையூட்டுவதற்காக அமைச்சர் ஒருவரையும் எதிர்க்கட்சித்தலைவர் ஒருவரையும் சேர்த்து இரண்டு பேர் கொண்ட அந்தக் குழுவே மிகச் சிறந்த ஒரு சிறுகதையைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்திருந்தது அந்த இதழ்! போட்டி முடிவு வெளியாகி இருந்தது இதழில்! தீர்ப்புக் குழு மிகச்சிறந்த ஒரு கதையைத் தேர்ந்தெடுப்பதற்குப் பதிலாக இரண்டு கதைகளைத் தேர்ந்தெடுத்தது.

"இரண்டு கண்களில் எது சிறந்தது என்று எப்படிச் சொல்ல முடியும்? உடல் சிறந்ததா? உயிர் சிறந்ததா என்று எப்படிக் கூறுவது? இந்த இரண்டு சிறுகதைகளும் முகத்தில் உள்ள இரண்டு கண்கள்! உயிரும் உடலும் போன்றவை இவை!" தீர்ப்புக் குழுவில் இருந்த எதிர்க்கட்சித் தலைவர் இப்படிக் கூறியிருந்தார். ஆகவே ஆயிரம் ரூபாய் இரண்டாகப் பிரிந்து இரண்டு கதைகளையும் அடையும் என்று அறிவிப்பு வெளிவந்திருந்தது! இலக்கிய விழா ஒன்று அமைந்து அதில் பரிசளிப்பு நிகழ்ச்சி இடம் பெற்றது. எதிர்க்கட்சித்தலைவர் இலக்கிய விழாக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார். அமைச்சர் பரிசு வழங்கும் பணியை ஏற்றார். பரிசு வழங்குவதற்கு முன் அமைச்சர் பேசுகையில் புன்னகையோடு குறிப்பிட்டார். "பிரிவினை என்றால் நான் அதை விரும்பாதவன் மட்டுமல்ல -வெறுப்பவனுங் கூட! ஆனால் சட்ட மன்றத்திலே எதிர்க் கட்சித் தலைவரும் இந்த இலக்கிய மன்றத்திலே இப்போதைய தலைவரும் ஆகிய என் நண்பருக்குப் பிரிவினை என்றால் பேரானந்தம்! ஆட்சி மன்றத்தில் வற்புறுத்துவது போலவே கதைக்குத் தீர்ப்பளிக்கும் அறிவுமன்றத்திலேயும் என் நண்பர் பிரிவினையை வற்புறுத்தினர். முதற் பரிசு இரண்டாகப் பிரிந்தது.ஆயிரம் ரூபாய் பெறவேண்டிய முதற்பரிசுக்குரிய எழுத்தாளர் ஐநூறு ரூபாய் மட்டுமே பெறவேண்டிவருகிறது! பிரிவினையினால் எவ்வளவு பெரிய நஷ்டம் பார்த்தீர்களா?"

அமைச்சர் பேச்சைத் தொடரமுடியவில்லை. மகிழ்ச்சி நிறைந்த கை தட்டல் ஒலியும் சிரிப் பொலியும் விழாக் கூட்டத்திலிருந்து வெடித்தது. அமைச்சர் வெற்றிப்பெருமிதத்தோடுஅவைத் தலைவரைப் பார்த்தார்! பரிசுப் பணமுடிப்புக்கள் இரண்டையும் அமைச்சர் கரத்தில் எடுத்துக் கொடுப்பதற்கு முன் இலக்கிய இதழின் உரிமையாளர் எழுந்து அவையைப் பார்த்து "அமைச்சர் அவர்களின் கை தொட்டது வளரும். இப்போது முதற் பரிசுக்குரிய கதைகள் இரண்டு என்று தீர்ப்புவந்ததால் முதற்பரிசை இரண்டாக்கி இரண்டு முதற்பரிசுகள் அளிக்கிறோம். ஆனால் ஒரு சிறுமாறுதல். ஒவ்வொரு கதைக்கும் தொகையைப் பாதியாக்காமல் — ஆயிரம் என்று அறிவித்தபடி முழுமையாக அளிக்க முன்வருகிறேன் ஆயிரம் ரூபாய்ச் சிறுகதைப் போட்டி இப்போது இரண்டு முதற்பரிசுகளுடைய இரண்டாயிரம் ரூபாயைப் பெறுகிறது!" என்று கூறினர்.

அவையில் பாராட்டுதல்கள் எழுந்தது!

அவைத் தலைவர் - சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் தம் முடிவுரையைப் புன்னகையோடு தொடங்கினார்.

"அமைச்சர் அவர்கள் பிரிவினையினால் எவ்வளவு பெரிய நஷ்டம் பார்த்தீர்களா என்று குறிப்பிட்டார்கள், பிரிவினையை நான் வற்புறுத்தியதால்தான் ஒருவருக்கு மட்டும் ஆயிரம் ரூபாய்ப் பரிசு கிடைப்பதற்குப் பதில் ஆயிரம் ஆயிரமாக இருவருக்கு இரண்டாயிரம் கிடைத்திருக்கிறது. பிரிவினையினால் எவ்வளவு பெரிய இலாபம் பார்த்தீர்களா?" அவை முழுவதும் மகிழ்ச்சி ஆரவாரத்தால் தொடர்ந்து இரண்டு கணம் அதிர்ந்தது.

"ஆயிரம் ரூபாய் பரிசு அருமை எழுத்தாளர் ஒருவர் நாட்டுக்கு அறிமுகமாவதற்குப் பதில் இப்போது இருவர் அறுமுகமாகின்றார்கள்! இது பிரிவினையின் பயனன்றோ! ஆனால் அறிவு மன்றத்தில் தாய்க்குலத்தைச் சார்ந்த தகுதியுள்ள பெண்ணின் வெற்றிக்காகப் பிரிவினையை வற்புறுத்தினேன். என் வற்புறுத்துதலால் பிரிவினை ஏற்பட்டால் பிரிக்கப்படும் இரண்டு இடத்துக்கும் இலாபம் ஏற்படுமே தவிர நட்டம் ஏற்படாது! இந்த நிகழ்ச்சி ஒரு மகிழ்ச்சி எடுத்துக்காட்டு. அவை மீண்டும் மகிழ்ச்சி ஆரவாரத்தில் ஆழ்ந்தது. பெருத்த கைதட்டல்களுக்கிடையே மேடைக்குச் சென்று அந்தப்பெண் எழுத்தாளர் சந்தன நிலா பரிசை வாங்கிக் கொண்டபோது மக்கள் வெள்ளததின் பார்வை அவள்மீது ஆர்வத்தோடு பாய்ந்தது. கூட்டத்திலிருந்து ஒரு குரல் "அழகின் வெற்றி!" என்று முணுமுணுத்தது. 'அப்படிச் சொல்லாதீர் இது அறிவின் 'வெற்றி-அதனால்தான் அழகு இதைப் பெற்றுக் கொள்கிறது" என்று மற்றொரு குரலிடமிருந்து பதில் வந்தது. தொடர்ந்து ஆரவாரத்துக்கிடையே மேடைக்குச்சென்று மயில்வாணன் பரிசைப் பெற்றுக்கொண்டான். "இதுஎன்ன வெற்றி ஐயா?" என்றது ஒரு குரல். "இயற்கையின் வெற்றி!" என்று இன்னொருகுரல்கூறியது. சிரிப்பொலியோடு "போர் நடந்தால்தானே வெற்றி தோல்வி. இயற்கை யாரோடு போரிடுவது?" என்று வேறொரு குரல் கூறியது. மயில்வாணனும், சந்தன நிலாவும் முதல்முதல் ஒருவரை ஒருவர் ஒரேநேரத்தில் பார்த்துக்கொள்ளும் நிகழ்ச்சியை ஒரு செய்தித்தாளின் புகைப்பட நிருபர் செய்து வைத்தார். கூட்டத்தின் முடிவில் சந்தன நிலாவையும், மயில்வாணனையும் ஒரே இடத்தில் அருகருகே நிறுத்தி பரிசை இருவரும் கையில்பிடித்த நிலையில் ஒரு புகைப்படம் எடுத்தார் அந்த



வானரத்தின் வாகனம்!

நிருபர். சந்தனநிலாவின் கண் மயில்வாணனின் கண்களைச் சந்திக்கும்போது அவர்களை அறியாமலே அவர்களின் வாய் "வணக்கம்" என்று ஒலித்தது இருவர் உள்ளங்களிலும் மகிழ்ச்சி நிறைந்தது. "சற்று அருகே இன்னும் தள்ளி நில்லுங்கள்!" என்று கூச்சப்பட்டு விலகி நின்ற மயில்வாணனை பார்த்து அந்தப் புகைப்பட நிருபர் காமிராவைச் சரி செய்துகொண்டே சொல்லிய போது சுற்றிக்குழுமியிருந்த கூட்டத்தில் சிரிப்பொலிகள் சிந்தின! சந்தனநிலாவின் கண்களும், மயில்வாணனின் கண்களும் இரண்டாவது முறையாகச் சந்தித்து விலகின. இதழ்கள் புன்னகைகளைச் சிந்தின. "வெட்கம் இந்தக் காலத்தில் இடம் மாற்றிக்கொண்டுவிட்டது!" என்றது ஒரு குரல். மயில்வாணனின் ஆண்மையை இது தாக்கியிருக்கவேண்டும். சந்தனநிலாவுக்கு அருகே தான் நிற்பதால் உள்ளம் அமைதி இழக்கவில்லை என்பதைக் காட்டிக்கொள்ளுவதற்காக மயில்வாணன் நகைச்சுவைஎன்று கருதிக்கொண்டு "பரிசைப் பெற்றுக்கொண்டபோது பரவசமாக இருந்தது. படமெடுக்கும்இப்போதுபயமாக இருக்கிறது!" என்று சிரித்துக்கொண்டே கூறினான். கூட்டத்தில்சிலர் சிரித்தனர். சந்தனநிலா உடனே "இவ்வளவுபேர் இருக்கும்போதா பயம்?" என்றுபதில்சொல்லிவிட்டுப்புன்னகையைச்சிந்தினாள்! கூட்டத்தில் பலரும் சிரித்தனர். "படிப்பு இந்த காலத்தில் ஆணைப் பெண்ணாக்கிவிடுகிறது- பெண்ணை ஆணாக்கிவிடுகிறது என்று எங்கள் பாட்டி சொன்னது சரியாப்போச்சு!" என்று துணிவோடு கூறியது ஒரு குரல். எல்லோரும் சிரித்தனர். இலக்கியவிழாக்கூட்டம் தொடங்குவதற்குமுன் எங்கிருந்தோ வந்து சேர்ந்திருந்த இருவராக இருந்த மயில்வாணனும்சந்தனநிலாவும் கூட்டம் முடிந்துபிரிந்து சென்றபோது எங்கிருந்து பிரிகிறோம்என்பதைப்புரிந்த ஒருவராகச் சென்றனர். இருவர் கதைகளும் இலக்கிய இதழின் மலரில் வெளியாகி இருந்தன. "உங்கள் கதையைப்படித்தேன். இருளில் சந்தன நிலாவைக்கண்ட புரட்சிக்கவிஞன் ஆனேன்!" என்று மயில்வாணன் சந்தனநிலாவுக்குக் கடிதம் எழுதினான்.

"உங்கள் கதையைப் படித்தேன். வண்ணமயிலின் ஆட்டத்தைக்கண்ட வையாவிக்கோப் பெரும்பேகன் ஆனேன்!" என்று சந்தனநிலா மயில்வாணனுக்கு எழுதியிருந்தாள். இருவர் கடிதங்களும் ஒரே நேரத்தில் இருவர்கரங்களையும் அடைந்ததை நினைத்து இருவருக்கும் புதுமைகலந்த பூரிப்பு எழுந்தது. "புதுநிலவைக் கண்டதும் பொங்கி வெளிவந்த புரட்சிககவிஞரின் தங்கக் கவிதையைப்படிக்க என் கதை தவிக்கிறது!" என்று அவள் கடிதத்தைத் தொடர்கதையாக்கினாள். "வண்ணமயிலுக்குப் பேகவள்ளலிடமிருந்து பொன்னாடை கிடைத்தது! எனக்குக் கிடைத்தது என்ன என்று என் கதை கேட்கிறது!" என்று அவன் பதிலை வளர்பிறையாக்கினான்! அறிமுகம் என்பது மலர். நட்புஎன்பது அந்த மலரின் காய்-காதல் என்பது அந்த காய் முற்றியதும் கிடைக்கும் கனி. மயில்வாணனும் சந்தனநிலாவும் தங்களுக்கிடையே பூத்தமலர் கனியாகிவிட்டது என்று கருதியிருந்தனர் சந்தனநிலா இறுதி ஆண்டு பட்டப்படிப்பு-மயில்வாணன் சட்டப்படிப்பு இறுதிஆண்டு "மாணவப்பருவத்தில் ஏற்படும் இந்தக் காதல் கரும்பலகையில் ஆசிரியர் சாக்கட்டியால் எழுதும் எழுத்து. எழுதி முடித்ததும் அழித்து முடித்துவிடுவார்! எச்சரிக்கை!!" என்று மயில்வாணனிடம் அவனுடைய நெருங்கிய நண்பர்கள் சொல்லியிருந்நனர். "காகிதத்தில் பேனாவால் எழுதும் எழுத்து இது!" என்று அவர்களுக்கு அவன் பதில் சொல்லியிருந்தான். சந்தனநிலாகூட இதே சந்தேகத்தை ஒருமுறை விளையாட்டாக மயில்வாணனிடம் எழுப்பினாள்.

"அலைஓசை இலக்கிய விழாக்கூட்டத்தின் கைதட்டல் ஓசையைத்தான் உங்களுக்கு நினைவூட்டும் என்பது எனக்குத்தெரியும் ஏன் தெரியுமா?" என்று சந்தனநிலா கேட்டாள்.

"ஏன்?" அவன் ஆவல் வளர்ந்தது.

"நாம் இங்கேஇருப்பதற்கு காரணம் கதையால்விளைந்த அந்தக்கூட்டமல்லவா? அதனால்தான்! எனக்கு இப்போது ஓர் அச்சம்!"

"என்ன அச்சம்?"

"நம்முடைய நட்பும் கதையாகிவிடுமோ என்று ஓர் அச்சம் ஏற்படுகிறது!"

"நட்பே கதைதானேகதையானால் அச்சமா? ஆனந்தமல்லவா அடையவேண்டும்! எதிர்பாராமல் தொடங்கி எதிர்பாராமல் முடிவதுதான் கதை. இந்த உலகத்தில் எல்லாமே கதைதான். உலகமே ஒரு கதைதான். இத

னுடைய தொடக்கம் எதிர்பாராதது-முடிவும் அப்படித்தான்! மனிதனும் ஒரு கதைதான். எதிர்பாராமல் பிறக்கிருன். இறப்பு எப்படி என்பது எதிர்பாராதது! வாழ்வே ஒரு கதைதான்-எதிர்பாராதவைகளின் எழிற்பூஞ்சோலைதானே வாழ்வு! இதில் நம்முடைய நட்பு ஒரு கதையாக இருப்பதில் என்ன வியப்பு?"

"கதையில் துன்பமுடிவு உண்டு-இன்பமுடிவு உண்டு! நம் கதை எதில் முடியும்?"

"முடிவில் எல்லாமே துன்பம்தான்! இன்பம் என்பது இடையில் ஒரு நிலை!'' சிரிப்போடு கூறினன்.

"நம் நட்புக்குத் துன்பமுடிவுதானு?" கலங்கிய குரலில் கேட்டாள்.

"சந்தன நிலா என்றபாட்டியின்கணவன் மயில்வாணன் தாத்தாவாகிஇறக்கும்போது நம் நட்புக்கு முடிவு துன்பம் தானே?" அவன் பதில் அவளுக்கு மகிழ்ச்சியை அளித்தது!

இறுதி ஆண்டு தேர்வுகள் முடிந்து இருவரும் பிரியும் காலம் வந்தது. தங்கள் தங்கள் ஊருக்குப்புறப்படுவதை இருவரும் இருபதுநாள் தள்ளிவைத்தனர்.

ஒவ்வொருநாளும் குறிப்பிட்டநேரத்தில் குறிப்பிட்ட இடத்தில் சந்திப்பது என்ற ஏற்பாட்டின்படி இருவரும் நான்கு நான்கு நாட்கள் தொடர்ந்து சந்தித்தனர். அறிமுகத்தை காதலாக்கிய இந்த மூன்று மாதங்களில் அவர்கள்தொடர்ந்து நான்கு நாட்கள் சந்தித்தது இப்போதுதான். இருந்த இடத்தைவிட்டு அகலாமல் நீண்டு படுத்திருக்கும் சாலை-இருக்கும்இடமில்லாமல் எப்போதும் அலைந்துகொண்டிருக்கும் அலைகள்வீசும் கடற்கரை—தம்முடைய வாழ்க்கையைக்காட்டிக் காண்பவரின் வாழ்க்கையை மறக்கச் செய்யும் திரைப்படக்காட்சி, நாவால் பேசாமல் நடிப்பால் பேசி இன்பமளிக்கும்நடனக் காட்சி இவை நான்கும்அந்த நான்கு நாட்களிலும் அவர்களைச் சந்தித்தன. ஐந்தாவதுநாள் குறிப்பிட்ட இடத்தில் மயில்வாணன் சந்தன நிலாவைச் சந்திக்கமுடியவில்லை. அவளுக்காக நெடுநேரம் காத்திருந்துவிட்டுத் திரும்பினுன். ஆருவதுநாள் மயில்வாணனுக்கு காலையில் அவனுடைய விடுதியில் தபால்காரன் விரைவு அஞ்சல் ஒன்றைக் கொடுத்துவிட்டுப்போனுன். சராசரி மதிப்பெண் வாங்கும் மாணவன் தன் தேர்வு முடிவு செய்தித்தாளில் காணப்போகும்போது ஏற்படும்உணர்வு அவன் உள்ளத்தில் எழுந்தது. சந்தன நிலாவின் கடிதம் அது.

உடனே விடுதியைக்காலி செய்து விட்டு அவள் திருச்சிக்குத் தன் வீட்டுக்குப்புறப்படவேண்டியிருந்த சூழ்நிலையை அவள் அதில் எழுதியிருந்தாள். தனக்குத் திருமண ஏற்பாடு நடப்பதாகவும்-நிலைமையை விளக்கினுல் தனக்குத் தாயாகவும் தந்தையாகவும் இருக்கும் சிற்றன்னையும் சிறிய தந்தையும்—செல்லமாக வளர்த்த



பம்பாயில் அறிஞர் அண்ணாவிற்கு
தோழர் சீனுவாசன் அளித்த புதுமுறை காலண்டர்

பெண் என்ற காரணத்தினுலும் — முற்போக்கு எண்ணம் உடையவர்கள் என்ற நம்பிக்கையினுலும் - சந்தன நிலா மயில்வாணனை மணக்கச் சம்மதம் பெற்று - அந்த வெற்றிச் செய்தியை ஒரு வாரத்தில் எழுதுவதாக எழுதியிருந்தாள்! அச்சம் அமைதியாகி அது ஒருபெரு மூச்சாகி வெளிவந்தது அவனிடமிருந்து! கடிதத்தை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். ஆனுல் மூன்று நாட்கள் சென்றதும் மயில்வாணனுக்கு அவன் வீட்டிலிருந்து—நாகையிலிருந்து—ஒருதந்தி வந்திருந்தது. அதில் அவனுக்குத் திருமணம் நிச்சயம் செய்யப் பட்டிருப்பதாயும் — உடனே புறப்பட்டு வரும்படியும் குறிப்பிடப்பட்டிருந்தது. திகைப்பு நெருப்பாகி அவன் நெஞ்சைத் தீண்டியது. "ஒரு வேளை சந்தன நிலாவோடுதான் தன் திருமணம் நிச்சயமாகி யிருக்குமோ—தன்னை ஆச்சரியத்தில் ஆழ்த்த அவள்ஏற்பாடு தானே இது?" என்ற எண்ணம் எழுந்தது.

மரணதண்டனை பெற்ற கைதி கருணைமனுவின் முடிவை எதிர்ப்பார்க்கும் உணர்வுடன் மயில்வாணன் ஊருக்குப் புறப்பட்டான்! ஊரை அடைந்து வீட்டில் நிலைமையை அறிந்ததும் அவன் உள்ளம் அமைதியை இழந்தது. "நன்ருக எண்ணிப் பார். உபகாரச்சம்பளத்தால் படித்து வக்கீலாகும் நிலைக்கு உயர்ந்துவிட்டாய். நீ இந்த திருமணத்துக்கு இசைந்தால் கனவில்கூட எதிர் பார்க்க முடியாத உயர்ந்த இடம் உன் இரண்டு தங்கைகளுக்கும் கிடைக்கும். ஒரு பெண்—இரண்டு பிள்ளைகள். பெரிய வியாபாரம் மலாயாவில். பத்து லட்சரூபாய்ச் சொத்து. உனக்கும் மட்டும் பெண்ணின் பாகமாக மூன்று லட்சம் கிடைக்கிறது. பெண்ணின் தம்பிகள் இருவரும் உன் தங்கைகளை மணப்பதாக முடிவு ஆகி இருக்கிறது. முதலில் உன் திருமணம்—பிறகு உன் தங்கைகள் திருமணம்! வாக்குக் கொடுத்துவிட்டு உன் மாமா வந்து விட்டார். உன்போட்டோ — எல்லாம் பார்த்து எல்லோருக்கும் முழு மகிழ்ச்சி! எங்கள் பேச்சைத் தட்டிநடக்கமாட்டாய் என்று வாக்குக் கொடுத்து விட்டோம். இனிமேல் இதை மாற்ற முடியாது — மாற்ற நினைக்காதே!"........அவனுடைய விதவைத்தாயும் மாமாவும் சொல்லிய இந்தச் சேதியைக் கேட்டு அவன் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சியை மகிழ்ச்சியில் சேர்ப்பதா மருட்சியில் சேர்ப்பதா என்று அவனுக்கே புரியவில்லை. இன்னும் ஒருவாரத்தில் முடிவு சொல்லுவதாகச் சொல்லி விட்டுச் சென்னையில் வேலையிருப்பதாகக் கூறி விட்டு அன்றிரவே அவன் புறப்பட்டு விட்டான்!

...குழந்தைகள் ஊஞ்சலில் ஆடுவதைப் போல அலைகள் கரையை நோக்கி வந்து கொண்டிருந்தன. வானத்தில் விண்மீன்கள் தோன்றிக் கொண்டிருந்தன கடற்கரையில் மக்கள் கூட்டம் சேர்ந்து பெருகிக் கொண்டிருந்தது. வானெலி பாடிக் கொண்டிருந்தது இரண்டு கட்சி வழக்கறிஞர்களின் நியாயமான வாதங்களில் சிக்கி நீதியைத் தேடிப்பிடிக்க முடியாமல் தவிக்கும் நீதிபதியைப்போல் மயில்வாணனின் உள்ளம் தவித்துக் கொண்டிருந்தது. சந்தன நிலாவின் அன்பு மொழிகளை அவன் உள்ளம் நினைத்தது. "நம்நட்பு கதையாகிப் போய்விடுமோ?" என்று அவள் ஒருமுறை கேட்டிருந்தது அவன் உள்ளத்தை வதைத்தது. வானத்தில் நிலவு வந்து கொண்டிருந்தது. சந்தனநிலா பேசுவதைப் போலவே உணர்ந்தான்.

"இனிமேல் நான் வாழ்வு முழுவதும் தூங்கவே முடியாது!" என்று அவள் சொன்ஞள்.

"ஏன்?"

"இரவு வந்தால் தானே உறங்க முடியும். என் வாழ்வில் உங்களைச் சந்தித்ததிலிருந்து இரவு இறந்து விட்டது!"

"நீ என்ன சொல்லுகிருய்."

"பகலில் நான் தூங்கும் பழக்கம் கிடையாது. இரவு என் வாழ்வில் வந்தால் தானே தூங்கமுடியும்?"

"ஏன் இரவு வராது?"

"சூரியன் மறைந்தால் தானே இரவு வரும்"

"சூரியன் மறையமாட்டானு?"

"என் எதிரே இருக்கும் என் சூரியன் என்வாழ்வை விட்டு இனி மறைவது இயலாது! என் சூரியனுக்கு உதிக்கத்தான் தெரியும்; மறையத்தெரியாது!"

சந்தன நிலாவின் பேச்சு மறைந்தது. கண்ணீர் வழியும் கண்களுடன் அவன் தாயின் முகம் அவன் நெஞ்சில் தோன்றியது. உன் ஏழைத்தங்கைகளின் வாழ்வை வீணக்கி விடாதே"! தாயின் குரல் கூவியது!

"உனக்கு வரும் பெண் வழியில் மூன்றுலட்சம் உனக்கு கிடைக்கும்!" மாமாவின் குரல் மீண்டும் மீண்டும் அவன் நினைவில் ஒலித்தது. படிப்பு மட்டுமே செல்வமாக உள்ள சந்தன நிலாவிடமிருந்து அவள் வீட்டில் அவளை வேறு யாருக்காவது நிச்சயம் செய்து மயில்வாணனை அவள் மணக்கும் வேண்டுகோளை மறுத்து அதனைச் சந்தன நிலா எழுதினல் இப்போது எவ்வளவு அமைதி கிடைக்கும் என்ற எண்ணம் மயில்வாணன் மனதில் மலர்ந்தது! "இதுதான் காதலா?" என்று இன்னொரு எண்ணமும் கூடவே எழுந்தது." மூன்று இலட்சம் ரூபாய்ச் சொத்து!" என்ற மாமாவின் குரல் அவன் முடிவைக் குழப்பியது. "தாய்சொல் துறந்தால் வாசகமில்லை. தந்தை சொல்மிக்க மந்திரமில்லை. சந்தனு! உனக்குத் தாயாகவும் தந்தையாகவும் உள்ளவர்களின் இலட்சியக் கோட்டை, என் காதலால் இடிந்து தரைமட்டமாகுமென்றல் நான் பாவியாவேன். அவர்கள் விருப்பப்படி நீ திருமணத்துக்கு இசைவது என் காதலுககுத் துரோகமாகாது! — காதல் துறவு தான் அது! நீ என்னை மணக்க அவர்கள் சம்மதித்தால் உன்னைவிட என் மகிழ்ச்சி பெரிது!" என்று விரைவு அஞ்சலில்மயில்வாணன்கடிதம் எழுதினன். இரண்டு நாள் கழித்து அந்தக் கடிதத்துக்கும் பதிலாக அவளிடமிருந்து "என் பெற்றோர் நான் தங்களை மணக்கச் சம்மதித்து விட்டனர்!" என்ற பதில் அவனுக்கு வந்தது! மயில்வாணனைத் தேடி அவனுடைய விடுதிக்குவந்திருந்த அவன் மாமா — அவனிடமிருந்த அந்தக் கடிதத்தை வாங்கிக் கிழித்துப் போட்டு விட்டு அவனை மலாயாவுக்கு மணமகனுக அழைத்துப் போவதற்குவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினர்.

மாமாவிடம் விடைபெற்று இரண்டு நாட்கள் வெளியூர் சென்று ஒரு நண்பனைக் கண்டு தன் நிலையைச் சொல்லி முடிவு செய்து கொண்டு மாமாவுடன் புறப்பட்டான்!

மயில்வான மணமகனை மலாயாவுக்கு ஏற்றிவந்த கப்பல் துறைமுகத்தை அடைந்தது!

மண நாளுக்கு முதல்நாள் இரவு பெண்வீட்டுப் பங்களாவுக்கு மயில்வாணனை மாப்பிள்ளையாக வரவேற்றனர். விருந்து முடிந்ததும் அன்று இரவு தோட்டத்தில் ஒருமேடையில் மயில்வாணன் அமர்ந்திருந்தான். நாதசுர இசை வானொலியில் ஒலித்துக்கொண்டிருந்தது காற்றில் கலந்து வந்தது! வானத்தில் சந்திரன் வருவது சவுக்கு மரங்களுக்கு நடுவே தெரிந்தது. மயில்வாணனின் மாமா அவனைத் தேடிக்கொண்டு ஏதோ சொல்லுவதற்கு அங்கு வந்தார்.

"ஆகாயத்தையே பார்த்துக்கொண்டு இருக்கிருயே அங்கே என்னப்பா பார்க்கிருய்?" என்று கேட்டுக் கொண்டே வந்தார்.

"சவுக்கு மரங்களுக்கிடையே சந்தன நிலாவைப் பார்க்கிருர்!" என்ற பெண் குரல் கேட்டு இருவரும்

**1952-ல்**

ரூ 15-விலையில் சர்க்கார் வெளியிட்ட ஒரு நூலின் பிரதிகள்

2284

**1955-ஏப்ரல் வரை**

விலை-15 ரூபாய் வீதம் விற்பனையான புத்தகங்கள்

183

**1955-ஏப்ரலில்**

15-ரூபாய் விலை என்றிருப்பது 5-ரூபாயாகக் குறைக்கப்பட்டது.

**1956-ஏப்ரலில்**

5 ரூபாய் விலை என்றிருப்பது 3 ரூபாய் 2ரூபாய்-எனக்குறைக்கப்பட்டது.

இதன் மூலம் விற்பனையான புத்தகங்கள்

326

மீதியிருக்கும் புத்தகங்கள் விற்பனையானதாகக் காணும்! விலையைக் குறைத்தார்களா; இலவசமாக வினியோகித்தார்களா? இல்லை; இல்லை! மீதியிருந்த

1776

பிரதிகளை வீணை காகிதமாக விற்ருர்கள்!எத்தனை ரூபாய்க்கு?

778 ரூபாய்க்கு

| | |
|---|---|
| புத்தகங்களின் மொத்த அடக்கம் — | ரூ. 34260 |
| புத்தகங்கள் விற்று வந்த பணம் | ரூ. 5153 |
| வந்த நட்டம் | 29,107 |

தொட்டதெல்லாம் இந்த ஆட்சியில் நட்டம்; தொடர்ந்து அவர்கள் அடிக்கலாமா கொட்டம்?

திரும்பினர். சந்தனநிலா அங்கே வந்து நின்ருள். அவள் முகத்தில் கோபம் கொந்தளித்தது.

"இன்று காலையில் விமானத்தில் வந்தேன். என்னை ஏமாற்றி விட்டதாக நம்பியிருந்தீர்கள்."

"என்னை மன்னித்துவிடு சந்தனு! உன்னை நான் ஏமாற்ற வில்லை. என் தாயையும் தங்கைகளையும் ஏமாற்ருமல் இருக்கவே இந்தத் திருமணத்துக்குச் சம்மதித்தேன்!"

"எனக்குத் துரோகம் செய்யச் சம்மதித்து விட்டீர்கள்!"

"உன்னேடு நான் தவருன தொடர்பு கொள்ளவில்லை—நம்மிடையே நட்பு வளர்ந்து—இரண்டு ஆண்களுக்கிடையே இருந்த நட்புத்தான் நம் இருவரிடமும் காதலாக இருந்தது. தவருக உன்னிடம் பழகவில்லை என்பதை நீயே உணர்வாய்!"

"நட்பைக் கொலைசெய்வது நற்பண்பா?"

"கொலை வேறு—தியாகம் வேறு!"

"தியாகம் செய்ய வில்லை! மூன்று லட்சருபாய்ச் சொத்துக்கு விற்று விட்டதாகச் சொல்லுங்கள்!"

"என் திருமணத்தை நிறுத்துவதற்குத்தானே இங்கு வந்தாய்"

"நான் விரும்பினல் உங்கள் திருமணத்தைத் தடுக்க முடியும்!"

"காதலித்துக் கைவிட்டு விட்டு வந்த பெண் கடல் தாண்டி ஓடி வந்து கல்யாணத்தைக் கலைக்கப் பார்க்குதேன்னு கலங்குருன் மயில்வாணன்!" என்று சொல்லி விட்டு அவன் மாமா சிரித்தார்!

"பசிவந்திடப் பத்தும் பறந்துபோம் என்பது பழைய மொழி! பணம் வந்திடப் பத்தும் பறந்து போம் என்பது புதுமொழி!" என்று சொல்லிவிட்டுச் சந்தன நிலா சிரித்தாள்!

"நாளைக்கு எனக்குத் திருமணமாகப் போகிறது கலைவாணியோடு! மாமா! அந்தக் கலைவாணிதான்—என் சந்தன நிலா—திருச்சி மார்க்கபந்துவின் தத்துப் பெண்—மலாயா மோகன சுந்தரத்தின் இறந்துபோய் விட்ட முதல் தாரத்துக்குப் பிறந்த பெண்! இதை நீங்கள் மறைக்கலாம் மாமா! ஆனல் திருச்சி மார்க்க பந்து மறைக்கவில்லை! அதோ அவரே வருகிருர் கேட்டுப் பாருங்கள்" என்ருன் சிரித்துக்கொண்டே மயில்வாணன்!

"மயில்வாணன் காதல் மனத்தைச் சோதிக்க இது வரையில் இதை இரகசியமாகவே வைத்திருக்கவேண்டும்னு சந்தனநிலா கேட்டுக்கிட்டதை நான் காப்பாத்தினேன்!" என்ருர் மாமா.

சந்தனநிலாவின் வளர்ப்புத்தந்தை சிறிய தந்தை திருச்சி மார்க்கபந்து-அங்கே வந்தவர் மயில்வாணனைப் பார்த்து "மாப்பிள்ளை என்னைத் திருச்சியில் வந்து சந்தித்ததையும் இதுவரையில் அவர் விருப்பப்படியே நான் யாரிடமும் சொல்லவில்லை!,' என்ருர்.

சந்தனநிலாவும் மயில்வாணனின் மாமாவும் ஒருவரை ஒருவர் பார்த்து விழித்தனர்.

இப்போது சவுக்குமரங்களுக்குமேலே சந்தனநிலா வானத்தில் எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தது.

* * *

1951-ல் உணவு இறக்குமதி கண்டிப்பாக நிறுத்தப்படும்.

— பண்டித நேரு

1951-ல் நிறுத்தப்பட்டதா; இல்லை!

இப்போதாவது நிறுத்தப்பட்டதா?

நிறுத்தா விட்டாலும், குறைக்கவாவது முடிந்ததா?

**இல்லை!**

மாருக 1958—59-ல் இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள்,

40,62,34,000 டன்
(40 கோடியே 62 லட்சத்து 34 ஆயிரம் டன்)

கூறுவது நாமல்ல; காங்கிரஸ் கட்சியே நடத்துகின்ற பத்திரிகையான

**ஏ. ஐ. சீ. சீ. எக்னமிக் ரேவின்யூ ஆகும்.**

**ஒப்பியநை செய்ய முடியவில்லை**

**ஓட்டை மட்டும் கேட்கலாமா?**